அணைந்த ஜோதி

27 12

15 ஜூலை, 1942.

AINI

GOLDEN OPINIONS

From Rao Saheb Late T. Ramakrishna Pillai Avl., B.A., F.M.U., F.R.H.S., Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "Ananda Bodhini" the Tamil monthly published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the Journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the Journal have my best wishes for the success of their undertaking.

Madras, 28th Nov. 1915.
THOTTAKADU HOUSE. } (Sd.) T. RAMAKRISHNA PILLAY.

From Rao Bahadur A. C. Pranatartihara Iyer Esq., B.A., I.S.O., Retired Inspector of Schools, and Registrar of Books, Nungambakkam.

I have read several numbers of "**Ananda Bodhini**." It is conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM,
Madras, 5th Dec. 1915. } (Sd.) A. C. PRANATARTIHARA IYER.

We have received the current number of the Tamil monthly "**Ananda Bodhini**," containing a variety of information on several subjects of every day importance. The special feature of the monthly is that a separate section is set apart for giving advice to women either in the form of abstract statements, or small stories containing moral lessons.—*Hindu 22-9-15.*

Dear Sir,

Your Tamil monthly entitled "**ANANDA BODHINI**"............................is written in ***easy, clear*** and ***readable*** style, ***well-suited, particularly***, to ***ladies*** who take a liking to it on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their characters. That such a monthly should be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt within the short compass of the monthly are such that they deserve to be ***read*** and ***re-read*** from the view point to quality in contradistinction from style and rhetoric, with a select few of our readers seem to yearn for, as is evident from the pages of the current number *i.e.* pages 288 and 289. A majority of the subscribers now on the rolls will be at one with me when I say that the style now adopted would conduce to the well-being and uninterrupted continuances of the monthly, since it is being and has to be read by both sexes. ... ... It is very much to be envied that there should be over 10000 subscribers, on the rolls which no other monthly of the kind is able to secure, or has ever before secured since inception. I wish the monthly all success.

Trivandrum,
21-1-17. } A. V. SUBRAMANIA AIYAR,
F. N. S. A. (Lon.), F.G.I. (Birm.)

ஆனந்தபோதினி

27-ம் வருடத்திய விஷய அட்டவணை.

விஷயங்கள்		பக்கங்கள்
கடவுள் வணக்கம்	...	1,65,129,193,257,321,385, 449,513,577,641,705
அரும்பொருள் விளக்கம்	...	2,66,130,194,258,322,386, 450,514,578,642,706
தலை அங்கம்		
சென்ற காலமும் எதிர் காலமும்	...	3
தமிழில் இசை யில்லையா	...	67
தமிழ்ப் பாட்டு வளர்ச்சிக்கு எதிர்ப்பு	...	131
உலக நெருக்கடிக்கு உற்ற காரணம்	...	195
பெண்ணுரிமைக்கு கல்வி அவசியம்	...	259
அஞ்ஞானத்தின் ஆதிக்கம்	...	323
தமிழ் இசை வளர்ச்சியைத் தடுக்க சதி	...	387
அடிமை புத்தி அகல வேண்டும்	...	451
நெருக்கடியிலும் சிற பேதமா ?	...	515
வருக புத்தாண்டு	...	579
" தவறு செய்யாதீர்கள் !"	...	643
பலதார மணம் அவசியமா ?	...	707
பாட்டு		
புத்தாண்டு வாழ்த்துப்பாக்கள்	...	7,70,136
வந்தேமாதரம்	...	36
தமிழ்த்தாய்த் திருத்தசாங்கம்	...	145
தீபாவளிப் பிரார்த்தனை	...	198
சங்கீதத்தின் இங்கிதம்	...	273
முழுமதி	...	329
பொங்கல் வாழ்த்து	...	396
அ[illegible]ன் ஆதம்	...	400
அவன் பாடிய பாட்டு	...	454
மஹரிஷி சேய்கள்	...	601
மூவர் தேவாரம்	...	10,74
தேவாரம் இசைத் தமிழ் நூலா?	...	236

[illegible]ங்கள்	பக்கங்கள்
[illegible]ணிக்கவாசக [illegible]கள் ...	138,199,263,330,398,457
'வாசகன்' என்ற[illegible] மாணிக்க வாசகரையா? ...	165
எலிசபெ[illegible]கல் ...	14
ஜேம்ஸ் [illegible] மாக்ஸ்வெல் ...	604
[illegible]க்குத் தெய்வர் துணை ...	17
[illegible]பெருக்கு ...	24
கற்புடை நங்கை டோரா ...	27
ஜானகிராம் ...	37
சிதையின் சிலம் ...	305
"உன்னினர் பிறர்......" ...	363
பி. வி. ரேயும் பட்டதாரிகளும் ...	42
குமிழிக்கலை குரங்கு ...	45
புதிர்க் கதிர்கள் ...	50
டெலிவிஷன் என்னும் லோக திருஷ்டி ...	116
மின்சார உற்பத்தியும் நீர் வீழ்ச்சியும் ...	337
விஞ்ஞானமா? விளையாட்டா ...	520
ஜ்யோதிஷ பல ரகஸ்யம் ...	53,123,182 205,311,369, 484,504 524 589,654,766
நூதன மார்வாடி ...	57,118,187,249,314,379 440,507,571,636,698,755
ஞானசிந்தாமணி ...	62,126,185 254,318, 383,446
"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம் ...	64,128,192,256,320,384, 448,512,576,640,704,760
பக்திமலர் ...	78
பலதிறப்பட்ட இந்தியா ...	81
நாடகத்தின் பெருமை ...	85
யுத்தவீரர்களின் மொத்த தொல்லை ...	88
பணம் பாஷாணம் ..	94
ஸிரியா தேசம் ...	97
ஜன கண்ணப்பர் ...	99
[illegible]கட் முற்றுகை ...	101
இரண்டு பாவிகள் ..	104
வைத்தியம் ..	107,247,302 693
[illegible]னேர் மோட்டி ...	109
விநாயகசதுர்த்தி விரதம் ...	113
ஆடிப்பதினெட்டு ...	174
[illegible] கொர்ச்சி ஏன்? ...	135
[illegible]ர்கண்ட பாலைக் காட்சி ...	147

விஷயங்கள்.	பக்கங்கள்.
ஜாவாவில் கவிபாசர் தாகூர் ...	152
சுழற்காற்று ...	158, 287
சோழன் கரிகாலன் ...	164
தன்பத்திற்குப்பின்? ...	168
கெட்ட பழக்கங்கள் ...	172
பாரதியப்பன் கவிதை ...	177
பாரதியும் பாஞ்சாலியும் ...	241
பாரதியின் வீரத்தமிழ் ...	277
பாரதியும் சக்தியும் ...	374
சுல்தான் மஹமத் ...	179
சிக்கிய குருவம்ச பரம்பரை ...	207
உணவை யளிக்கும் வெடியம் ...	209
பெரியோர் யாவர்? ..	212
ஜோசியர் வாக்கு ...	217
மக்களுக்கு...... ...	219
உன் 'குட் கேல்' ...	221
பெண் உலகு ..	223
உடைந்த உள்ளம் ...	232
அவைக்கட்டி ...	234
குழந்தைகள் கூட்டம் ...	237
கடவுளை வழிபடு ...	270
நாவிகளும் விஞ்ஞானமும் ...	274
குலைந்த குடும்பம் ...	282
முடியுடை மூவேந்தர் கொடி ...	285
அம்மானை ..	295
தங்கக் கடிகாரம் ...	299
புலவருக்கு விசிறின புரவலன் ...	309
பசிப்பிணி ...	313
பௌதிக நூல் ...	326
வயிறு வளர்த்தல் ...	327,419
வயிற்றுப்பாடு ...	689
பேழையின் நெஞ்சம் ...	341
நான் யார்? ...	345
நவா லாவெலிரி ...	348
க்ஷயரோகமும் தவிர்க்கும் முறையும் ...	350
தமிழ் மரபு ...	355
எது தமிழ் மரபு? ...	360
செல்வம் நிலையல்ல ...	365
வீரத் தமிழ்த்தாய் ...	371
ஆனந்தத் தை ...	395

OFFICE OF THE [illegible] 18 JUL 1942

விஷயங்கள்		பக்கங்கள்
விளக்கன் சாதை	...	401
பண்டைத்தமிழர் நீதிமுறை	...	404
சோவியத் பிரசாரத் தலைவர் லொஸோஸ்கி	...	410
உறக்கம் கொல்லுமா?	...	413
வறுமைச் சித்திரம்	...	416
கவிஞர் கண்ட கழைக் கூத்தாட்டம்	...	421
"குன்மம்" அல்லது குடல் புண்	...	423,502,749
இளமை நிலையல்ல	...	426
தோழமை	...	429
திரித்த தமிழ்	...	437
திரித்த பழமொழி	...	506
சுதந்திர வீரம்	...	438
சில அனுபவ விநோதங்கள்	...	455 558
உலக புராணம்	...	465
சம்பாவதி	...	474
குளிரை விளைவித்தல்	...	479
கவியும் காதலும்	...	484
கோபம் ஆகாது	...	488
பொங்கலோ பொங்கல்!	...	491
இந்திர மாலையின் எழில்	...	494
கம்பர்	...	496
கம்பன் கற்பித்த சாபம்	...	566
அஹிம்சை யாருக்கு வேண்டும்?	...	500
சீனாவை ஒன்றுபடுத்திய ஒப்பற்ற வீரர்	...	518
இசையும் வசையும்	...	526
அத்தப் பருத்து	...	529
அறியாமைதானே	...	534
மங்கலக்கோயில் மர்மம்	...	537
பரிமேலழகர்	...	541
"அத்தை மகனே குமாரா!"	...	544
பிரஞ்சிந்தியா	...	551
சபரிமலை சாஸ்தா	...	560
இனிய எளிமை	...	564
பெண்ணுரிமை	...	568
தமிழில் சரம் உண்டா?	...	569
சாந்தி	...	582
அப்பிய வந்த காமன்	...	585
"நிலையில்லாத ஆசை"	...	588
ஏழையின் கண்ணீர்	...	592
மணிக்கோயில்	...	593

விஷயங்கள்		பக்கங்கள்
வள்ளியம்மையின் அதிர்ஷ்டம்	...	597
தலைவனும் தலைவியும்	...	612
அடாடா! பாபம்!	...	614
மதமும் மார்க்கமும்	...	617
ஜோதிபாய்	...	622
நமது தாய்மொழி	...	626
பெண்ணின் மூட முன்னேற்றம்	...	629
நாட்டுப்புறமும் அதன் சீர்திருத்தமும்	...	631
சித்திரபானு௵ நவக்கிரக நிராயண சுத்த ஸ்புடம்		
சித்திரைமீ "	...	639
வைகாசிமீ "	...	704
ஆனிமீ "	...	759
சகல நேயர்களுக்கு வேண்டுகோள்	...	646, 710
மகாமகோபாத்யாய சாமிநாத ஐயர் பிரிவாற்றாமை	...	647
நவ நாகரிகக் கற்பனைகள்	...	648
தமிழ் நூல் ஒன்று	...	657
தளவாய் அரியநாத முதலியார்	...	661
பிரிந்தவர் கூடினர்	...	669
விமலா	...	671
பாப உலகமே	...	675
காதல் பந்தம்	...	677
பெண்களும் அலங்காரமும்	...	681
விருந்து	...	683
ஏழ்மையின் தாழ்மை	...	686
எது தமிழ்த் தொண்டு?	...	691
ஆதவன் தோற்றம்	...	702
நாட்டு மக்களுக்கு	...	712
கஷ்டக் கடவுள்	...	714
பிறன்மனை விரும்பல் கூடாது	...	716
இந்தியா நாடா?	...	721
கட்டபொம்மு நாடகம்	...	724
வெளி நாடுகளில் வயிற்றுப்பாடு	...	731
பாரா சக்தி	...	733
இந்து மாதரும் இந்து மதமும்	...	737
எரிமலைகள்	...	740
ஷேக்ஸ்பியரின் வாழ்க்கை	...	742
மணம்	...	745
தாய் நாடு	...	750
கவிழ்ந்த படகு	...	753

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது ஆனந்தபோதினி சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப்பட்டு வந்தது. இதன் விசேஷத்தை யறிந்து நமது சந்தா நேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத் தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளிப்படுத்தப்பட்டது.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாகக் கவர்ந்து கொள்ளும்; கதை முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இன்னும் இது சரித்திர சம்பந்தமான நாவல். இதில் தேசப் பிரஷ்டமடைந்த சில உயர்குல மகுடவர்த்தனர்கள் தலைமறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக்கொள்வதும் அவற்றினின்று தப்பித்துக் கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும், சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் காட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல்கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக்கதையிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுவதேயாம்.

விலை ரூபா 2—0—0

மின்சாரமாயவன்

இது ஓர் மிக்க அபூர்வமான திருடன் சரித்திரம்; இதன் கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் திருடன் கல்வியும் மிக்க புத்தி சாமர்த்தியமும் தீரமும் உடையவன். ஆகலால் அவன் செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒவ்வொருவரும் கருதார்கள். அப்படியிருந்தும் அவன் தப்பிக்கொள்வான். இது அறிவாளிகளுக்கு மிக்க விருப்பத்தை யுண்டாக்கத்தக்கது. மனிதர் உலக அனுபவம் பெற அறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களை பலர்க்கு அளிக்கக் கூடியது. ஆதிமுதல் அந்தம்வரை மனதைக் கவர்ந்துகொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண் பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். இது நல்ல காகிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350-பக்கங்களுக்கு மேலுடையது. இதன் விலை ரூபா 1—8—0.

காதலனா? காதகனா?

'கண்டதே காதல்; கொண்டதே கோலம்' என்று மனம்போனவாறு திரிந்த சில கலாசாலைப் பெண்களின் சீர்கெட்ட வாழ்க்கையையும், போலி நவநாகரிகத்துக்கு அவர்கள் பலியாகி அடைந்த கதியையும் இக்கற்பனைக் கதை படம்பிடித்துக் காட்டுகிறது. இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி 167, மதராஸ்.

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 27 | சித்திரபானு௵ ஆனி௴ ௧உ | 1942௵ ஜூன்௴ 15உ | பகுதி 12

கடவுள் வணக்கம்.

எற்றான் மறக்கேன் எழுமைக்கும்
எம்பெரு மானையே
உற்றாய் என்றுன்னையே உள்குகின்றேன்
உணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா! புக்கொளியூர்
அவிநா சியே!
பற்றாக வாழ்வேன் பசுபதியே!
பரமேட் டியே!

எங்கேனும் போகினும் எம்பெருமானை
நினைந் தக்கால்
கொங்கே புகினுங் கூறைகொண்டு
ஆறலைப் பார் இலை
பொங்காடு அரவா! புக்கொளியூர்
அவிநா சியே!
எங்கோனே! உனைவேண்டிக் கொள்வேன்
பிறவா மையே!

காத்தாளு முனைப் பாட்டன்றி
நவிலா தெனைச்
சோத்தென்று தேவர்தொழ நின்ற
சுந்தரச் சோதியாய்
பூத்தாழ் சடையாய் புக்கொளியூர்
அவிநா சியே!
கூத்தா! உனக்குநான் ஆட்பட்ட
குற்றமுங் குற்றமே.

அரும்பொருள் விளக்கம்

(இ-ள்.) ஆன்ம நாயகனே! பரமேசுவரனே எழுபிறப்பிலும் எதனுலும் எம்பெருமானே! உனை நான் மறக்கவே மாட்டேன்; என் உள்ளத்தால் உய்த்துணர்ந்து, எனக்கு நீ தான் உற்றவன் என்று கருதி உன்னையே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்; ஆதலால், புற்றிலிருந்து எழுந்து ஆடும் பாம்பை ஆபரணமாகப் பூண்டுள்ள பரமசிவனே! நான் திருப்புக்கொளியூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள அவிநாசிநாதரைப் பற்றுக்கோடாகக் கொண்டு நேசித்து வாழ்வேன். (எ-று.)

இம்மையிலும் அம்மையிலும் எங்கும் உயிர்களுக்கு உற்றவனு யிருப்பவன் இறைவ னொருவனே என்னும் உண்மையை, 'உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன், உணர்ந்து உள்ளத்தால்' என்ற அடியில் வெகு தெளிவாக எடுத்துக்காட்டி யிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. (1)

(இ-ள்.) பூரித்து ஆடும் அரவத்தை ஆபரணமாகப் பூண்ட ருத்திர மூர்த்தியே! திருப்புக்கொளியூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள அவிநாசி நாதரே! என் அரசனே! எவ்விடத்துக்குப் போனாலும் எம்பெருமானே! உன்னைச் சிந்திக்கும்போது, கொங்குநாட்டில் புகுந்தாலும் கூறை கொண்டு வழிப்பறி தொண்ணை யடிப்பார் யாருமில்லை. ஆதலால், எனக்குப் பிறவாமை என்னும் பெரும் பேற்றை அளிக்க வேண்டுமென்று உன்னை மிகவும் தாழ்மையாக வேண்டிக்கொள்ளுகிறேன். (எ-று.)

எல்லாம் வல்ல ஆண்டவனைத் தியானித்து வந்தால் இவ்வுலகில் யாதொரு இடையூறும் நேராது என்பதை, 'எங்கேனும்......ஆறு அலைப்பார் இலை' என்ற அடியால் உறுதிப்படுத்துகிறார். (2)

(இ-ள்.) நடராஜப் பெருமானே! போற்றி என்று தோத்திரஞ் செய்து தேவர்கள் தொழுது நிற்க, சுந்தரச் சோதியே! மலரணிந்த சடாதாரியே! திருப்புக்கொளியூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள அவிநாசிநாதரே! என்னுடைய நாக்கு உன்னைப் பாடுவதைத் தவிர வேறொன்றைச் சொல்லாது. உனக்கு நான் ஆட்பட்ட குற்றம் குற்றமே. (எ-று.)

ஆண்டவனுக்கு ஆட்பட்டதனால், குற்றமென்ன இருக்கிறது; முக்திப் பேறே கிடைக்கும் என்று மற்ற மக்களுக்கு உபதேசிக்கிறார். (3)

ஆனந்தபோதினி

பல தார மணம் அவசியமா?

"ஒவ்வொரு தேசத்திலுமுள்ள கன்ன பாரம்பரையான வரலாறுகளைத்தும், திருமணம் என்பதை அறியப்படாத ஒரு காலத்தையும், பின்னர், வகையறை ஏற்படுத்தி மண முறையை வகுத்த அறிஞ ரொருவரையும் குறிப்பிடுவதாகவே இருக்கின்றன" என்று மக்லெனன் (Mclennan) என்னும் மேனாட்டு அறிஞர் தாம் எழுதிய 'பண்டைக்காலச் சரித்திர ஆராய்ச்சி' (Studies in ancient history) என்ற நூலில் கூறியிருக்கும் மொழி இந்த மண முறையில் மாறுதல் வேண்டுபவர்கள் கவனிக்கத்தக்க தொன்றாகும். எகிப்து நாட்டில் மேனஸ் (Menas) என்னும் பெரியாரும் கிரீஸ் தேசத்தில் சிக்ராப்ஸ் என்னும் அறிஞரும், சீனாவின் போன்ஹி என்னும் அரசர் கோவும் திருமண முறையை மக்களுக்கு வகுத்துக் கொடுத்தனர். அது போலவே தான், நம் தமிழ்நாட்டிலும் ஒரு சான்றோர் தோன்றி திருமண முறையை வகுத்துக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், இப் பெரியார்க ளெல்லாம் தாங்கள் வசித்த காலதேச வர்த்தமானத்தை யநுசரித்தே விவாக வைபவ முறையை வகுத்திருக்கவேண்டும் என்பதை நம் மனதில் இருத்திக் கொள்ளவேண்டும். அப்போது தான், இத் திருமண முறை காலநிலைக்கேற்ப, மக்கள் மனோபாவத்திற்கேற்ப அவ்வப்போது மாறுதலடைந்து வரக் கூடியது என்பதை ஒப்புக்கொள்ள முடியும்.

உலக வாழ்க்கையாகிய நீண்ட பிரயாணத்தில் மனமொத்த ஓர் ஆடவனும் பெண்ணும் கூடிக் கைகோர்த்து நடந்து ஒருவர்க் கொருவர் துணையாகப் பல வகையிலும் இருந்து, தாங்கள் அடையக்கூடிய லட்சியத்தை எய்துவதற்குக் கருவியா யிருப்பதே திருமண மாகும். எனவே, இத் திருமணம் மனித வாழ்க்கையிலேயே முக்கியமான தொன்றென்பதில் சந்தேகமென்ன?

இவ்விதம் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்று இணைக்கப்பட்ட திருமணத்தில் இடைக்காலத்தில் சில கோளாறுகள் ஏற்பட்டன. அக்கோளாறுகளில் ஒன்று பல தார மணம் என்பது. ஆண்மகனொருவன் ஒரு பெண்ணை மனைவியாகப் பெற்றிருக்கையிலேயே வேறு மங்கையையோ, மங்கையர்களையோ கலியாணஞ் செய்து கொள்ளலாம் என்ற மதத்தின் பெயரால் அநுமதிக்கப்பட்டு, அது வழக்கத்திலும் இருந்து வந்திருக்கிறது. சுமார் இருபது, முப்பது வருஷங்களுக்கு முன்கூட நம் மூதாதையர் இரண்டு மூன்று மனைவியரைக் கலியாணஞ் செய்து கொண்டிருந்திருக்கின்றனர். சமீப காலத்தில் தான் இப் பலதார மணம் சிறிது சிறிதாக மறைந்து வருகிறது. என்றாலும், இன்றும் நம்மிடையே இரு மங்கையரை மனைவியாக வுடையவர்கள் பலர் இருந்து வருகின்றனர்.

பல தார மணம் முதலில் பிள்ளையில்லாக் காரணத்தால் நம் பெரியவர்களால் அநுமதிக்கப்பட்டிருக்கலாம். அல்லது, ஆண்களைக் காட்டிலும் பெண்கள் தொகை அதிகமாயிருந்தது காரணமாக ஒருவன் பல மங்கையரை விவாகஞ் செய்துகொள்ளும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். இன்னும் இதுபோன்ற பல காரணங்கள் பலரால் கூறப்பட்டு வருகின்றன.

இடைக்காலத்தில் பல தார மணம் நம் இந்து சமூகத்தில் எக்காரணத்தினாலாயினும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அறிவும் நாகரிகமும் முதிர்ந்துள்ள இக்காலத்தில் பல தார மணம் அநாகரிகமாக அறிவுடையவர்களால் கருதப்படுகிறது. இந்தியன் பினல் கோடு (1860-ம் வருஷத்து 45-வது சட்டம்) 494-வது பிரிவின்படி, விவாகமான ஆடவனொருவன் தன் மனைவி உயிரோடிருக்கையிலேயே வேறொரு பெண்ணை மணந்து கொண்டால் அது சட்டத்துக்கு விரோதமாகக் கருதப்பட்டு, ஏழு வருஷத்துக்கு அதிகப்படாமல் கடுங் காவலிலோ வெறுங் காவலிலோ வைக்கும்படியான தண்டனை விதிக்கப்படுவது மல்லாமல் அபராதமும் விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. ஆனால், இச்சட்டத்தில் இந்து மதத்தினருக்கும் இஸ்லாம் மதத்தினருக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் தங்கள் மதச்சம்பிரதாயப்படி ஒரு மனைவி உயிரோடிருக்கையிலேயே மற்றும் பல மகளிரை விவாகஞ் செய்துகொள்ளலாம் என்றிருப்பதால் எனக் காரணங் காட்டப்படுகிறது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் கிறிஸ்தவர்களுக்கும் பார்ஸிகாரர்களுக்கும் என ஏற்பட்டுள்ள மேற்படி சட்டத்தில், இந்து மகளிரையும் முகம்மதிய மங்கையரையும் கட்டுப்படுத்தியிருப்பது தான். இந்து, முஸ்லிம் பெண்மணிகள் மட்டும் ஒரே கணவனு

டன் (அவன் கூன் குரு[illegible] காரனாய், கொலை பாதகனாய் இருந்தாலும்) இருந்து வாழ வேண்டும். ஆண்களுக்கு மனைவியிருக்கும் போதே பல மங்கையரை விவாகஞ் செய்துகொள்ள உரிமையிருக்கும் போது, பெண்கள் மட்டும் ஏன் பல ஆண்களைக் கலியாணஞ் செய்துகொள்ளக்கூடாது? என்று கேட்கப்படுகிறது. இது இப்போதுள்ள நிலையில் விதண்டாவாதமாகக் காணப்பட்டாலும் நியாயமான கேள்விதானே! ஆகவே தான், ஆணுக்கொரு நீதி; பெண்ணுக்கொரு நீதி கூறும் சமூக சட்டமும் அநியாய வழக்கமும் ஒழிய வேண்டுமென்று சில காலமாக பெண்கள் சார்பில் கிளர்ச்சி நடந்து வருகிறது. பரந்த நோக்கமும் விரிந்த அறிவு முடைய பெரியோர்கள் பல தார மண ஒழிப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவளித்து வருகிறார்கள். இதன் பயனாகவே, இந்திய சட்டசபையில் விவாக சம்பந்தமான பிரச்சினை கிளப்பப் பட்டு, இந்தியன் பினல் கோடு சட்டத்தில் விவாக சம்பந்தமாகவுள்ள பிரிவுகளைத் திருத்த சில யோசனைகள் சொல்லுவதற்காக, ஸர். பி. என். ராவ் என்பார் தலைமையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டியார் இவ்வளவு காலமாக, விவாக சம்பந்தமான சட்டப் பிரிவைப் பரிசீலனை செய்து, இப்போது சில சிபார்சுகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் முக்கியமாக இந்து வைதீக முறைப்படி நடக்கும் கலியாணங்களிலும் ஒரு மனைவியைக் கொள்ளும் முறையையே வற்புறுத்தியிருக்கின்றனர். பொது மக்களிலும் பெரும்பாலார் பல தார மண முறையை ஆட்சேபிப்பதாகவே தெரிகிறது எனக் கமிட்டியார் குறிப்பிட்டிருக்கின்றனர். காலஞ்சென்ற பிரபல சட்ட நிபுணரான ஸ்ரீ. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பலதார மண முறையை ஒழிக்கச் சட்டஞ் செய்ய வேண்டுமென, மனுஸ்மிருதி முதலிய புராதன கோட்பாடுகளையும் ஆதாரமாக எடுத்துக் காட்டி வற்புறுத்தி வந்தார். ராவ் கமிட்டியார் இச்சீர்திருத்தத்தைச் சட்டமாக்குவதை அங்கீகரித்திருக்கின்றனர். இதற்காக நகல் மசோதா ஒன்றையுந் தயாரித்திருக்கின்றனர். பொதுஜன அபிப்பிராயத்தை அறிய அந்நகல் மசோதா வெளியிடப்பட்டிருக்கிறது. பொதுவாக, இதில் ஆட்சேபகரமான அம்சங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, சமூக ஊழல்களுக்குக் காரணமாகவுள்ள பழக்கங்களில் ஒன்றான பல தார மண முறையை ஒழிக்கும் இம் மசோதாவுக்கு பொதுவாக எல்லா மக்களும், சிறப்பாக சமூக சீர்திருத்த சங்கங்களும் ஆதரவளித்து, கூடிய சீக்கிரம் அது சட்டமாக வர உதவி புரிய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

[illegible]

28-வது ஆண்டின் முன்னறிக்கை.

நமது 'ஆனந்தபோதினி' மாதப் பத்திரிகைக்கு இந்த இதழோடு இருபத்தேழாவது ஆண்டு பூர்த்தியடைகிறது. ஆகவே அடுத்த சித்திரபானு வருஷம் ஆடி மீ 1உ (16-7-42) 28-வது ஆண்டு பிறக்கப்போகிறது. நம 'ஆனந்தபோதினி' பருவத்திற்கேற்ற வளர்ச்சிபெற்று, கால தேச வர்த்தமானத்துக்கிசைந்த பற்பல சிறப்பியல்புகளுடன் விளங்கி வருவதை வாசக நேயர்கள் அறிந்ததொன்றாம். தமிழ் மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் ஒரு விழிப்பையும் எழுச்சியையும் அறிவையும் உண்டாக்கித் தக்க வழி காட்டுவதே 'ஆனந்தபோதினி'யின் முதற் பெரும் நோக்கமாகும். 28-வது ஆண்டில் இன்னும் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சங்களுடன் கூடி விளங்கி 'ஆனந்தபோதினி' உங்களுக்கு பெருமகிழ்வை யூட்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். தமிழ்மொழி, சமூகம், சமயம் ஆகியவைகளின் மறுமலர்ச்சிக்கான வகையில் பல கட்டுரைகளையும் சிறுகதைகளையும் தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் பலர் 'ஆனந்தபோதினி' யில் எழுதி வருவார்களென்று கூற விரும்புகிறோம்.

நாம் 'ஆனந்தபோதினி'யை முதன் முதலாகத் தொடங்கிய காலத்தில், பத்திரிகை உலகம் சம்பந்தப்பட்ட மட்டில் எவ்வித நிலைமை இருந்து வந்ததோ அதே நிலைமைதான் இப்போதும் இருந்து வருகிறது என்பதை உலகப் போக்கை உய்த்துணர்ந்து வரும் பெரியோர்கள் அறிவர். நாம் 'ஆனந்தபோதினி' தொடங்கிய காலத்தில், ஐரோப்பிய மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தது. இப்போதும் ஐரோப்பிய மகாயுத்தம் ஏற்பட்டு வெகு மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது. 27-வருஷங்களுக்கு முன் தமிழ்ப் பத்திரிகை உலகம் ஆரம்ப தசையிலிருந்ததாலும் பத்திரிகை நடத்துவதற்குப் போதிய வசதிகள் இல்லாதிருந்து வந்தமையாலும் சாதாரணமாகப் பத்திரிகைகளை வெளியிடுவதென்பது பகீரதப் பிரயத்தனமாக இருந்து வந்தது. அப்படி பத்திரிகை வெளியிடத் துணிந்தாலும், சாதாரண ஏழைகள் முதல் அனைவரும் வாங்கத்தக்க வகையில் குறைந்த சந்தா விகிதம் ஏற்படுத்தாது அதிக சந்தா வைத்தே நடத்தத் தொடங்கினர் பலர். அவ்விதஞ் செய்தும் பல பத்திரிகைகள் காலாகாலத்தில் ஒழுங்காக வெளிவராமலும், நீடித்து நடத்த முடியாமலும் போயிற்று. ஆனால், நாம் இறைவன் திருவருளொன்றையே நம்பி, தமிழ் மக்களுக்கு நம்மாலான சேவையைச் செய்ய வேண்டுமென்ற ஒரு பெரும் நோக்கோடேயே குறைந்த சந்தா விகிதம் ஏற்படுத்தியும், ஒழுங்காகவும் இந்த இருபத்தேழு வருடகாலமாக நடத்தி வருகிறோம். இன்று பத்திரிகையுலகம் முன்னைப்போலில்லாமல் பல வகையிலும் வளர்ச்சியடைந்து போதிய சௌகரியமும் ஏற்பட்டிருக்கிறதாயினும், காகித விலையைப் பொறுத்த வரையில் 27 வருஷங்களுக்கு முன்னிருந்த நிலையைவிட மிகக் கேவலமான நிலைமையிலேயே இருந்து வருகிறது என்று கூறின் மிகையாகாது. சென்ற மகா யுத்தத்தைப் போலவே, இப்போது நடைபெறும் ஐரோப்பிய யுத்தம் காரணமாக, பத்திரிகை, புத்தகம் [illegible] அச்சடிப்பதற்கும் [illegible] விலை [illegible]ரன் விலையைப்போல் அகவிலையாய் விட்டிருக்கிறது. அத்துடன் காகி[illegible]துக்குப் பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறது. இதன் பயனாக, பத்திரிகை உ[illegible]களுக்கு மிகவும் நஷ்ட மேற்பட்டிருக்கிறது. பல பத்திரிகைகள் நின்றுபோய் விட்டன. மற்றும் பல பத்திரிகைகள் சந்தாத் தொகையையும், தனிப் பிரதி விலையையும் அதிகமாக்கி விட்டிருக்கின்றன. சர்க்காரும் இன்ன அளவுள்ள பத்திரிகை இத்தனை பக்கங்கள் கொண்டது இவ்வளவு விலைக்கு விற்க வேண்டுமென்று ஒரு புது உத்திரவு மூலம் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்நிலையிலும் நாம் சந்தாத் தொகையை அதிகப்படுத்தாது எப்போதும் போலவே மிகக் குறைந்த விகிதமாகிய ஒரு ரூபாயைச் சந்தாத் தொகையாக வைத்திருக்கிறோம். இதிலிருந்து நாம் மேற்குறித்த உயர்ந்த சேவா லட்சியத்தோடு 'ஆனந்தபோதினி' பத்திரிகையை நடத்தி வருகிறோமேயொழிய, வியாபார முறையில் லாபம் சம்பாதிக்க நடத்தவில்லை என்று அன்பர்கள் அறிந்துகொள்ளலாம். ஆதலால், சந்தா நேயர்கள் நமது உயர்ந்த லட்சியம் நிறைவேறுவதற்குப் போதிய ஆதரவளித்து உதவி புரிந்து ஊக்கமும் உற்சாகமும் அளிப்பார்கள் என நம்புகிறோம். அவர்கள் தங்கள் புது வருஷச் சந்தாத் தொகையை கட்டித் தங்கள் சந்தா எண்ணைப் புதுப்பித்துக் கொள்வதோடு, தங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் பெருவாரியாகச் சந்தாதாரர்களாகச் சேர்த்து உதவி யளிக்குமாறு விநயமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்பர்கள் 'ஆனந்தபோதினி'யின் இருபத்தெட்டாவது ஆண்டு சந்தாத் தொகையை நாளது சித்திரபானு வருஷம் ஆனி மீ 30உ (14-7-42) க்குள் மணியார்டர் மூலமாகவோ, நேரிலோ எங்கட்குக் கிடைக்குமாறு செய்ய வேண்டுகிறோம். அதுவன்றி, சந்தாத் தொகையின் பொருட்டு வி. பி. பி. அனுப்புவதால், தபால் செலவு 4 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா ஆக 6 அணா அதிகச் செலவும், சஞ்சிகை வந்து சேர வீண் காலதாமதமும் ஏற்படும். ஆதலால், அன்பர்கள் அனைவரும் மேலே குறிப்பிட்ட தேதிக்குள் மணியார்டர் செய்து விடுவதுதான் உங்கட்கும், எங்கட்கும் இலாபமும் சௌகரியமும் ஆகும். வி. பி. அனுப்புவதால், இன்னொரு சங்கடமும் உண்டு. அதாவது வி. பி. பி. வந்தால் ஏழு நாட்களுக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். அதற்குமேல் வி. பி. பி.யை நிறுத்தி வைக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் நாள் 1 க்கு 2 அணா வீதம் தபால் தலை வாங்கி ஒட்டி விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். அப்படி செய்தால் கூட 10 நாட்களுக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்கமாட்டார்கள். இந்த சங்கடங்களையெல்லாம் உத்தேசிக்கும்போது எல்லாரும் சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பி ஆதரிப்பதே நன்மை என்று தோன்றுவதால் நாங்கள் வி. பி. அனுப்பும் முறையை நிறுத்தியிருக்கிறோம்.

குறிப்பு:—முன்பணம் அனுப்புவோர் பழைய சந்தாதாரர்களாயிருந்தால், மணியார்டர் கூபனில் தங்களுடைய சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு "28-வது ஆண்டுக்கு" பழைய சந்தாதாரென விவரம் எழுதவேண்டும். புதிய சந்தாதாரர்கள் "புதிய ஆண்டுக்கு" புதிய சந்தாதார் என்று முழு விலாசமும் விவரமும் எழுதவேண்டும்.

நாட்டு மக்களிற் பெரும்பாலோர் உழுந் தொழிலைச் செய்பவர்கள். தொழிற் சிறப்பு மிகுதியும் பொருந்தியுள்ள நாட்டு மக்கள் பயிரிலுள்ள களைகளைப் போக்குகிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் இடத்திலே குடில் பொருந்தியுள்ள களைகளைப் போக்கிக்கொண்டு தூய்மை பெறுவது அவர் தம் முதல் கடனாகும்.

மனிதன் ஒவ்வொருவனும் தான் தன் வாழ்க்கையை நிர்வகிக்குங் காலத்திலே முதன்மையாகக் கடைப்பிடிக்க வேண்டியது சிக்கனம்.

சிக்கனமும் அகத்தியமும்

சிக்கனமென்பது ஈயா லோபிகள் தம் செல்வத்தை வெளிவிடாமல் அடக்கிக் காத்தற் பொருட்டுக் கையாளும் சாதனமல்ல. அஃது குடும்ப நிர்வாகத்துக்கு அடிப்படையாக வேண்டப் படுவதேயன்றி உலோபமன்று. சிக்கனம் என்பதைச் செட்டு எனக் கூறலுமாம். செட்டி (Economist) என்பவன் குடும்பத்தைச் சரியான வழியில் நிர்வகிக்கும் ஒருவன். மக்கள் சமுதாயத்தின் செல்வாக்கு உயர, மேற் குறிக்கப்பட்ட நிர்வாகம் மிக மிக அத்தியாவசியமாக வேண்டற்பாலது. ஏனெனில் ஒரு சமுதாயம் (Nation) பல குடும்பங்களா லாக்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்தின் சீருயர்வும், சீர்கேடும் அச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், தளர்ச்சிக்கும் முறையே காரணமாகின்றன. மன நிம்மதியும் மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பங்களாலாக்கப்பட்ட சமுதாயம் உயர்ந்ததாகவும் போற்றக் கூடியதாகவும் இருக்குமென்பதில் ஐயம் உண்டோ?

ஏழ்மை நிலையில் மகிழ்ச்சியின்மை

உட்கொள்ளப் போதுமான உணவின்றியும் உடுத்துக்கொள்ளப் போதுமான உடையின்றியும் ஒரு குடும்பத்தால் மகிழ்ச்சியாய் வாழ முடியாது. மேற்கண்ட மிக்க அவசியம் வாய்ந்த பொருள்களில்லாக் காலத்தும் மன நிம்மதி உண்டு என எண்ணுவது அறிவிலிகள் செயலாகும். சில சமயங்களில் குருட்டுத்தனம் வாய்ந்த, குறுகிய நோக்கங்கள் நிரம்பிய சிலர் "ஏழை மக்களே! நீங்கள் உண்மையில ஏழைகள் அல்ல. நீங்கள் 'போதுமென்னும் மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை அறிய வேண்டும். உங்களுக்குச் சொந்தமானது ஒன்றுமில்லையென வருந்தவேண்டாம். பசியும், குளிரும், வெயிலும் உங்களை என்ன செய்யும்" என்று அளக்க ஆரம்பித்து விடுகின்றனர். இதைவிட மனிதத்தன்மை நியாயம் முதலியன ஒரு சிறிது மற்ற வார்த்தைக் கற்பிக்க முடியுமா? மேலும் ஏழை மக்களை எச்சரிக்கிறேன் அவ்வியாயக் காரரின் பேச்சை நம்பி மோசம் போக வேண்டாமென்று. அவ்வாறு அவர்கள் ஏமாந்தார்களானால் இன்பம் என்றால் என்னவென்பதை அறியக் கூடாமல் துன்பம் நிறைந்த அடிமைகளாய்த்தான் வாழ வேண்டிவரும்.

ஏழைகளின் ஏமாற்றம்

செல்வர்க்கும் தரித்திரர்க்கும், உயர்ந்தோர்க்கும் தாழ்ந்தோர்க்கும் உள்ள பேதங்களை உள்ளவாறே உரைப்பது கடினம். ஆயினும் ஏழை மக்கள் முயன்று வேலை செய்தால் தான் வாழ முடியும் என்பது கண்கூடு. அம்மாதிரி கடினமாக வேலை செய்யும் மக்கள் தான் மக்கள் சமுதாயத்திலே பெரும்பான்மைப் பகுதியை அடைத்திருக்கிறார்கள்: செல்வர்களின் நன்மைக்கும் இன்பத்துக்கும் [illegible] ஏமாந்தும் போகின்றார்கள். அவ்வாறு உழைப்பதால் அவர்கள் அடையும் பயன் என்னவெனக் கவனித்தால் பசியும் இகழ்வுமே! அம்மம்ம! என்ன கோரம்! என்ன ஏமாற்றம்!

சமுதாய உயர்வும் மக்களின் செல்வாக்கும்

சமுதாயத்தின் பாற்பட்ட பொதுமக்களனைவரும் (போதிய) செல்வமுடையவர்களாய், அச் செல்வத்தை உபயோகிக்கச் சரியான வழிவகை அறிந்தவர்களாய், ஏமாற்ற மடையாதவர்களாய், ஒற்றுமையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். அப்போது தான் சமுதாயம் உச்ச நிலை யடையும்; பிறரும் போற்றுவார்கள். ஒத்துழைப்பாக வேத்தியலும் (Government) நீதி பொருந்தியதாய் நடக்கவேண்டும். முகத்தலளவை, நீட்டலளவை முதலான அளவைகளும், நியாயம் பொருந்திய சட்டங்களும், (குடிகளால்) தாங்கத்தக்க வரிகளும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு அடிகோலும் என்பது திண்ணம்.

பெரிய குடும்பங்கள்.

மக்கள் தத்தம் குடும்பங்களை நிர்வகிக்கும் காலத்திலே அவர்தம் உழைப்புகளெல்லாம் சும்மா யிருப்பதில்லை. சிலர் அதிகமாக உழைக்கவேண்டியிருத்தலின் காரணம். அவர்கள் நிர்வகிக்கும் குடும்பங்கள் பெரியவையாயிருத்தலே. அவர்கள் கட்டாயம் பாடுபட்டே தீரவேண்டும். ஆனால் அவர்களுடைய உழைப்பு வீணாவதில்லை. ஏனெனில் அவர்களுக்குப் பின் அவர்தம் மக்கள் அக் குடும்பங்களின் நிர்வாகங்களை ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள். முன்பு உழைத்த பெற்றோர் சரியானபடி (சந்தியாக) பலனடைகிறார்கள். அதனாலன்றோ ஒரு ஆங்கிலப் பேராசிரியர் "ஒரு அரக்கனுக்கு அம்பு இன் எவ்வளவு அத்தியாவசியமோ அவ்வாறே மக்களும் பெற்றோர்களுக்கு அவசியமாகின்றனர். ஒரு மனிதன் அவ்வம்புகளுக்கொப்பான குழந்தைகளை அதிகமாக அடைந்துவிட்டால் அவன் பாக்கியசாலியாகின்றான்" என்றார். (*"Little Children are as arrows in the hands of the giant, and blessed is the man that hath his quiver full of them."*)

ஒரு மனிதன் தன் குழந்தையால் பலனடைய விரும்பினால் முதலில் கல்வி (அக் குழந்தைக்கு) போதிக்கப்படல் வேண்டும். கல்வியின் பிரதம பாகம் தொழிற் கல்வியே. தொழிற் கல்விதான முக்கியமானது. ஒரு தந்தை தன் பிற்கால வாழ்வில் பலனடைய வேண்டுமானால் தொழிற் கல்வி தான் முதலில் போதிக்கப்படல்வேண்டும். புத்தகக் கல்வி அதற்குப் பின் தான். படிப்பு எதற்கும் பொதுவாக, ஆனால் தவறாக (வருந்தத்தக்க முறையில் நாம் கொள்வது யாதெனில் புத்தகப் படிப்புதான். புத்தகப் படிப்புக்காக நாம் ஏராளமாகச் செலவு செய்கிறோம்; எண்ணுதல் நிர்நோக்குகளுடன் ஆவலாய் இருக்கிறோம். ஆனால் எல்லோரும் வெற்றிபெற முடியுமா? அதைப் படித்துவிட்டு ஓட்டாண்டியானவர் எத்தனை பேர்? மேற்கூறப்பட்டவைகளிலிருந்து தொழிற்கல்வி முதன்மையாகவும், மிகுதியாகவும், கட்டாயமாகவும் வேண்டற்பாலதெனத் தெரிகிறது.

(*William Cobbett* என்னும் ஆங்கிலப் பேராசிரியர் எழுதிய '*Advice to Villagers*' என்னும் கட்டுரையைத் தழுவியது.)

ஹரிஹரன் ஓர் உயர் குடும்பத்தில் பிறந்தான். பிதா செல்வவந்தர். ஆகவே அவன் மிகவும் செல்வமாய் வளர்க்கப்பட்டான். ஊரில் ஒருவரும் அவனைக் கீழே விடாது தூக்கி வைத்துக் கொண்டிருப்பர். கொஞ்ச காலம் சென்றது. எதிர்பாராத விதமாய் அவன் பிதா கடன் பட்டார். நாணயத்தைக் காப்பாற்றும் பொருட்டு வீடு வாசலை விற்றுக் கடன் அடைத்தார். சொத்து மீதி இல்லை! அவர் சொற்ப சம்பளத்தில் ஆனால் கௌரவமான வேலையில் இருந்தார். குடும்பம் அதனால் தான் நடந்து வந்தது.

ஹரிஹரனுக்குப் பதினேழு வயதாகும் போது தான் மேற்படி கடன் உண்டாயதெனலாம். அவ் வமயத்தில் ஹரிஹரன் ஓர் நாள் கன்னிருளில் சாலை வழியே சென்று கொண்டிருந்தான். அப்போது ஓர் உருவம் அவனைப் பின் தொடர்ந்தது. அவன் அது யாரென்று வினவினன். பதில் இல்லை. கன்னிருளானதால், பைசாசமோ வென்றப் பயந்து ஓடினன். கூடவே, உருவமும் பின் தொடர்ந்தது. வெகு தூரம் ஓடினபின் அவனுக்குக் கால் தளர்ந்தது. கீழே விழுந்து விட்டான் அவனை உருவம் தூக்கி எடுத்து, "பயப்படாதே!" என்றது. பின்பு தான் ஹரிஹரனுக்கு சிறிது தைரியம் ஏற்பட்டு, "நீ யார்?" என்று கேட்டான். "நான் தான் கஷ்டப் பிசாசு. உன்னைப் பிடித்துக் கொள்ளப் போகிறேன். இன்னும் வெகு காலம் கஷ்டப்பட வேண்டிவரும்" என்று பதில் வந்தது. "ஹா!" என்று மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

வெகு நேரம் கழிந்து மூர்ச்சை தெளிந்து விழித்துப் பார்த்தான். உருவத்தைக் காணோம். சூரியன் புறப்பட்டிருந்தது. வீடடைந்தான். சமாசாரத்தை ஒருவருக்கும் தெரிவிக்கவில்லை. அதன் பின்பு தான் கடன் வந்தது. கொஞ்சநாள் கழிந்ததும், ஒரு மாலையில் அவன் தந்தை ஆபீஸிலிருந்து மன வருத்தத்துடன் வீடு வந்தார். ஏனெனில் அவர் வேலை செய்து வந்த கம்பெனியில் சொற்ப நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அதற்காக நஷ்ட ஈடு செய்யும் பொருட்டு வேலையிலிருந்து வெகு பேரை நீக்கி விட்டதுடன், வேலை செய்த மாதத்துக்கும் பாதி சம்பளம் மாத்திரம் கொடுத்தான். நன்றி கெட்ட அம் முதலாளி உண்மையாய் வேலை பார்ப்பவர்களுக்கும் இப்படிச் செய்யலாமா? மறு வருடத்தில் நஷ்டத்தைச் சரிப்படுத்திக் கொள்ளலாகாதா? என்னே காலத்தின் கோலம்!

ஹரியின் குடும்பம் தத்தளித்தது. அவனுடைய தந்தையும் வருத்தத்தால் நோய் வாய்ப்பட்டு, அல்பாயுளாக இறந்தார். குடும்ப பாரம், ஹரியின் மேல் வந்தது. என் செய்வான் சிறியோன்? தாய் சகோதர சகோதரிகளைக் காக்க வேண்டி வந்தது. சொற்ப சம்பளத்தில், அவ் ஊரிலிருந்த ஓர் உத்தம கனவான், அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அவனிடம் பிரியமாகவும் இருந்தார். இருந்தும் என்ன பயன்? வேலை கடுமையாகவிருந்தது. சம்பளமோ குறைவு. தலைவிதியை நினைந்து வேலையைச் செய்து வந்தான்.

போதாக் குறைக்கு, [illegible] வனுக்கு வேண்டிய சாமான்களும் விலை ஏற்றமாக இருந்தது. தன் வயிற்றை ஒடுக்கி தன் குடும்பத்தைக் காப்பாற்றினன். மேலும் அவன் எவ்வளவு மறுத்தும் கேட்காமல் அவனுக்குக் கல்யாணம் வேறு செய்தனர். ஏழை வீட்டுப் பெண் ஆனதால், மணப் பெண்ணிடமிருந்து எவ்வித வரதட்சிணையும் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக குடும்பத்தில் இன்னொரு ஆள் சேர்ந்தது தான் மிச்சம். வேறு நல்ல வேலைக்கு எவ்வளவோ முயற்சித்தான். கஷ்டப் பிசாசு அவனை விட வில்லை. இவ்விதம் நான்கு வருடம் கஷ்டப்பட்டான். பின்பு ஒரு குழந்தை பிறந்தது. சகோதரர்கள் புத்திசாலிகளானதால் மேல் படிப்புகளை இலவசச் சம்பளத்தில் படித்துத் தேறினர். ஆனால் வேலை கிடைக்கவில்லை. அதனால் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் கல்யாணச் செலவுக்கு இவனே பணம் தேட வேண்டிவந்தது. ஹரியின் பாடு தான் எல்லையில்லாக் கஷ்டத்திற்குள்ளாயது.

அதனால் சமாளிக்க முடியவில்லை. பொறுமையே உருவெடுத்தாற் போல் அவன் பிறந்திருந்தும் அந்த சமயத்தில் அவனுக்கு அளவு கடந்த கஷ்டத்தினால் பொறுமை யிழந்தான். அப்பொழுது அவன் பிள்ளைக்கும் பெரிய நோய் கண்டு பிழைப்பது அரிதாகவிருந்தது. செலவுக்கோ பணம் இல்லை. பொறுமை அவனிடம் மீறியது. இவ் வுலகை அடியோடு வெறுத்தான். ஒருநாளிரவு வெறுப்புடன் உணவு உட்கொண்டு நிம்மதியில்லாது தூங்கினன்.

நள்ளிருளில், அவ் வூர் ஆற்றங்கரை மண்டபத்தை அடைந்தான். அவன் கையில் எலிப் பாஷாணம் இருந்தது. எதற்கு? தற்கொலைக்கு! வாயில் போட்டுக்கொள்ளப் போனன். ஆனால் ஏதோ நினைத்து கீழே விழுந்து விட்டான். இன்னும் சிறிது நேரங்கழித்து மறு முறை முயற்சித்தான். அப்பொழுது ஏதோ தடுப்பது போலிருந்தது. எதிரே ஓர் உருவம். பயந்து மூர்ச்சித்தான். அவ் வுருவம் அவனை அணுகி அவன் மூர்ச்சை தெளிவித்து, "நான் தான் கஷ்டக் கடவுள். நான் இனி உன்னை விட்டு விடப் போகிறேன். உனக்கு நாளையிலிருந்து நற்காலம்," என்றது. அவன் அதற்கு, "இப்பொழுது தாங்கள் சமயத்தில் உதவியதால் நான் பிழைத்தேன். இல்லாவிடில் என் கதியும் என் குடும்பத்தினர் கதியும் என்ன வாகியிருக்கும்? இவ் வண்ணம் எவ்வளவு மானிடர் கஷ்டப்படுகின்றனர்? அவர்களுக்கும் தாங்கள் உதவி புரியலாகாதா?" என்றான்.

"அப்பா! மற்றையோருக்காக நீ இரக்கப் படுவதில் மெத்த சந்தோஷம். ஆயினும் அவரவர் ஊழ்வினைப் பயனுக்கு யார் என்ன செய்வது? அவர்களின் நற்கதிக்கு ஒரு வழி தான் உண்டு. உன் வாயிலாக அதை உலகினருக்கு நான் அறிவிக்கிறேன். சிலர் இதை அறிவர். ஏனையோர் இப்பொழுது அறியட்டும். அது தான் பொறுமை. வானிடிந்து மேல் விழும் போதிலும் பொறுமை வேண்டும். வருவாய்க்கு மிஞ்சி செலவும் செய்யலாகாது. தற்செயல்கள் புரியாது தெய்வ வணக்கம் வேண்டும். குண்டு விழுந்தாலும் பொறுமை யிழக்கக் கூடாது," என்று பதிலளித்தார் கஷ்டக் கடவுள். பின்பு மறைந்தார்.

ஆனந்தக் கூத்தாடினன் ஹரிஹரன். அப்பொழுது யாரோ அவனைத் தட்டினர். சட்டென்று கண் விழித்துப் பார்த்தான். தான் கண்டது

பிறன்மனை விரும்பல் கூடாது

(க. சிதம்பரம் பிள்ளை.)

★

செய்யத்தகாத செயல்களைச் செய்வதென்றால் அறிவுடையோர்களுக்கு மனம் இசையாது. அவற்றிற்கு அவர்கள் உள்ளம் நாணங்கொள்ளும். பகுத்தறிவு படைத்த மனிதன் செய்யத்தகாத செயல்களுள் இன்னொருவன் மனைவியை இச்சிப்பதும் ஒன்று. அது மற்ற எந்தகாத செயல்களிலும் வைத்து மிகக் கொடிது மாகும்.

பிறன் மனைவியை விரும்பும் ஒருவனுக்கு இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் இன்பம் இல்லை.

இவ்வுலகத்தில் மனிதனுக்கு கிடைக்கும் இன்பங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது சிற்றின்பமே. அவ்வின்பமும் அவனுக்கு உள்ளபடி அனுபவித்தறியச் சந்தர்ப்பம் வாய்க்க வில்லையென்றால், பின் அதனால் அவனுக்கு ஒரு பயனும் இல்லையாம்.

சிற்றின்பத்தின் உயர்ந்தரமான சுவையை உள்ளபடி அனுபவித்தறியத் தகுதி வாய்ந்தவர் உள்ளன்பு நிறைந்த நாயகனும் நாயகியும் ஆவர். இன்பம் நுகரும் அச்சமயத்தில் நாயகநாயகி இருவரும் உள்ளத்தில் மற்ற எவ்வித கவலைகளையும் மறந்து சுயேச்சையாய்க் கூடிக் கலந்தாலொழிய, அதன் சரியான சுவையை அறிய முடியாது. *

பிறன் மனைவியை விரும்பும் ஒருவனுக்கு அவ்வித சந்தர்ப்பம் ஒருபோதும் வாய்ப்பது இல்லை. அவனுக்கு அவளிடத்திருந்து கிடைக்கும் இன்பத்தின் அளவைவிட மிகப் பெரிதாய்க் கிடைப்பது அச்சந்தான்.

* சிற்றின்ப சுகத்தை உயர்ந்தரமாக அனுபவிக்கும் முறை, இந்திரியத்தின் பெருமை, கிரோன் மாணிக்கம் என்பதன் காரணம் முதலிய விவரங்களை "மனிதனும் கடமைகளும்" என்னும் நூலில் 'காம இச்சை' என்ற அத்தியாயத்தில் காண்க.

விலை ரூ. 1.
கிடைக்குமிடம்: "ஆனந்தபோதினி" ஆபீஸ், சென்னை.

கனவென்று கண்டான். ஆனால் கனவு உண்மையாயிற்று. மறுநாள் அவனுக்கு ஓர் தபால் வந்தது, தன் தகப்பன் வேலைபார்த்த கம்பெனியில் மிகவும் உயர்ந்த சம்பளத்தில் வேலைக்கு உத்தரவு வந்திருந்தது. சிறிது நாளில் சகோதரர்களும் நல்ல பதவிக்கு வந்தனர். குடும்பம் மறுபடி முன்னுக்கு வந்தது. ஹரியின் குழந்தையும் பிழைத்தது

இருந்தாலும், ஹரிஹரன் தான் கண்ட கனவை எல்லோரிடமும் தினமும் கூறிவருகிறான். அவனால் எல்வளவோ பேர்கள் நன்மை அடைகிறார்கள். "பொறுமையே பூஷணம்."

என்? அவன் அவளை அனுபவிக்கப் புறப்படும் பொழுதே யார் கண்டு கொள்கிறார்களோ, அதனால் என்ன நேர்ந்து விடுமோ என்ற பயம் அவன் மனதிற் குடிகொண்டு விடுகிறது; பின் எப்படி அவன் அவ்வின்பத்தின் சுவையைச் சரிவரச் சுவைத்தறிவான்?

அந்த நிலையில் அதிலிருந்து அவனுக்கு சரியான இன்பம் கிடைப்பது இல்லைதான்; ஆனால் கிடைத்த மட்டும் இலாபந்தான் எனலாம். அதுவும் சரியல்ல. ஏன்? சங்கதி வெளியாகி விட்டால் அரசாங்க தண்டனை வேறு கிடைக்கும்.

எனவே, பிறன்மனைவியை அனுபவிக்க விரும்பும் ஒருவனுக்கு எந்த வகையிலும் இவ்வுலகத்தில் இன்பம் கிடைக்கப் போவதில்லை.

போகட்டும்; இந்த உலகத்தில்தான் அப்படி எனினும், மறு உலகத்திலாவது நல்ல இன்பத்தை அனுபவிக்கலாமல்லவா? இல்லை; அதுவும் மோசம். அவனுக்கு மறு உலகத்தில் நரகங்களில் வைத்து மிகக் கொடிய நரகமான 'கும்பிபாகம்' என்னும் நரகந்தான் கிடைக்குமாம். இவன் கனவாகக் கூடின பெண்ணைப்போல் செம்பினால் செய்த பாவையைப் பழுக்கக் காய்ச்சி, அதைப் பலமுறை தழுவும்படி யமகிங்கரர் வதைப்பார்களாம்!

ஆதலால், நாணத்தை யுடையவர்களாகிய எவரும் இன்னொருவன் மனைவியை விரும்பா திருப்பாராக.

"அச்சம் பெரிதால், அதற்கு இன்பம் சிற்றளவால்;
நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால்;—நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால்; பிறன்தாரம்
நம்பற்க நாண்உடை யார்."

[பெரிது, சிற்றளவு, கோக்கொலை, கூர்த்தவினை என்ற நான்கு சொற்களின் கடையிலும் உள்ள ஆல்களை அசைச் சொற்களாகவோ, சொல்லலங்காரமாகவோ கொள்ளவேண்டும். நிச்சயம்=நிசம், நிச்சல்=எந்நாளும். கும்பிக்கே கூர்த்த வினை=நரகத்திற்குக் காரணமாகிய பாவம்.]

பிறன் மனையாளை விரும்பும் அவனைவிட்டு நான்கு பொருள்கள் போய்விடும்; ஆனால், பதிலாக நான்கு பொருள்கள் வந்து சேரும்.

போவன: தருமம், கீர்த்தி, சிநேகம், கவுரவம்
வருவன: பகை, பழி, பாவம், அச்சம்.

"அறம், புகழ், கேண்மை, பெருமைசீர் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா;—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகை, பழி, பாவம், என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்."

[கேண்மை=சிநேகம்.]

ஒரு ஆணுக்கு இன்னின்ன அவயவங்கள் இன்னின்ன தன்மையை உடையனவாய் இருக்கவேண்டும் என்ற நியதி யுண்டு. ஆனால், அந்நிய

திக்கு மாறாக ஆணினிடத்து ஆண் தன்மை குறைந்து பெண்தன்மை மிகுந்து வருவதும் உண்டு. இதற்கு அலி என்று பெயர்.

இயற்கைக்கு மாறாக ஒருவனிடத்து இப்படி முறை பிறழ்ந்து வரக் காரணமென்ன? வேறொன்றுமில்லை; போன பிறவியில் முறைபிறழ்ந்த செய்கையை அவன் செய்தான். அதன் பயனாக இந்தப் பிறவியில் அலியாகப் பிறந்திருக்கிறான். அவ்வளவுதான்.

தன் மனையாள் இன்னொருவனை விரும்புவது ஒருவனுக்கு சம்மதமல்ல; பின் தான் எப்படி இன்னொருவன் மனைவியை விரும்பலாம்? தன் மனைவியின் கற்பைக் காக்க தனக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அது போலவே பிறன் மனையாளது கற்பு விஷயத்திலும் அவனுக்கு அக்கறை இருக்கவேண்டும்.

அப்படியில்லாமல் தனக்கிருக்கும் செல்வத்தின் மமதையினாலோ, சில்லறை சகவாசத்தினாலோ, வேறு காரணங்களைக் கொண்டோ ஒருவன் இயற்கை விதிக்கு மாறாக இன்னொருவன் மனைவியை அனுபவித்து வருகிறான் என்றால், அவன் அடுத்த பிறவியில் அலியாகப் பிறந்து வீடுகள் தோறும் சென்று கூத்தாடிப் பிச்சையேற்று உண்டு காலங் கழிப்பவன் ஆகிறான் என்பதுதான். இந்நியதி யாவும் ஒரு பெண்ணுக்கும் பொருந்தும்.

"செம்மைஒன் றின்றிச், சிறியார் இனத்தராய்,
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ—உம்மை
வலியால் பிறர்மனைமேல் சென்றோர், இம்மை
அலியாகி ஆடிஉண் பார்."

[செம்மை=நல்லொழுக்கம். கொம்மை=திரட்சி. வரி=தேமல் படர்ந்த. மரீஇ=தழுவி. உம்மை=முற்பிறப்பில். வலியால்=செல்வம் முதலியவற்றின பலத்தால். இம்மை=இப்பிறப்பில்.]

மனிதனுக்கு உணவு இன்றியமையாதது. உண்ணும் உணவிலிருந்து அதன் சத்துப்பொருள் இரத்தமாக மாறி உடலெங்கும் பரவுகிறது. இரத்தத்திற்கும் உயிருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரத்தமிருக்குமிடத்தில் தான் உயிர் நிற்கும். இரத்தம் கெடாமல் எந்த வியாதியும் மனிதனை அடையாது. எந்த அளவுக்கு இரத்தம் சுத்தமாயிருக்கிறதோ, அந்த அளவுக்கு மனிதனுக்கு சுகம் ஏற்படுகிறது.

இத்தகைய இரத்தத்திலிருந்து ஒருவகை சத்துப்பொருள் ஊறுகிறது. அதுதான் வீரியம், இது ஆண்களிடத்து சுக்கிலமென்றும், பெண்களிடத்து சுரோணிதமென்றும் பெயர்களைப் பெறுகிறது. சுக்கில சுரோணிதமென்றும் பெயர்களைப் பெறுகிறது. சுக்கில சுரோணிதம் ஒன்றுபட்டல்லாமல் தோற்றமில்லை. எனவே, தோற்றத்திற்கு ஆண் பெண் சேர்க்கை இருந்தே ஆகவேண்டும். இது இயற்கை விதி.

தேகத்தில் நல்ல இரத்தம் ஓடிக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு வீரியம் நல்ல வலுப்பெற்று நிற்கும். வீரியம் எவ்வளவுக்கு வலுப்பெற்று நிற்கிறதோ, அவ்வளவுக்கு நிற்கும் அவனிடத்து காமக் கிளர்ச்சியும்.

வீரியம் ஊறி நிற்பதற்கு தனி இடம் தேகத்தில் அமைந்திருந்த போதிலும், அதற்கு கிளர்ச்சி ஏற்படும்போது தேகம் முழுமையுமே அது ஆட்டி வைக்கும். வீரியத்தின் அவ்வித கிளர்ச்சியை அடக்குவதென்பது சாமானிய மல்ல. இந்தக் காமாக்கினி மிகக் கொடியது.

சூரியன், அக்கினி ஆகிய இவைகள் வெப்பமுள்ள பொருள்களாயிருந்தபோதிலும் அவை உடம்பின் வெளிப்புறத்தை மட்டுமே சுடும்; அது மட்டுமல்ல, அவைகளின் வெப்பத்தை உடம்பில் ஏற்காமல் தப்பித்துக் கொள்ளவும் செய்யலாம். ஆனால் காமத்தீ அப்படியல்ல. அது எங்கு சென்றாலும், மற்றெதனைச் செய்தாலும் சுகமாகிய நெஞ்சத்தைச் சுட்டு வருத்தத்தான் செய்யும்.

இவ்வித காமக்கிளர்ச்சியைத் தணிப்பதற்கு ஆண்டவன் விதித்திருக்கும் ஏற்பாடு ஆண் பெண் சேர்க்கையாகும். அவ்வித சேர்க்கைக்கு உரியவர் கணவனும் மனைவியும் ஆவர். கணவன் மனைவி என்ற ஏற்பாட்டில் அடங்கியிருக்கும் செய்திகளுள் தலைசிறந்தது மேற்சொன்ன கலவிதான்.

கடவுளால் விதிக்கப்பட்டிருக்கும் இத்தகைய ஏற்பாட்டுக்கு மாறாக ஆணாகட்டும் பெண்ணாகட்டும் நடந்து கொண்டால், அவர்களுக்கு என்ன தண்டனை கிடைத்தாலும் அதுபற்றி வருந்துவதற்கில்லை.

"பண்டொரு ஆண் பெண் அமைத்துஅவ் இருவருக்கும்
மணம்இயற்றி பரன்இரக்கம்
கொண்டுஅளித்த முறைகடந்து கள்ளவழிப்
புணர்ச்சிசெயும் கொடியோர் தம்மை
மண்டலமே, வாய்திறந்து விழுங்காயோ!
அவர்தலைமேல் வான்உலாவும்
கொண்டலே, பேர்இடியை வீழ்த்தாயோ!
இதுசெய்யில் குற்றம் உண்டோ?" (நீதி நூல்.)

காமக்கிளர்ச்சி என்பது மிகப் பொல்லாதது என்றும், அதைத் தணித்துக் கொள்வதற்கு உபாயம் மனையாளுடன் கலவி செய்வதுதான் என்றும் சொன்னதைக் கேட்டவுடன், "மனைவியை இழந்தவன் என்ன செய்வது?" என்று அதோ ஒருவர் கேட்கிறார். அவருக்கு பதில் இதுதான்.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அறிவுடையர் ஆவதற்கே முயல வேண்டும். அறிவுடையோர் என்பதற்கு அழகு செய்வதற்கு அரியவற்றைச் செய்வதாகும்.

செய்வதற்கு அரிய செயல்களுள் வீரியத்தை அடக்குவதும் ஒன்று. வீரியம் எந்த அளவுக்கு வெளிப்பட்டு விடுகிறதோ, அந்த அளவுக்கு மனிதனுடைய சக்தி, புத்தி, யுக்தி, சித்தி, முத்தி ஆகியவை குறைந்து போகின்றன.

மனிதனுடைய இலட்சியம் பேரின்பநிலையை—அதாவது முத்தியை அடைவதாகும். முத்தியை அடைவதற்குச் செய்யவேண்டிய முயற்சி

ளுக்கு உடலில் சக்தி முதலாயின இருத்தல் அவசியம். வீரியம் வெளிப்படுந்தோறும் சக்தி முதலியன குறைந்து போகின்றன என்றால், அத்தகைய வீரியத்தை மனிதன் வீணாகச் செலவிடலாமா?

இனி, மனையாளுடன் வாழ்ந்து வருபவர்களுங் கூட சந்தான உற்பத்தியை உத்தேசித்து மட்டும் வீரியத்தை செலவிடலாமே யொழிய, வெறுங் காமக்கிளர்ச்சியைத் தணித்துக் கொள்வதற்கெல்லாம் அவ்வரும் பொருளைச் செலவிடுதல் நல்லதல்ல.

எப்பேர்ப்பட்டவர்களையும் மயக்கிவிடும் இயல்பு காமக்கிளர்ச்சிக்கு இருந்தபோதிலும், அதைப் புத்திபலத்தைக் கொண்டு வெற்றி யடையலாம்.

> "காலத்தில் வருவ தொன்றோ
> காமத்தால் கனலும் வெந்தீ
> சீலத்தால் அழிவ தன்றிச்
> செய்யத்தான் ஆவ துண்டோ."

என்றார் கம்பர். எனவே, நல்லொழுக்கம் நிறைந்த அறிவாளிகளின் உள்ளத்தில் எழும்பும் காமநோயானது பரவாமலும் வெளியாகாமலும், பலரிடத்துச் சென்று தங்காமலும், ஒழுக்க முள்ளவர்கட் கிடையில் தலைகுனிய நேரிடும் என்று பயந்தும், பிறர் பழிக்க இடம் வையாமலும் தமக்குள்ளேயே அடங்கி ஆறிவிடும்.

> "பரவா, வெளிப்படா, பல்லோர்கண் தங்கா
> உரவோர்கண் காமநோய்; ஓஓ; கொடிதே!
> விரவாருள் நாணுப் படல்அஞ்சி யாதும்
> உரையா துள் ஆறி விடும்."

[உரவோர்=அறிவுடையோர். விரவாருள்=நல்லொழுக்கம் உள்ளவர்களுக் கிடையில். நாணுப்படல்=வெட்கித் தலைகுனிய நேரிடுவதற்கு.]

எது தமிழ்த் தொண்டு?

இத் தலைப்புகொண்ட கட்டுரையொன்று சென்ற இதழில் வெளிவந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதில் குறிக்கப்பட்டுள்ள சில விஷயங்களுக்கு மறுப்பாக ஒரு கட்டுரை வந்திருக்கிறது. இடமின்மை காரணமாக, அது இவ்விதழில் வெளியிடப்படவில்லை. அடுத்த இதழில் அது பிரசுரிக்கப்படும். எது தமிழ்த்தொண்டு? என்னும் விஷயத்தில் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட விரும்புவோர் இவ்விவாதத்தில் கலந்துகொள்ளலாம்.

ஆசிரியர்.

இந்தியா நாடா?

(மூ. திரவியம்.)

அன்று மூஹரம். பள்ளிக்கூடம் விடுமுறை. திருக்குறளை முன்னால் திருப்பி வைத்துக்கொண்டேன். 'நாடு' என்னும் அதிகாரத்தைப் புரட்டிப் பார்த்தேன். படித்துக்கொண்டிருக்கும் போதே "நாடென்றால் எல்லா நாடுகளும் நாடாகி விடுமா?" என்று யோசித்தேன். அப்படியானால் 'நம் இந்தியா-ஒரு நாடா? என்ற சர்ச்சை என் மனதில் கிளம்பியது. அன்று முதல் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடியலையலானேன்.

மறுநாள் நான் படித்த பழங்கல்லூரிக்குச் சென்றேன். எனது, 'ஜாக்ரபி' உபாத்தியாயரைக் கண்டேன். அவர் ஒரு அன்பான மனுஷர். மாணவர்கள் மீது அளவிலாத அன்பு காட்டுவார். நான் போனதும் அவர் என்னைக் கனிந்த மொழிகளால் வரவேற்றார். நாங்கள் குசல மனைத்தும் விசாரித்த பிறகு, அவரிடம் 'சார், இந்தியா நாடா?' என்ற கேள்வியைப் போட்டு வைத்தேன். உடனே அவர், 'அடா, இற்றைக்கு ஏறக்குறைய 42 கோடி மக்கள் பெருகி வாழ்வது இந்தியா. 18 லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணம் உடையது நம் நாடு. உலகத்திலே மிகச் செழிப்பான பிரதேசமாகிய கங்கை, சிந்து நதி தீரங்களை யுடையது நம் நாடு. நீ படித்த 'ஜாக்ரபி' யெல்லாம் பரீக்ஷையோடு தட்டிப்போய் விட்டதோ? இப்பேர்ப்பட்ட ஒரு பெரும் தேசத்தை—உலகத்தவர் ஒரு கண்டம் என்று கூடச் சொல்லத் துணிந்த—இந்தியாவை நாடல்ல என்று நீ சொல்வது சரியல்ல' என்று ஒரு பெரிய 'லெக்சர்' செய்து விட்டார். 'வீண் சச்சரவும் வாதமும் உபாத்தியாயரிடமா?' என்று நினைத்துச் சிறிது நேரத்தில் அவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டேன். வரும் வழியிலே எனது பழைய சரித்திர உபாத்தியாயர் 'இந்திய நாட்டின் பூர்வீகக் குடிகள் யாவர்?' என்ற கேள்வியை என் தம்பியிடம் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். நல்லவேளை அவர் என்னைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தாரானால் அன்று முழுவதையும் 'இந்தியாவின் முற்கால, தற்கால நிலைமை'யைப்பற்றிப் பேசிக் கழித்திருப்போம். இன்னொரு வகுப்புப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தேன். தமிழ் ஐயா 'பிற தேயத்திற்கு நம் இந்திய நாட்டிலின்று ஏற்றுமதியான பொருள்களில் முக்கியமானவை முத்தும் மிளகும் தான்' என்று சொல்லிக் கொண்டிருந்தார். கணக்கு உபாத்தியாயர் 'இந்திய நாட்டின் ஜனத்தொகை 1935-ல் 35-கோடி. 1940-ல் 40-கோடி' என்று ஏதோ ஒரு கணக்கை வாசித்துக்கொண் டிருந்தது அரைகுறையாய் என் காதில் விழுந்தது. மறுபக்கம் திரும்பினேன். 'சயன்ஸ்' உபாத்தியாயர் 'இந்திய நாட்டின் சிறந்த விஞ்ஞானியான சர். ஜகதீஷ் சந்திர போஸ் இறந்தது ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டம்' என்று மிகத் தாழ்ந்த குரலில் வருத்தத்தோடு கூறிக்கொண்டிருந்தார். இதை யெல்லாம் கேட்டுவிட்டு வீடு திரும்பினேன்.

மறுநாள் மாலை ஒரு பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். 'இந்திய நாட்டின் தவப்பெரும் புதல்வர்களே' என்றுதான் தலைவர் பேச்சை ஆரம்பித்தார். கூட்டம் முடிந்த பின் வெளியே வந்தேன். யாரோ ஒரு சிறு பையன். 'பாருக்குள்ளே நல்ல நாடு-எங்கள் பாரத நாடு' என்ற பாரதி பாடலைத் தன் சொந்த இராகத்தில் பாடிக்கொண்டு போனான். இவ்விதமாக எங்கு பார்த்தாலும் எங்கு திரும்பினாலும் இரண்டு மூன்று நாளாக எனக்கு 'இந்திய நாடு, இந்திய நாடு' என்ற குரல்தான் சதா எதிரொலித்துக்கொண்டேயிருந்தது.

மூன்றாவது நாள். கலாசாலைக்குப் போய்க் கொண்டிருந்தேன். போகிற வழியில் படை திரண்டு வந்தாற்போல் பிச்சைக்காரர்களின் கூட்டம் வந்து கொண்டிருந்தது. வயிற்றுக்குச் சரியாக உணவு கிடைக்காததால் அவர்களது நடையும் பார்வையும் உடம்பும் தளர்ந்திருந்தது. இன்னுங் கொஞ்சதூரஞ் சென்றேன். ஒரு மரத்தடியில் நான்கு ஏழைகள் தங்களை மூடிக் கொள்வதற்குக் கூடச் சரியான உடையின்றிப் படுத்திருந்தார்கள். ஒருவன் நொண்டி; மற்றொருவன் குருடன். இன்னொருவன் குஷ்டரோகி. மற்றவன் ஒரு கை யற்றவன். இக் காட்சிகளைப் பார்க்கவே எனக்குப் பயமும் இரக்கமும் ஒருங்கே ஏற்பட்டன. கலாலாசாலைக் கருகில் பெருங்கூட்டம். என்னவென்று நுழைந்து பார்த்தேன். ஒரு 'மூஸ்லீமு'க்கும் ஒரு 'ஹிந்து'வுக்கும் சண்டை. அங்கு வந்த ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பெருந்திரளாகக் கூடி விட்டார்கள். ஒருவரை யொருவர் விஷம் நிறைந்த கோரப் பார்வையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். கலகம் வந்துவிடும் போலிருந்தது. நல்ல வேளையாய் அந்த 'சப் இன்ஸ்பெக்டர்' சமயத்தில் வந்து சேர்ந்தார். கூட்டத்தைக் கலைத்து விட்டார். மூஹூரத்தன்று படித்த

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு."

என்ற குறளின் அருமை அன்றுதான் எனக்குத் தெரிந்தது. அதன் பொருள் அன்றுதான் எனக்கு நன்றாக விளங்கிற்று. இப்படி வறுமையும், பிணியும், பகையும் நிறைந்த இன்றைய இந்தியாவை எப்படி நாடென்று சொல்வது? வள்ளுவர் இன்று எவ்விதமோ உயிர்பெற்று மறுபடியும் இங்கு வந்துவிட்டால் 'இன்றைய இந்தியா நாடல்ல' என்று ஒரே அடியாக மறுத்துக் கூறி விடுவார். 'பசியும் நோயும் வருத்துகின்ற 'இந்தியாவை நாடென்று சொல்வது தவறு. இந்தியா சரியான நாடல்ல' என்பதை உணர்ந்தேன். 'காடுதான்' என்று கத்திவிட்டேன். இந்தியாவில் இன்று வாழும் நமது வாழ்க்கை அஞ்ஞாத வன வாசந்தான்' என்று அலறிவிட்டேன்.

ஒரு கடையில் போய் குண்டூசியின் விலையை விசாரித்தேன். கடைக்காரன் 'யுத்த விலை ஏறிப்போய் விட்டது. எல்லா சாமான்களும் அயல் நாட்டிலிருந்து வருவன. அவைகள் அவ்வளவும் நின்று போய்விட்டன. நம் நாட்டில் சாமான்கள் ஜாஸ்தியாகச் செய்யப்படவில்லையே' என்று சொல்லி ஒன்றுக்கு நான்கு விலை சொன்னான். 'சரி' என்று அங்கிருந்து திரும்பி விட்டேன். என் மனதில் பல யோசனைகள் ஒன்றை யொன்று முட்டிக் கொண்டிருந்தன. 'பண்டை இந்தியர்கள் தங்கள் நாட்டிலிருந்து—அப்போது இந்தியா நாடாயிருந்தது—அநேக பொருள்களைப் பிற நாட்டாருக்கும் அனுப்பினார்கள். நூலாடை, பட்டாடைகளை அனுப்பி அவர்கள் மானத்தைக் காப்பாற்றினார்கள். ஆனால் இன்று நாம் குண்டூசிக்குக் கூடப் பிறநாட்டை எதிர்பார்க்க வேண்டிய திருக்கிறது.

'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.'

என்றார் வள்ளுவனார். 'பிற நாட்டாரை எதிர்பார்க்காமல் தன்னகத்தே உள்ளவர்களுக்கு யாவும் அளிப்பதுதான் நாடு. மக்களைப் பிற நாட்டாரை எதற்கும் நாடச் செய்வது நாடல்ல' என்றுதான் கூறுகிறார் வள்ளுவர். ஆகவே குண்டூசிக்கும் ஆடைக்குங் கூடப் பிறநாட்டை எதிர்பார்க்க வைத்த நம் இந்தியா எவ்விதத்திலும் நாடாகுமா? சரியான நாடாயிருந்தால் நாம் பிற நாட்டை ஒரு சிறு காரியத்திற்குக் கூடப் பிறநாட்டாரை எதிர்பார்க்க மாட்டோம். ஆனால் இன்றைய இந்தியாவின் நிலை அப்படியல்ல. பிற தேசத்தவரை எதற்கும் எதிர்பார்க்கிறது நம் இந்தியா. குண்டூசி முதல் யுத்தக்கப்பல் வரை பிற நாட்டிலிருந்துதான் வருகின்றன. எனவே, வயிற்றுப்பசியும், வியாதியும் வருத்தும் இந்தியா தனது இந்தியமக்களைச் சிறு சாமானுக்கும் மற்றவர்களை எதிர்பார்க்க வைத்த இந்தியா எவ்விதத்திலும் நாடாகுமா! இந்த நிலைமையில் இருக்கும் இந்தியாவை நாடென்று எப்படிக் கூற முடியும்?

காப்பக

சில தமாஷ்கள்

(1) ஒருவன் அநேகக் கடிதங்கள் போட்டும் மற்றவன் பதில் போடவில்லை.

கடைசியாக கீழ்கண்டமாதிரி ஒரு கடிதம் எழுதிப் போட்டு விட்டான்.

"உனக்குப் பதில் போட இஷ்டமில்லாவிட்டால் அதை உடனே ஒரு கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்."

(2) "என்ன சார், வீடு மாற்றிவிட்டீர்களாமே."

"ஆமாம், ஹரிஹரய்யர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்குத்தான் போயிருக்கிறேன்."

"அது யாரது ஹரிஹர ஐயர்?"

"நம்ம வீட்டுக்குப் பக்கத்தில்தான் இருக்கிறார்."

கட்டபொம்மு நாடகம்

("ரகுநாத்")

1

"வானும் பொழிய முப்போகம் விளையுது
மன்றனென் காணிக்கு ஏது பணம்?
காலமழையில் முப்போகம் விளையுது
கட்டனென் காணிக்கு ஏது பணம்?
கோடைமழையிலே முப்போகம் விளையுது
சேர்ந்தவன் காணிக்கு ஏது பணம்?
மாரிகள் பெய்தும் பெய்யாமலும் போவதை
மாற்றுதற்கோ பணம் வாங்குகிறீர்?"

என்பதுதான் பாளையக்காரனான கட்ட பொம்முவின் உயரிய சித்தாந்தம். இந்த சித்தாந்தத்தை நிலைநிறுத்த எண்ணித்தான், கும்பினியாருடன் போர் புரிந்து வீர சுவர்க்கத்தில் இடம் பெற்றான் கட்ட பொம்மு.

பல்லாரி நாட்டிலே வாடிக்கோட்டையிலே யிருந்த கம்பளத்தார் என்னொரு கூட்டம் சக்கதேவியைக் குலதெய்வமாகக் கொண்டாடி வந்தார்கள். அந்த நாட்டிலே பஞ்சம் வந்து, அங்குள்ள மக்கள் மிகவும் துன்புற்று, பஞ்சத்தின் கொடுமைக் காற்றாது தெற்கேயுள்ள செழிப்பான பிரதேசங்களை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்படி வந்த கூட்டத்தாரில் ஒரு பகுதியினர், திருநெல்வேலி ஜில்லாவில், மணியாச்சிக்கு கிழக்கே பத்து மைல் தூரத்திலுள்ள சாலிகுளம் என்ற பறம்புக்காட்டில் குடிசைகள் அமைத்துக்கொண்டு தங்கினர். இவர்களின் தலைவனான கெட்டிபொம்மு (பொம்மு-இயற்பெயர்; கெட்டி-வல்லமை யுடையவன்) ஒருநாள் வேட்டைக்குப் போயிருந்த பொழுது, தனது நாய்களால் விரட்டப்பட்ட ஒரு முயல், சாலி குளத்திற்குக் கிழக்கே, ஒரு மைல் தூரம் ஓடியபின், ஓரிடத்தில் அந்த வேட்டை நாய்களையே திரும்பி எதிர்த்து விரட்டி விட்டதைக் கண்டான். இது அந்த இடத்தின் மகிமைதான் என உணர்ந்து, அந்த இடத்திலே, தன் பாட்டன் பாஞ்சாலன் பெயரோடு, பாஞ்சாலக்குறிச்சி என கிராமம் நிறுவி, கோட்டை வளைத்து அரசு செலுத்தலானான். இந்த வீர மரபில் வந்தவர்கள்தான், கட்ட பொம்மு, ஊமைத்துரை என்ற பாளையக்காரர்கள். இவர்கள் 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே அங்கு ஆண்டு வந்ததும், இவர்கள் கிழக்கு இந்திய கம்பெனியார் ஆட்சியில் கப்பம் கட்ட மறுத்ததும், அதனால் கம்பெனியார் இவர்கள் பேரில் போர் தொடங்கி, பாஞ்சாலங் கோட்டையை அழித்து விட்டதும், ஆங்கிலேயர் சரித்திரத்திலிருந்து மறைத்து வைக்க முயன்ற ஒரு உண்மை. இந்தக் கட்டபொம்மு, ஊமைத்துரை இவர்களின் வாழ்க்கையையே "கட்டபொம்மு நாடகம்" என்ற பெயரால், கோவில்பட்டித் தாலுகாவில், கம்பளத்தார் இருக்கும் இடங்களிலெல்லாம் இன்னும் கூத்தாக நடித்துக் காட்டப்பட்டு வருகிறது.

பாஞ்சாலங் குறிச்சி என்ற ஊர், திருநெல்வேலி ஜில்லாவிலே, ஓட்டப்பிடாரம் என்னும் கிராமத்திற்கு வடகிழக்கில் ஒன்றரை மைல் தூரத்திலே இருக்கிறது. எனது சகோதரர் ஓட்டப்பிடாரம் கிராமத்திலே வேலை பார்த்து வந்த காலத்திலே, நான் அங்கு போயிருந்தேன். ஒரு நாள் அவர்களுடன் பக்கத்திலிருந்த கிராமத்திற்கு முகாம் போனேன். அந்த ஊரில் அன்றிரவு கட்டபொம்மு நாடகம் நடக்கப் போவதாய் தண்டோரா போடப்பட்டது; பட்டணக்கரையிலே பிறந்த நான் "கணபதி விலாஸ்"லும் "மனோரமா"விலும் சங்கீத இளவரசர்களும், கோகிலகானங்களும் நடித்த நாடகங்களைக் கண்டு களித்தவன், நாளுக்குநாள், வெள்ளித்திரையிலே பேசும் படங்களையும், பேசாப் படங்களையும் பார்த்து பொழுது போக்கியவன். ஆகவே, கிராமாந்திர நாடக நிகழ்ச்சி எப்படி இருக்கிறது பார்ப்போம் என்றுதான் நான் அன்றிரவு வெகுநேரம் வரைக் கண் விழித்தேன்.

நாடகம் நடக்கவிருந்த இடத்திற்கு நான் மட்டும், இரவு 9 மணிக்கே போய்விட்டேன். என் சகோதரருக்கு, இந்தக் கிராம நிகழ்ச்சி பைத்தியம் கொஞ்சமும் கிடையாது. வீணாக ராத்திரி முழுதும் கண் விழித்து, உடம்பை அலட்டிக்கொள்ள முடியாதென்று அவர்கள் ஜாகையிலேயே தங்கி விட்டார்கள். அந்த நாடக நிகழ்ச்சிக்குரிய இடத்தில் கொட்டகை இல்லை. டிக்கட்டும் இல்லை. வாசற் காப்போர் இல்லவேயில்லை. கிராமத்தின் மேலக்கோடியில் உள்ள, ஒரு கூரைப் பள்ளிக்கூடத்தின் முன்னால் பக்கத்துக் கடையிலிருந்து எடுத்துப்போட்ட பலகைப் பெஞ்சுகளையும், அதன்மேல் சாப்பலகைகளையும் பரப்பி எழுப்பப்பட்ட மேடையும் இருந்தது. மேடையைச் சுற்றி, நான்கு கால்கள் நட்டு, வேப்பங்குலைத் தோரணம் கட்டியிருந்தது. முன் படுதா, பின் படுதா, ஹார்மோனிஸ்ட் உட்காரும் பள்ளம் (Pit) ஒன்றையும் காணோம். ஜனங்களும், அங்கொருவரும், இங்கொருவருமாகத்தா னிருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக ஊரினர் அங்கு வந்து கூட ஆரம்பித்தார்கள். வெற்றிலைபாக்கு புகையிலையை மெதுவாக அதக்கிக்கொண்டே, ஊர் வம்பு அளந்து கொண்டிருந்தனர் பலர். கால்களை நீட்டி, சரீரத்தை அப்படியே கொஞ்சம் கிடத்தி, சிரம பரிகாரம் செய்து கொண்டனர் சிலர். மணியோ பத்து பத்தரை ஆகிவிட்டது, ஆனால் நாடகம் ஆரம்பிக்கும் வழியையே காணோம். ஏன்? என்று கேட்டால், நடிகர்கள் வேஷம் போட்டு முடியவில்லை என்ற பதில்தான் கிடைத்தது. கடைசியாக உண்மை யென்னவெனில், ஊர் நாட்டாண்மைக்கார நாயக்கர் இன்னும் வரவில்லை. கடைசியாக அவரும் வந்தார். நாடகமும் மணி பதினொன்றரைக்கு ஆரம்பமானது.

முதலில் சில நடிகர்கள் மேடைமீது தோன்றினார்கள்.

"கட்டபொம்மு கதை நான்படிக்க கண்ணாலே பார்த்திட வேண்டுமையா
ஊமைத்துரை கதை நான்படிக்க வணக்கமளித்திட வேண்டுமையா
பாஞ்சாலி தன்கதை நான்படிக்க பக்கத்துணை செய்ய வேண்டுமையா
சக்கதேவி கதை நான்படிக்க சக்தி அருளவே வேண்டுமையா."

என்று அவர்கள் [illegible] கம் செய்து முடித்தார்கள். காலில் கட்டிய சல்லடமும், மேடைக்குப் பக்கத்திலிருந்து முழங்கிய பம்பை வாத்தியமும், தாளத்தின் ஒலியுஞ் சேர்ந்து "கும் கும்" என எழுந்தது.

இந்த வாத்திய கோஷங்களுக்கிடையே நாடகம் 'விறு விறு' என்று நடக்க ஆரம்பித்து விட்டது. கூரைப்பள்ளிக்கூடமாகிய 'கிரீன் ரூமி' லிருந்து, நடிகர்கள் மேடை மீது தாவி வந்தார்கள். பழைய போர் வீரர்கள் தாங்கிய வாளும், வேலுந்தான் அவர்களது கையிலிருந்த ஆயுதங்கள்.

சாலிகுளம் கரையருகே, கோட்டை போடவேண்டும் என்பதற்காக, கட்ட பொம்மு, தம்பி ஊமைத் துரையுடன் கலந்தாலோசிக்கிற ரஸமான கட்டம் வந்தது.

"சாலி குளத்துக்குப் பக்கத்திலே
சார்ந்திடும் செம்மணல் மேட்டினிலே
காடைவேட்டை நான் ஆடையிலே
கண்ட அதிசயம் சொல்லுகிறேன்.
முயலை முடுக்கியே நாய் செல்லவே
மேட்டு நிலத்தினில் போகையிலே
முன்னோடி நின்ற முயலதுவும்
பின்னோடும் நாயை விரட்டுது பார்
நாயை முயல்வெற்றி கொண்டதனால்
நாமிதில் கோட்டைகள் போடவேண்டும்
ஓங்கிய பாஞ்சாலி பக்கத்திலே
ஓங்கு குறிச்சியைச் சேர்க்கவேண்டும்
தங்கச் சிம்மாசனம் போடவேண்டும்
தாழ்ச்சியிலா தரசாள வேண்டும்
எண்ணிய காரியம் ஈடேற
எப்போதும் காப்பவள் சக்கதேவி."

என்று பாட ஆரம்பித்து விட்டான், கட்டபொம்மு வேஷக்காரன். உணர்ச்சி வேகத்தோடு பொங்கிவந்தது இந்தப் பாட்டு. நடிகர் தான் பாஞ்சாலங்குறிச்சி கட்டப்போகும் ஆத்திரம் முழுவதையும் அப்படியே கொட்டி விட்டார். தற்போதுள்ள பிரபல நாடக, சினிமா நடிகர்கள் கூட, அவ்வண்ணம் நடிப்பது முடியாத காரியம் என்பது எனது துணிபு.

இப்படியே உணர்ச்சி வேகத்தில் நாடகம் நடந்துகொண்டே போகிறது. கும்பினியாருக்கும், பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் சண்டை நடக்கும் கட்டம் வரப்போகிறது என்ற உடனே நாடகம் காணவந்த ஜனங்களிடையே ஒரு பரபரப்பு காணப்பட்டது. பக்கத்தில் சாவதானமாகக் குறட்டை விட்டு, நாலுபேர் இடத்தைத் தான் ஒருவனே அடைத்துக் கொண்டிருந்த ஒருவனை, அவனது தோழன், "அடே. எழுந்திரு, சண்டை நடக்கப்போவுது. சரியான கட்டம்டா," என்று எழுப்ப ஆரம்பித்தான். ஆண்களும், பெண்களும் ஆவலாய் எதிர்பார்க்கும் கட்டம் வரப் போகிறது என்று நானுந் தெரிந்து கொண்டேன். கம்பெனியின் ஏஜெண்டு துரையைக் கண்டு பேசுகிறார் கட்டபொம்மு; பக்கத்திலே நிற்கிறார்கள் ஊமைத்துரை, தானுபதிப்பிள்ளை, ஊமைத்துரையின் வலது கைபோன்ற வீரமறவன் வெள்ளையன் முதலியோர். "வானம் பொழியுது, பூமி விளையுது, நான் எதற்காக வரி கொடுக்கவேண்டும்" என்று கட்டபொம்மு பேசிய வார்த்தைகளைக் கேட்ட ஜாக்ஸன் மேஜர் துரைக்கு கோபம் வருகிறது. கட்டபொம்மு எழுந்திருந்து வெளியே போக எண்ணுகிறார். அவரை எழுந்திருந்து போகாதபடி தடுக்க, துரை கட்ட பொம்முவின் மடியைப் பிடிக்கிறார். உடனே ஊமைத்துரையும் வெள்ளையனும் கொதித்து எழுகிறார்கள்.

"கோபம் பிறக்குது கண்களிலே
கொற்றவன் மூந்தியைத் தொட்டதனால்
மீசை துடிக்குது பார்க்கையிலே
விட்டுவிடு மூந்தி தொட்ட கையை."

என்று ஊமைத்துரையும்,

"பேசாமற் போவேனோ பாதர்வெள்ளை
பின்வாங்கி நிற்பேனோ சண்டையிலே
அல்லாக்காய் புல்லாக்காய்ப் பாய்ந்தேனென்றால்
ஆயிரம் வந்தாலும் கண்டிடுமோ
கம்படி குஸ்திகள் செய்தேனென்றால்
கண்டவர் சண்டைகள் போடுவரோ ?
கோண்டையங் கோட்டை மறத்தி பெற்றக்
கொடுமுடி வெள்ளையன் நானல்லவோ ?"

என்று வெள்ளையனும் குமுறிக் கூறும் பாக்கள் கேட்பவர் உள்ளத்தில் ஒரு எழுச்சியை உண்டாக்கி விடுகிறது. கட்ட பொம்முவும், அவன் சகாக்களும் தங்கள் வீரத்தைக் காட்டி, மேஜர்துரை ஜாகையிலிருந்து தப்பி வெளியே வந்து விடுகிறார்கள்.

இனி போர் ஆரம்பித்து விட்டது. கும்பினியார் பட்டாளம் கோட்டைக்கு வெளியில் இருந்து துப்பாக்கிக் குண்டுகளை கோட்டையிலுள்ளவர்கள்மேல் பொழிகிறார்கள். கட்ட பொம்முவும், அவனது வீரர்களும் கத்தியில், வாள் கொண்டு எதிரிகளைத் தாக்குகிறார்கள். (இவைகளெல்லாம் மேடை மீது ஒன்றுங் காட்டப்படவில்லை. எல்லாம் நாமே யூகித்துக் கொள்ள வேண்டியதுதான்) வெள்ளையன் புறப்படுகிறான் சண்டைக்கு. அவனது மனைவி, தான் கெட்ட சொப்பனங் கண்டதாகவும், அதனால் தன் கணவனுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்து விடும் என்று அஞ்சுவதாகவும் சொல்லித் தடுக்கிறாள். வெள்ளையனுக்கும், அவனது மனைவிக்கும் நடக்கும் தர்க்கத்தை, நாடகம் பார்த்த மக்கள் வெகுவாக ரஸித்தார்கள். நானுங் கூடத்தான்.

போகாதே போகாதே என்கணவா
பொல்லாத சொப்பனம் கண்டுவிட்டேன்.

வெள்ளையன்:—

கண்ட கனவினைச் சொல்லாவிட்டால்
கத்தியால் வெட்டுவே னிச்சணமே.

வெள்ளை. மனைவி:—

சொல்லப் பதறுதே நெஞ்சமய்யோ
தொந்தரை என்னென்ன வந்திடுமோ?

வெள்ளை:—

தொந்தரை என்னென்ன வந்தாலும்
சிந்தை கலங்குமோ சொல்லு எம்மா.

வெள்ளை. மனைவி:—

பாஞ்சை நகர மழியக் கண்டேன்
பாழூராகவே போகக் கண்டேன்
பட்டத்து யானைகள் வீறிடவே
பந்தயக் குதிரைகள் சாகக் கண்டேன்
கூகை நின்று குழறக் கண்டேன்
கோபத்தில் ஆந்தை அலறக் கண்டேன்
மஞ்சட் கிணறும் இடியக் கண்டேன்
மல்லிகைத் தோட்டம் அழியக் கண்டேன்
இவ்விதம் சொப்பனம் கண்டதனால்
எவ்விதம் போவது பாஞ்சைநகர்?

வெள்ளை:—

போகவிடை தர வேண்டுமடி
போகத் தடைசெய்தால் கோபம் வரும்
என்புத்தி கேட்பவர் கோடியதிற்
பெண்புத்தி கேட்பேனோ பாதர்வெள்ளை
உண்ட வீண்டுக் கிரண்டகம் செய்து
உலகிலே உயிர் வாழலாமா?
ஆறிலுஞ் சாவுபின் நூறிலுஞ் சாவென்ற
ஆன்றோர் பழமொழி கேட்டிலையோ?

இப்படி, தனது மனைவியின் வார்த்தையை உதறித் தள்ளி விட்டு, போருக்குப் போகிறான் வெள்ளையன். போரில் அவன் செய்யும் அட்டகாசங்களையெல்லாம் நடிகர்கள் நன்கு நடித்துக் காண்பித்து விட்டனர். கடைசியாக, காலன் துரையுடன் அவன் நெருங்கிப் போர் செய்ததையும், காலன் துரையின் குண்டால், வெள்ளையன் தாக்கப்பட்டதும், வெள்ளையன் பாய்ச்சிய ஈட்டி காலன் துரையின் மார்பிற் பாய்ந்து, காலன் துரை மடிந்து விழுவதையும் நடிகர்கள் உணர்ச்சியோடு நடித்து விட்டார்கள். இதைக்

குறிப்புகள்:—

1. பூஜை மண்டபம்— (தானாபதிக்குரியது.)
2. தானாபதியின் வீடு.
3. கன்னி விநாயகர் கோவில்.
4. குளம்—(நீராவி)
5. முரசடிக்கும் இடம்.
6. கட்டபொம்மு ஊமைத் துரையவர்களின் கோட்டை.
7. கிணறு (தண்ணீர் இன்னுமிருக்கிறது.)
8. எட்டுக்கால் மண்டபம்— (அதாவது வஸந்த மண்டபம், “கல்யாண மஹால்”)
9. களஞ்சியம்.
10. குருவிச் சாவடி.
11. சொக்கட்டான் மண்டபம்.
12. யானைகட்டுந் தறி.
13. பெரிய தெப்பகுளம்.



கண்ட ஒருவன் ஓடிப்போய் ஊமைத்துரையிடம்,

காலன் துரையுமோ அங்குபட்டான்
காவற்காரன் மகன் இங்கு பட்டான்.

என்று சொல்லி விடுகிறான். உடனே ஊமைத்துரையும்,

“கோடி தவங்களைச் செய்தாலும்
கொற்றவன் போலக் கிடைத்திடுமோ?
மேதினி சுற்றித் திரிந்தாலும்
வெள்ளையன் போலும் அகப்படுமோ?”

என்று அழுது துடித்து அங்கலாய்க்கிறான் இப்படியே. போர், போரில் மாண்ட வீரர்களை நினைத்து அழும் புலம்பல் முதலிய காட்சிகளையும், பின்

ளர் கட்டபொம்முவும், ஊமைத் துரையும் நாட்டைவிட்டுத் தப்பித்து ஓடுங் கட்டமும்; அதன்பின் பாஞ்சை நகரமே அழிக்கப்படுங் காட்சியும், நடிகர்கள் நடித்து நாடகத்தைப் பூர்த்தி செய்தார்கள். நாடகம் முடியும்போது விடியற்காலம் நாலரை அல்லது ஐந்து மணி யிருக்கும்.

3

கட்டபொம்மு நாடகத்தைப் பார்த்த நான் பாஞ்சாலங் குறிச்சி கட்டியிருந்த இடத்தையும் பார்க்க வேண்டுமென்று எனது சகோதரரைத் தொந்தரவு செய்து, மறுநாளே அந்த இடத்தைப் போய்ப் பார்த்தேன். கோட்டை போட்டிருந்த இடமே தெரியாமல் கோட்டைச்சுவர்கள் அழிக்கப்பட்டிருந்தன. கட்டிடங்கள் எல்லாம் தரை மட்டமா யாக்கப்பட்டிருந்தன. அங்குள்ள கட்டிடங்களின் அஸ்திவாரங்களிற் சிலவற்றை முரசு மண்டபம் என்றும், குருவிச்சாவடி என்னும், களஞ்சியம் என்றும், சொக்கட்டான் மண்டபம் என்றும், யானை கட்டுந்தறி யென்றும் என்னுடன் வந்த தலையாரி காட்டினன். அவைகளின் விளக்கப் படந்தான் பக்கத்திலே காட்டி யிருப்பது.

இன்றைக்குக் கூட, சேவற் கோழிச் சண்டைகள், கோவில் பட்டித் தாலுகாவிலே சில இடங்களில் நடக்கும்போது, "ஏ! என் கோழி பாஞ்சாலங்குறிச்சி மண்ணிலே பிறந்த தாக்கும். ஒருநாளும் அடிபடாது" என்று மார்தட்டுவதைக் கண்ணாலும் பார்க்கலாம், காதாலுங் கேட்கலாம். ஏனெனில், கோவிற்பட்டி தாலுகா வாசிகளுக்கு மட்டுமல்ல. திருநெல்வேலி ஜில்லா வாசிகளுக்கே பாஞ்சைநகர் மண்ணில் அபார நம்பிக்கையுண்டு. அதனால் ஜனங்கள் பாஞ்சாலக்குறிச்சி அழிந்த கொத்தளத்தரையிலுள்ள மண்ணைக் கூடையில் அள்ளிவந்து, பெட்டைக்கோழிகளை அதிலே முட்டையிடச் செய்து, அதன் மூலம், அதிலேயே குஞ்சையும் பொறிக்கச் செய்து தோன்றும் சேவற்கோழிகள் ஒருநாளும் தோல்வி யுறாது என்பது எங்களுடைய நம்பிக்கை

பாஞ்சாலங்குறிச்சி இடத்தில் நின்றபோது எனக்குங்கூட, கட்டபொம்மு, ஊமைத்துரை இவர்களின் வீரவாழ்க்கை முன்னால் வந்தது. "நாயை விரட்டும் சக்தியை முயலுக்களித்த இடம் இது" என்று நினைத்தபோது, எனக்குத் தன்னையு மறியாமல் வீரவுணர்ச்சி பொங்கி வந்தது. என் மனைவிக்கு இதுவரை பயந்திருந்ததுபோல், இனிமேலும் இருக்கக் கூடாதென எண்ணிக்கொண்டே வீட்டிற்குத் திரும்பினேன். வீட்டிற்குள் வந்ததும் வராததுமாய் இருக்கையிலே என் மனைவி, 'இதுவரை எங்கு போனீர்கள். வீணாக ஊர்சுற்றிக் காலத்தைப் போக்கவேண்டாம் என்று எத்தனைதரம் சொல்லுவது. ஏதோ பிழைக்க வழியைப் பாருங்கள்" என்று கோபித்துக் கொண்டாள். அவளுக்குப் பதில் சொல்லுவதற்குக்கூட, எனக்கு நா எழவில்லை. பாஞ்சாலக்குறிச்சி மண் என் காலில் ஒட்டிக் கொண்டிருக்கிறதா என்று தடவிப் பார்த்தேன். அதுதான் இல்லை. நான் பழைய கோழையாகவே யிருக்கக் கண்டேன்.

வயிற்றுப்பாடு

"கார்த்திகேயன்"

அன்பு மிக்க கோமளா!

இந்த முறை முன்னே நான் தெரிவித்தபடி வெளி நாடுகளில் மக்களிற் சிலர் மேற் கொண்டுள்ள ஜீவனோபாயங்களைக் குறித்து வரைகிறேன்.

உலகத்திலே மனிதர்களுக்குத் தேவையான பொருள் மிகச் சிலவே. அதாவது உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்கள் என்ற தலைப்பிலே வரக்கூடியவை உணவு, உடை என்ற வகைகளிலே அடங்கிப் போகும். ஆனால் இன்பத்தை நாடும் மாந்தர் இந்த முக்கியமான பொருள்களோடு தங்கள் பொருட் செலவை மட்டுப்படுத்திக் கொள்வதில்லை. ஆடம்பரங்களுக்காகவும், மிகுந்த சுகத்தின் பொருட்டும் தம் வாழ்வை அலங்கரித்துக்கொள்ள எத்தனையோ மக்கள் விரும்புகின்றனர். அதற்கென பலதிறப்பட்ட பண்டங்களும் ஆவண வீதிகளிலும், சந்தைகளிலும் குவிகின்றன. இந்தப் பண்டங்களிற் பெரும்பாலும் எங்கிருந்து வருகின்றன? அயல்நாடுகளிலிருந்தன்றோ!

திருவிழாக்களில் நம் வீதிகளில் குழந்தைகளுக்கென விற்கப்படும் விளையாட்டுப் பொருள்கள் ஒன்றா இரண்டா? பொம்மைகள், பலூன்கள், காகிதக் காற்றாடிகள், ஊதற்கருவிகள் முதலான பலவும் விற்கப் படுவதைப் பார்க்கின்றோ மல்லவா? இது போலவே ஜப்பான் தேசத்தில் சிலர் சோப்பு குமிழி விற்று ஜீவிக்கிறார்களாம். சோப்பை நீரில் கரைத்து ஒரு வாளியில் எடுத்துக்கொள்வர். அத்துடன் சில சீசாக்கள், சில மூங்கிற் குழாய்த் துண்டுகள், ஒரு புனல், ஒரு சிறு அகப்பை முதலான பலவும் எடுத்துச் செல்வராம். அவர்கள் மூங்கிற் குழாயொன்றை அடிக்கடி சோப் நீரில் நனைத்து ஊதவே, அதிலிருந்து சோப்புக் குமிழிகள் பல வானத்தில் மிதந்து செல்லுவது மிக்க வேடிக்கையா யிருக்கும். இதனைக் காணும் சிறுவர் வாளா யிருப்பாரோ! உடனே துட்டு கொண்டு ஒரு சீசா சோப்பு நீரும், ஒரு நாணற் குழாய்த் துண்டும் சிறார் பலரும் வாங்கித் தாமும் அந்த வேடிக்கையைச் செய்து மகிழ்வராம்.

ஸ்காத்துலாந்து தேசத்திலே பட்டப் பரீட்சைகளில் தேறாத மாணவர்களிற் சிலர் ஒரு நூதன தொழில் முறையைக் கையாண்டு வருகின்றனராம். அவர்கள் கிறிஸ்தவ உபதேசங்களை புதியதான சொற்றொடர்களில் அமைத்து எழுதி விலைக்கு விற்கின்றனர். மக்கள் பலர் அவற்றைப் பக்தியுடன் வாங்குகின்றனராம். ஆனால் இப்படி விற்பவர்கள் பிரயாணம் செய்து கொண்டிருக்க வேண்டுமாம். ஏனென்றால் ஒரே நகரத்தில் அவர்களது ஒரே மாதிரியான உபதேச மொழிகள் இரண்டாம் முறையாக செல்லாதல்லவா?

கோமளா இனி அமெரிக்காவிலே நடக்கும் அதிசயத்தைப் பார்.

அந்த தேசத்திலும் பல பிரபலமான பண்ட சாலைகள் இருக்கு மல்லவா? அவைகளில் ஒருவகையான உத்தியோகம் உண்டாம். அந்த உத்தி

யோகஸ்தருக்கு நல்ல சம்பளமும் கிடைக்குமாம். அவர் அந்தப் பண்டசாலையின் ஒரு புறத்தில் தனியே யிருக்கவேண்டும். அவருக்கு வேண்டிய மதுபான வகைகள் அனைத்தும் வழங்கப்படுமாம். அவர் அவற்றைப் பருகி மகிழ்ந்து உல்லாசமாக வீற்றிருக்கலாம். இப்படிக் கூறுவதால் இந்த உத்தியோகம் எவ்வளவோ சிறந்ததாயிற்றே என்று நினைத்து விடாதே. முழுதும் கேள்.

அந்தப் பண்டசாலையைக் குறை கூறும் வாடிக்கைக்காரர் யாரேனும் வந்தால் உடனே அந்த உத்தியோகஸ்தர் முதலாளி இருப்பிடத்திற்குத் தருவிக்கப்படுவார். அந்த வாடிக்கைக்காரர் தொடுக்கும் நிந்தை மொழிக ளனைத்தையும் பொறுமையுடன் அந்த உத்தியோகஸ்தர் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். எத்தனைக் கொடிய பாணங்களாயினும், அவர் செவி மடுத்துத் தாளுகவேண்டும். இப்போது தெரிகிறதா அந்த உத்தியோகத்தின் பெருமை!

ஆனால் இந்தத் துன்பம் நிரந்தரமானதல்ல. எவ்வாறெனில் ஒரே வாடிக்கைக்காரன் மறு முறையும் தூற்ற வந்தால், அப்போது அந்த உத்தியோகஸ்தர் மீண்டும் தருவிக்கப் படுவதில்லையாம்.

இஃதன்றி இன்னொரு புதுமையான தொழிலைப் பார்! பயனற்ற பொருள்கள் என்று சாதாரணமாகக் கருதப்படும் பண்டங்கள் சிலவற்றைச் சேகரித்தல் ஒரு சிலரது தொழிலாகும். இத்தகையோர் கடற்கரையைக் கூட்டி வருபவர்களாம், அவர்கள் குப்பைகளைக் கூட்டி பொறுக்குகையில் இடையிடையே சேர்கின்ற உபயோகமற்ற பொருள்களையும் ஒருங்கு சேர்ப்பார்களாம். இத்தகைய பொருள்களிற் சில மிக கனமானவைகளு முண்டாம். இவர்களில் வீதிக்கு நீர் தெளிப்போன் ஒருவன் இருந்தானும். அவன் கோடைகாலத்தில் நீர் தெளித்தலும், குளிர் காலத்தில் சிறு உல்லாசப் படகுகள் செய்வதும் வழக்கமாம். அவன் தினமும் அதிகாலையில் எழுந்து கடல் ஓரமாக நடந்து சென்று அலைகள் ஒதுக்கும் பொருள்களைச் சேகரித்து வைப்பானும்.

ஏதோ ஒரு மாதத்தில் அவன் அப்படியே சேர்த்தவை, ஆ! கோமளா! என்ன ஆச்சர்யம்! ஏராளமான விலையுள்ள ரப்பர் துண்டாம். ஒரு கப்பலில் முறிந்துபோன நிலைத்துண்டு நல்ல நேர்த்தியான செம்மரத்தாலானதாம்—ஒரு குளிர்காலம் முழுதும் அடுப் பெரிக்கலாமாம்! நல்ல உயர்ந்த பால் டப்பிகளாம்—அரையந்தர் எடை யிருக்குமாம்! ஆகாய விமானத்தின் சக்கரம் ஒன்றும்! ஒரு பெரும் பெட்டி நிறைய உலர்ந்த திராட்சைப் பழமாம்! வெள்ளி செம்பால் ஆகிய பல நாணயங்களாம்! மூன்று உயரிய வைரங்கள் பதிக்கப் பெற்ற ஒரு தங்க புருச்சாம்! ஒரு சிறந்த பௌண்டன் பேனுவாம்!...................

ஆகவே கோமளா! பார்த்தனையா! இந்தத் தொழில் விசித்திரங்களையெல்லாம்!

உனது அன்புள்ள,
கமலம்.

பரா சக்தி

[R. P. M. கனி.]

அன்னை வடிவமடா! இவள்
ஆதிபரா சக்தி தேவியடா! இவள்
இன்னருள் வேண்டுமடா! பின்னர்
யாவுமுலகில் வசப்பட்டுப் போமடா!

அவள் சர்வசக்தி—ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையுஞ் செய்யும் மூலசக்தி. சத்வம், ரஜம், தமம் எனப்படுவன அவளுடைய முக்குணங்கள். இம் மூன்று குணங்கள் தான் முறையே காக்கும் திருமாலுடனும், ஆக்கும் நான் முகனுடனும் அழிக்கும் சிவனுடனும் சம்பந்தப்பட்டுள்ளன. வேதங்களும், புராணங்களும், உபநிஷத்துக்களும் அவளை ஆதிசக்தி யென்றும் மஹாசக்தி யென்றும பிரதமை, புராதனி, தேவமாதா, விஸ்வமாதா என்றும் புகழ்கின்றன. அவளுடன் சேர்ந்த பிரம்மம் தான் சகுண பிரம்மம். அவளில்லாத பிரம்மம் நிர்குண பிரம்மமாம். அவளுடைய குணங்களில் சத்வம் முதன்மை பெற்றால் சகுண பிரம்மம் உலகைக் காக்கும் மஹா விஷ்ணுவாகிறார். இப்பொழுது அவருடைய சக்திக்கு வைஷ்ணவி, நாராயணி, லக்குமி எனப் பெயர்கள் கொடுக்கப்படுகின்றன. தாமசகுணம் முக்கியத்துவம் பெற்றால் சகுண பிரம்மம் அதர்ம இருளை அழிக்கும் மஹேஸ்வரர் என்ற சிவனாகிறார். அவருடைய சக்திக்கு காளி, சாமுண்டி, சண்டிகை, ஜகதாத்ரி என்ற பெயர்களுண்டாகின்றன. ராஜஸகுணம் முக்கியத்துவ மடைந்தால் சகுண பிரம்மம் ஆக்கற்றொழில் புரியும் பிரம்மாவாகிறார். அவர் சக்திக்கு பிராமணி, சரஸ்வதி எனப் பெயர்கள் வழங்கப் படுகின்றன. ஆகவே, திருமால், பிரம்மன், சிவன் ஆகிய மூவரும் சகுண பிரம்மத்தில் ஐக்கியமாகும் ஒருவரேயாம். அதனால் லக்குமி, காளி, பிராமணி ஆகியவர்களெல்லாம் மஹா சக்தி என்ற மூல சக்தியின் வெவ்வேறு அம்சங்கள் தான்.

இத்தகைய மூல சக்தியான பரா சக்தியை,

முத்தேவியற்கு முதற்தேவி மூவுலகும்
பித்தேற்றிவைக்கும் பேயாட்டப்பெருந்தேவி
எத்தேவர்க் கெவர்தேவர் என்றிடுவோர்
அத் தேவர் தேவர்க்கவர் தேவராய் வருவாள். (ச. தி. க.)

என்று ஒரு நவீன கவி போற்றுகிறார்.

அவள் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் தன்னகத்தே கொண்டோளானதால் தேவர் முதல் அசுரர் வரை, மனிதர் தொட்டு மிருகங்கள் ஈறாக உள்ள உயர்ந்த தாழ்ந்த பிறப்புக்களெல்லாவற்றிலும் இருக்கும் சக்தியாவாள். உலக நன்மையின் பொருட்டு அவள் இமவான் புத்திரி இமாவதியாகவும் தக்ஷப் பிராஜாபதியின் புத்திரி சதியாகவும் [illegible]

சிவனை மணந்தாள் என்று புராணங்கள் கூறும். அவள் எவ்வாறு தோன்றினாள் என்று இக் கதை கூறுகிறது.

ஒரு கற்பத்தின் முடிவில் திருமால் யோக நித்திரையில் அமர்ந்து விட்டார். அப்போது தீமையின் உருவான அசுரர்கள் நன்மையின் உருவான தேவர்களை விடப் பலம் பொருந்தி யிருந்தனர். ஒரு விஷயம். தேவர்களென்று உயர்ந்த சாதியோ அசுரர்களென்று தாழ்ந்த வகுப்போ கிடையாது. எவை யெல்லாம் அறம் எனப்படுகிறதோ அவற்றைக் கொண்டோர் தேவர். அதர்மத்தின் வழி நடந்தோர் அசுரர். தேவர் ஒளி, அசுரர் இருள். நன்மைக்கும் தீமைக்கும் சண்டை நடப்பது இயற்கை. ஆகவே தான், அசுரர்கள் தேவர்களைத் துன்புறுத்தினர். தேவேந்திரனை இந்திரலோகம் விட்டே விரட்டி விட்டான் மகிஷாசுரன் என்ற அசுரர் தலைவன். இன்னல் தாங்க முடியாத தேவர்கள் பிரம்மன் தலைமையில் விஷ்ணுவிடஞ் சென்று முறையிட்டனர். இம் முறையீடு சிவனுக்கும் எட்டியது. விஷ்ணுவும் ருத்ரனும் கோபங் கொண்டனர். அவர்கள் கதம் கனலாக வெளிப்பட்டது. அதே சமயம் பிரம்மனின் முகத்திலிருந்தும் தேவர்களுடைய முகங்களி லிருந்தும் கோபத்தினால் நெருப்புச் சுடர்கள் வெளிப்பட்டன. எல்லா நெருப்பும் ஒன்று சேர்ந்து ஓர் அக்கினி மலை உண்டாயிற்று. அது தணிந்து அதிலிருந்து வெளிப்பட்டாள் பராசக்தி. இமயமலையிலிருந்து வந்த சிங்கத்தில் ஏறிக்கொண்டு சென்று மகிஷாசுரன் முதல் பல அரக்கர்களைக் கொன்று தேவர்களை ஆசீர்வதித்து மறைந்தாள்.

பின்னொரு காலத்தில் சும்பன், நிசும்பன் என்ற இரு அசுரர்கள் தேவர்களைத் துன்புறுத்தினர். தேவர்கள் பராசக்திக்கு இமய மலையில் பூஜை நடத்தினர். மலையில் கங்கை நோக்கி நீராடச் சென்ற தேவி இதைக் கண்ணுற்றாள். அதன் காரண மென்ன வென்று தன்னைத் தானே வினவினாள். அவளுடம்பிலிருந்து ஓர் அழகிய பெண் வெளிப்பட்டுக் காரணங் கூறினாள். அது கேட்ட தேவியின் மேனி கோபத்தால் கறுத்தது. அவள் உடம்பிலிருந்து வெளிப்பட்ட பெண் அவள் கோசத்திலிருந்து தோன்றியதால் கோசிகை எனப்பட்டாள். அசுரரை அழிக்கக் கோசிகைக்கு ஆக்ஞாபித்து மறைந்தாள் தேவி.

கோசிகை மலையில் சஞ்சாரஞ் செய்து வந்தாள். அவள் எழில் சண்டன், முண்டன் என்ற இரு அசுரர்களை வசீகரித்தது. அவர்கள் மூலம் விஷய மறிந்த சும்ப நிசும்பர்கள் தங்களில் ஒருவனை மணந்து கொள்ளச் சம்மதமா எனக் கேட்டு வரும்படி ஒரு தூதுவனை அனுப்பினர். ஆனால், தேவி தன்னைச் சமரில் வெல்பவனைத் தான் மணக்க முடியும் என்று கூறி விட்டாள். அது கேட்டுச் சினங் கொண்ட அசுரர் தம் தானைத் தலைவனான தூம்ரலோசனனை அவள் மைக்குழல் பற்றி யிழுத்து வரும்படி அனுப்பினர். ஆனால் அவளுடைய பார்வையிலேயே அவன் சாம்பராகி விட்டான். இதை யறிந்த சும்ப நிசும்பர் அடங்காக் கோபம் பொங்க, சண்ட முண்டர்களின் தலைமையில் ஒரு பெருஞ் சேனையை அனுப்பினர். அவள் ஒரு பாறை மீதமர்ந்திருந்தாள். பக்கத்தில் சிங்கம் படுத்திருந்தது. சண்ட முண்டர் அவளைத் தாக்க வாரம்பித்தனர். அவள் முகங் கறுத்தது. அவள் நெற்றியிலிருந்து பயங்கர ரூபங் கொண்ட காளி தோன்றினாள். அவளுக்குப் பயங்கரி என்றே பெயர். பல கைகளிலும் நானாவித ஆயுதங்கள்; கழுத்தில் கபாலமாலை; உடம்பில் புலித்தோலாடை; தொங்கும் நாக்கு; நெருப்புக் கக்கும் கண்கள். இவற்றுடன் வானைப் பிளக்கும் பேரொலி முழங்கித் தோன்றினாள் அவள். அசுரர் மனதில் அச்சங் குடி புகுந்தது. சென்ற சேனை அழிந்தது. சண்ட முண்டர் சிரங்களைக் கொய்து தேவியின் பாதங்களில் வைத்தாள் பயங்கரி. தேவி அவளுக்கு சாமுண்டி என்ற பெயர் கொடுத்து வாழ்த்தினாள். பின்னரும் சும்பன் தலைமையில் மீந்த அசுர படை முழுதுங் கிளம்பியது. அது தேவியை நான்கு திக்கிலும் வளைந்து கொண்டது. அது கண்ட சிங்கம் காது செவிடு படக் கர்ஜித்தது. காளியுந் தன் வெண்கலம் போன்ற தொண்டையால் அண்டமும் நடுங்க அலறினாள். தேவி தன் வில்லைக் கையில் எடுத்தாள். தன் மணியை ஆட்டினாள். அது அசுரர்களின் சாவு மணியன்ன இடிபோல் முழங்கிற்று. தேவர்களின் சக்தி முழுதும் உருப்பெற்று அவளைச் சுற்றி நின்றன. அவள் உடம்பிலிருந்தும் பல சக்திகள் கிளம்பின. அவைகள் பயங்கர உருவும், கோர ஆயுதங்களும் கொண்டிருந்தன. போர் தொடங்கிற்று. ரக்தவீஜன் என்ற அசுரனுடைய உடம்பிலிருந்து தரையில் விழும் ஒவ்வொரு சொட்டுக் குருதியிலிருந்தும் எண்ணற்ற பயங்கர அசுரர்கள் தோன்றினர். அது கண்ட தேவி கீழே விழும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் குடித்து விடும்படி காளி தேவிக்கு. சாமுண்டிக்கு) உத்தரவிட்டாள். இவ்விதம் ரக்த வீஜன் கொல்லப்பட்டான். சும்பனும் மாண்டான். அசுர படை முழுவதும் அழிந்தது. நிசும்பன் பொருதற்கு வந்தான். இவ்வாறு பலர் உதவிகொண்டு வெல்வது வெற்றியே இல்லை என்று அவன் தேவியை இகழ்ந்தான். அது கேட்ட தேவி தானின்றி இவ் வண்டத்திலேயே ஒரு பொருள் இல்லை யென்றும், அங்கு காணப்படும் படை முழுதும் தன் உடம்பிலிருந்தே வெளிப்பட்டன எனவுங் கூறி அங்கிருந்த படை முழுவதையும் தன் உடம்பினுள் இழுத்துக் கொண்டாள். பின்னர் நிசும்பன் தேவியுடன் பயங்கரமாகப் போர் செய்து இறந்தான். இவ்விதமாக, தேவி அசுரர் குலத்தை அழித்தாள்.

இத்தகைய மூல சக்தியைப் பற்றிய பிரஸ்தாபம் உபநிஷத்துக்களிலுங் காணப் படுகிறது. கடோபநிஷத்தில் இவள் உமை என்ற பெயரால் விவரிக்கப்படுகிறாள். முண்டகோபநிஷத் இவ்விதங் கூறும்; "பிரிவு படாத பிரம்மா (சகுண பிரம்மா) ஒரு இரணமய கோசத்தில் வாசஞ் செய்கிறார்." இன்னுஞ் சில இடங்களில் இவள் ஹைமவதி உமா என்றழைக்கப்படுகிறாள். கீதையில் வரும் தேவி மாயா, யோக மாயா என்பன இவளைக் குறிப்பன. தைத்ரேய சம்ஹிதத்தில் (காண்டம் IV, ப்ரபாதகம் 3, அநுவாகம் II) கீழ்க்கண்ட பொருளுள்ள சுலோகம் காணப்படுகிறது; "அவள் தான் முதலில் உதித்தாள்; அவள் அவனுள் நுழைந்து வியாபிக்கிறாள். மூன்று பெரியோர்களும் அவளைப் பின்பற்றுவார்களாக." (திலகர் மொழி பெயர்ப்பின் உரை.) மூன்று பெரியோர்க ளென்றது விஷ்ணு, பிரம்மா, சிவன் ஆகியோர்களை.

இவ்விதமாகப் பராசக்தியைப் பற்றிய கொள்கை அன்று தொட்டே இருந்து வருகிறது. பராசக்தி என்ற பெயர் தானா அவளுக்குண்டு, வேறு பெயரில்லையா என்று கேட்போர் தாம் விரும்பும் பெயரை வைத்துக்

சொன்னலாம். பெயரில் ஒன்றுமில்லை. ஆனால் அவளைப் பற்றி இது மட்டும் நிச்சயம். உலகில் அசுர பலம் ஓங்கும்போது, தருமத்தின் உயிரதனைச் சூது கவ்வும் போது, துச்சாதனக் கொடுமையால் துரௌபதி அல்லலுறும் போது, அறம் வீழ மறந் தழைக்கும்போது, அச்ச மடிமை மடமையில் மாந்தர் அறிவு மயங்கும்போது, நன்மையைத் தீமை வெல்லும்போது அவள் தோன்றுவாள். நன்மை, தருமம், அமரபலம் இவை தலை தூக்கும்; அசுரபலம், சூது, அச்ச மடிமை மடமை இவை சாகும். பசியும் பிணியும் மறையும்; வசியும் வளமுஞ் சாக்கும். ஆகவே தான் கவிஞர் பாரதியும் தான் முத்துமாரி, சாமுண்டி, காளி என்றெல்லாம் பாடும் பாட்டுக்கள் மூல சக்தியையே குறிக்கும் என்கிறார். இன்றைய உலகப் போக்கு பயங்கரமாயிருக்கிறது. தர்மத்தை அதர்மம் கற்பழிக்கப் புகுகிறது; சமாதான தேவதை குற்றுயிராய்க் கிடந்து துடிக்கிறாள். அசுரபலம் மேலோங்கி அன்பும் அருளும் மறைந்தன. மக்கள் உள்ளம் பீதியின் குடியிடமாய் விட்டது. இத்தகைய சமயத்தில் பராசக்தியின் அருள் உலகின் மீது இறங்குமா? நன்மை பெருகித் தீமை தொலையுமா? எங்கும் இன்பம் நிலவ வழியுண்டா? ஏன் இல்லை? இலையுதிர்காலத்திற்குப் பின் வசந்தகாலம் வந்தே தீர வேண்டும். மூன்றாம் அங்கத்திற்குப் பின் நான்காம் ஐந்தாம் அங்கங்களும் வந்து தான் தீர வேண்டும் கஷ்டத்திற்குப் பின் சுகம், துன்பத்திற்குப் பின் இன்பம் வருவதியற்கை. இத்தகைய கொடும் போரின் கோர முடிவும், அதன் பயங்கர மரணமும் கூடிய விரைவில் வந்தே தீரும், இரவைத் தொடரும் பகல் போல்.

போது மிங்கு மாந்தர்—வாழும்
பொய்ம்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி, தாயே!—எம்மீ
தருள் புரிந்து காப்பாய்.

ஓம் சக்தி.

இந்துமாதரும் இந்துமதமும்

(V. சங்கரய்யர்.)

உலகத்தைப் படைத்துக் காத்து அழிப்பது கடவுளே. அப்பரம்பொருள் தன்னை ஆண், பெண் என இரு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டார் என நம் மதம் கூறுகிறது. பரமேசுவரன், 'அர்த்தநாரீசுவரர்' என்று கூறப்படுகிறது. அவருக்கு ஒருபாகம் சிவரூபம், மறுபாதி சக்திரூபம். அப்பொழுது இரு பாகத்துக்கும் சமத்துவமே கற்பிக்கவேண்டி வருகிறது. சில குணங்களையும் சில பாகங்களையும் ஆணுக்கும், வேறு சில குணங்களையும் வேறு சில பாகங்களையும் பெண்ணுக்கும் அளித்திருக்கிறாரே தவிர, உலகத்தை நடத்த இருவரும் சம உரிமை உடையவர்களேயாம். ஒன்றை மற்றொன்று பூர்த்தி செய்கிறது.

ஆண் தன்மை.	பெண் தன்மை.
(1) தைரியம், ஊக்கம், நிச்சய புத்தி, வீரியம் முதலியன.	(1) பணிவு, பொறுமை, நாணம், சஹனசக்தி, சுயநலம் பாராட்டாமை, அன்பு முதலியன.
(2) ரஜோகுணம் அதிகம்.	(2) சத்துவகுணப் பிரதானம்.
(3) புத்தி விசாலமானது.	(3) அழகு பிரசித்தமானது.
(4) சூரியனை ஒத்தது.	(4) சந்திரனை ஒத்தது.
(5) குடும்ப சம்ரக்ஷணைக்காக சம்பாதிப்பது.	(5) இருப்பவைகளை சுத்தமாகவும் சரியாகவும் வைத்து உபயோகிப்பது.
(6) ஓய்வு அற்ற திரைகடலுக்கு ஒப்பானது.	(6) மெதுவாகச் செல்லும் நதிக்கு ஒப்பானது.
(7) பெருங்காற்றுக்கு ஒப்பானது.	(7) மந்தமாருதனுக்கு ஒப்பானது.
(8) பரந்த ஆகாசத்துக்குச் சமம்.	(8) அதிலுள்ள இந்திர சாபத்துக்கு சமானம்.
(9) மலர்ந்த தாமரைப்பூவாகக் கூறலாம்.	(9) வாசனைகமழும் நல்ல மல்லிகை மொட்டெனக் கூறலாம்.
(10) விரிவான புத்தியை யுடையது.	(10) ஆழ்ந்து யோசித்துப் பொறுமையுடன் செய்யும் தன்மை யுடையது.

இந்திய மாதரை நாம் திரிமூர்த்திகளின் பத்தினிகளான ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி தேவியாகக் கருதுகிறோம். ஒரு ஜீவனுக்கு முக்கியமாக ஸ்தூலமான தேஹமல்ல அதன் அழகைக் கொடுப்பது; உள்ளே யிருக்கும் இந்த அந்தராத்மாவே அதற்கு உன்னதமான சோபையையும் தெய்வீகத்தன்மையையும் கொடுக்கிறது. இவர்கள் கற்பின் இருப்பிடம். தாய்மையா யிரு

வேண்டி இவர்கள் தங்கள் உயிரைக்கூட தியாகம் செய்பவர்கள். கணக்கில் அடங்காத கற்பிற்சிறந்த நங்கைகள் நிறைந்துள்ளது நம் நாடு. அவர்கள் 'பெய்யெனப் பெய்யும் மழை.' இவ் விஷயம் நமக்கு பல புராணக் கதைகள் மூலமும், சரித்திரக் கதைகள் மூலமும் நன்கு தெரியவரும்.

இவர்கள் தன்னலம் கருதாதவர்கள் என்பதற்கு சந்தேகமேயில்லை. இதற்கு இவர்களது தினசரி பழக்க வழக்கங்களே உதாரணமாம். இவர்கள் சுயநலத்தைக் கொஞ்சமும் கருதாமல் கணவன், மாமனார், மாமியார், குழந்தைகள், அதிதிகள் இவர்களது நலனையே எப்பொழுதும் கருதுபவர்களாக இருக்கிறார்கள். இவைகளெல்லாம் தமது கடமையாக பாவித்துச் செய்கின்றனர். இவர்கள் மனம் இளகிய தன்மையுடைய தாகையால் பிறர் கஷ்டப்படுவதைச் சிறிதளவும் பொறுக்க மாட்டார்கள்.

நம் மாதருக்கு நம்மைவிட மதப்பற்று அதிகம். ஈசனை துதிப்பதிலும், கோவிலுக்குச் செல்வதிலும், திருவிழாக்களைக் காண்பதிலும், புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வதிலும் புராணக் கதைகளைக் கேட்பதிலும், இவர்களுக்குள்ள பக்தி ஆண்களுக்குக் கிடையாது. இம் மாதர்கள் ஸ்ரீராமர், கிருஷ்ணர் முதலிய தேவதைகளை பிரத்தியக்ஷ தேவதைகளாக எண்ணி தங்களது மனோபீஷ்டத்தை நிச்சயமாக அடையலாம் என்ற திடமாக நம்பிக்கை யுடையவர்கள். இன்னும் நம் ஹிந்துமதம் கெட்டுப் போகாமல் இம்மட்டாவது இருக்கக் காரணம் நம் பெருந்தன்மை வாய்ந்த இந்த நாரீ சிரோமணிகளே யாம். இம் மாதர்கள் குழந்தைகளை சாப்பாடு ஊட்டும்பொழுதும், நித்திரை செய்விக்கும் பொழுதும் இராமாயணம், கிருஷ்ணன் சரிதம் முதலியவைகளை பாட்டாகவும் கதையாகவும் சொல்லி அவைகளில் அவர்களது புத்தியைச் செலுத்துகின்றனர்.

பிற தேசப் பழக்கங்களை ஆண்மக்கள் பின்பற்றுவது போல அவ்வளவு சீக்கிரத்தில் நமது மாதர்கள் பின்பற்ற இஷ்டப்படுவதில்லை. அன்னிய நாட்டு அனுசாரங்கள் ஏராளமாகத் தாண்டவமாடும் வீடுகளிலும் கூட பெண்கள் மனம் இன்னும் மாறினபாடில்லை. அவர்கள் பழைய வைதிக முறையையே அனுசரித்து வருகின்றனர். ஆண்கள் அன்னியதேச உடையை அணிகின்றனர். அதற்குப் பெண் மக்கள் இன்னும் தயாராகவில்லை. பெண்மக்கள் ஒரு பண்டிகையைக் கூட விடமாட்டேன் என்கின்றனர்; நாளாவட்டத்தில் தங்கள் கணவர்களையும் இவர்கள் நல்வழிப்படுத்தி மதாசாரங்களை யனுஷ்டிக்கும்படிச் செய்கின்றனர். கணவன் தவறி நடந்தாலும், இஷ்டப்படியும் அவனுக்கு சமாதானமாக இன்மொழிகள் கூறி மறுபடியும் சம்மத ஆசாரங்களில் நடக்கும்படி இவர்கள் செய்து விடுகின்றனர்.

இல்லத்தை ஆளுபவள் இல்லாளே யாம். நம் மாதரை நாம் 'கிருஹலக்ஷ்மி' என்கின்றோம். சுமங்கிலிப் பிரார்த்தனை, நவராத்திரி காலங்களில் குமாரி பூஜை, முதலிய சந்தர்ப்பங்களில் அம்மாதரை தெய்வமாகவே நாம் கொண்டாடிப் பூஜிக்கின்றோம். ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமையுண்டு என்பதனாலேயே நம் மாதர்களை "ஸஹதர்மிணீ" என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

'ஸதீ' என்பவள் தன் பர்த்தா உயிருடனிருக்கும் கால் அவனிடம் அதிக பக்தியுடனிருந்து அவன் ஆவி நீத்தபின்பும் தன்னலமற்ற தொண்டு செய்து தூய்மையுட னிருப்பவளே யாம். இரு உடல்களும் மணத்தால் ஒன்று சேருவதுபோல் இரு ஆன்மாக்களும் ஒன்றுபடவேண்டும். மணத்தின் மூலம் இவ் வன்பானது பின்பு கடவுளின் மீது அன்புவைக்கும் படிச் செய்கிறது. மணம் மிருக உணர்ச்சியைத் தீர்த்துக்கொள்ள ஏற்பட்டதல்ல என்றறியவும். மணம் செய்ததுமுதல் மணமகளுக்கு தன்னலமற்ற தியாக சிந்தை ஏற்படுகிறது. தன் கணவன், மாமன், மாமி, அதிதிகள், குழந்தைகள் இவர்களுக்கு பணிவிடை செய்யும் குணம் ஏற்படுகிறது. தன் பசி தாகம், தூக்கம் முதலியவைகளைக்கூடக் கவனிக்காமல் சிசுருஷையிலேயே மனமுடையவளாக இருப்பாள்.

மனைவி தன் பர்த்தாவினிடத்தில் தனது அன்பைச் செலுத்த வேண்டுமானால் அவ்வாறே புருஷனும் மனைவியிடத்தில் அன்புடையவனாக இருக்க வேண்டும். மனைவி புருஷனின் அடிமையல்ல; துணைவி, சகத்திற்பாதி, வாழ்க்கைத்துணை, சம உரிமை யுடையவள் என்று புருஷன் உணரவேண்டும். தாய் தந்தையரில் தாயே சிறந்தவள். உலகத்தைத் துறந்த சன்னியாசியும் கூட தன் தாயை வணங்கவேண்டும். ஆனால் தந்தை கூட அச்சன்னியாசியை வணங்கவேண்டும். ஆதிசங்கரர் தன் தாயின் அனுமதியின் மேல் சன்னியாசம் பெற்றார். தாயின் அந்திய கர்மம் செய்தனர்.

பெண்களில் சத்வகுண முடையோரும், ரஜோகுண முடையோரும், தமோகுண முடையோரும் இருக்கின்றனர். அதுபோலவே தான் ஆண் மக்களிலும் யாவரும் தம் குணத்தை சத்வகுண முடையதாக்கப் பாடுபடவேண்டும். ஒரு குடும்பமோ நாடோ உயர்நிலைக்கு வருவது பெண்களாலே யாம். பெண்பாலர் கற்றிருந்தால் அவரது உயரிய நோக்கங்களில் ஈடுபடுவதோடு தம் குழந்தைகளுக்குக் கல்வியும் போதிப்பர். ஆடவர் தொழிலுக்கும் உதவியா யிருப்பர். கல்வி, திறமை, மனோஉறுதி முதலியவைகளில் தாய்மாரே குழந்தைகளுக்கு வழி காட்டியாக இருக்கவேண்டும். தன் வாழ்நாளில் எதிர்கால நிலையை நன்கறிந்து குடும்ப நிர்வாகத்தைச் சுலபமாக நடத்தவும், குழந்தைகளைப் பாதுகாக்கவும், ஏழ்மையிலும் கண்ணியமாய் வாழவும் தாய்மார்கள் கற்பிக்கவேண்டும்.

நம் மாதர்களை மைத்திரேயி, காத்தியாயினி, கார்க்கி, அருந்ததி, நளாயணி, தமயந்தி முதலான கற்பரசிகளின் கதைகளைப் படிக்கும்படிச் செய்யவேண்டும். நம் நாட்டுப் பெண் பாலர் தமது இயற்கை நிலையை நன்கு ஆராய்ந்து அறிந்து அந்த நெறியை கடைபிடித்து ஒழுகுமாறு கடவுள் அனுக்கிரகிப்பாராக!

எரிமலைகள்

(கே. ராஜாராம்.)

உலகம் தோன்றிய பொழுது ஒரே அக்னிப் பிழம்பாயிருந்தது. காலம் செல்லச் செல்ல மேல் பாகம் சிறிது சிறிதாய்க் குளிர்ந்து இறுகியது. இம் மேல் பாகம் வேண்டிய அளவுக்கு இறுகிக் குளிர்ந்த பின் தாவரங்களும் உயிர்ப் பிராணிகளும் வாழ்வதற்கு ஏற்றதாயிற்று. இவ்வுண்மையை விஞ்ஞானிகள் எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர்.

பூமி எல்லா விடங்களிலும் ஒரே மாதிரியாகக் குளிர்ந்து இறுகவில்லை. சில இடங்களில் மேலோடு (பூமியின் மேல் பாகம்) மற்ற இடங்களைப்போல் அவ்வளவு கெட்டியாயில்லை. தென் அமெரிக்காவின் மேற்குக்கரை முழுவதும் மேற் கூறியபடி உள்ளது.

பூமியின் மேலோடு கெட்டியாக இல்லாதிருப்பதினால் சில இடங்களில் பூமியின் உட்பாகத்தில் அமுக்கம் அதிகமானவுடன் கற்குழம்பு, வாயுக்கள் இவை பூமியின் மேற் பரப்புக்குத் தள்ளப்படுகின்றன. ஜப்பான், நியூஸிலாந்து, ஆசியா இவற்றில் இம் மாதிரி இடங்கள் உள்ளன. இம் மாதிரிப் பாகங்கள் எரிமலை ரூபத்தில் உள்ளன.

எரிமலை எரி ஆரம்பித்தால் சாம்பல், கற்குழம்பு, பெரும் பாறாங்கற்கள் இவை பேரிரைச்சலுடன் வெகு தொலைவிற்குத் தூக்கி எறியப்படுகின்றன. புகை மேகம்போல ஆகாச வெளியில் காணப்படும். நீராவியும் வெளிப்படுகின்றது. புகை மண்டலத்தில், எரிமலை வாயினுள் எரியும் நெருப்பின் வெளிச்சம் பிரதி பலிக்கப்படுவதையும் காணலாம். மேற்கூறியதெல்லாம் எரிமலை இலேசாகக் குமுறி வெடிக்கும்போது ஏற்படுவனவாம்.

எரிமலை பிரமாண்டமாக வெடித்தால் (Eruption) பூகம்பம் ஏற்படும். சமுத்திரத்திற் கடியில் உள்ள பூமியின் மேல் பரப்பில் அதிர்ச்சி உண்டாகும்போது ஏற்றவற்றத்திற்குரிய அலைகள் (Tidal waves) ஏற்படுகின்றன.

எரிமலை வாயிலிருந்து எறியப்படும் பொருளின் உஷ்ணம் 2000-டிகிரிக்குமேல்—அதாவது கொதிக்கும் நீரின் உஷ்ணத்தை விடப் பன்மடங்கு அதிகமாயிருக்கு மென்று கூறலாம். இக் கொடிய உஷ்ணத்தில் வெளிப்பட்டு மலைப்பக்கத்திலோடும் கற்குழம்பாறு குளிர்ந்து இறுகும் வரை உருக்கி ஓடவிட்ட இரும்பைப் போலிருக்கும். சில சமயங்களில் கற்குழம்பாற்றின் அகலம் நூறடி கூட இருக்கும். அவ்வாறு குளிருமுன் சில வேளைகளில் மைல் கணக்காக ஓடவுஞ் செய்யும். அது அவ்விதம் ஓடும்போது தன் பாதையில் எதிர்ப்பட்ட பொருள்களை யெல்லாம் மூழ்கடிக்கிறது.

ஒரு எரிமலை அமைதியா யிருக்கும்போது அதன் வாயினுள் புகுந்து பார்க்கலாம். ஆனால் அங்கு நீண்டநேரம் தங்கக் கூடாது. ஏனெனில் எரிமலை எப்போது வெடிக்கும் என்று கூறுவதற்கில்லை. வாயின் தரையில் இலேசான அதிர்ச்சியும், உறுமலும் உண்டான போதிலும் கூற முடியாது.

எரிமலை வெடிக்குமுன் எச்சரிக்கை கொடுக்கு மென்று சொல்வதற்கில்லை. மேற்கிந்தியத் தீவிலுள்ள மாண்ட்பீலி, எதிர்பாராத விதமாய் ஒரு தடவை வெடித்தது. [illegible] மலைச் சரிவிலிருந்த நகரம் ஒன்று அழிக்கப்பட்டது. மெஸ்ஸினா நகரமும் இவ்வாறு தான் எட்னா எரிமலையால் அழிக்கப்பட்டது.

இத்தாலியில் உள்ள வெஸுவியஸ் எரிமலை கி. பி. 79-ல் தான் முதல் முதலாக வெடித்தது. அதற்கு முன் அது சாதாரண மலையாகத் தான் இருந்ததே ஒழிய எரிமலையாக இல்லை. திடீரென்று கி. பி. 79-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ந் தேதியன்று மலையுச்சி தகர்த்தெறியப் பட்டது. புகை மேகம் போல வானளாவியது. பாம்பி நகரின் மீது சாம்பல் மழை பெய்தது. மலையிலிருந்து வெளிப்பட்ட கொதிக்கும் கற்குழம்பு பாம்பி, ஹெர்குலேனியம் ஆகிய இரு பெரும் நகர்களை 20 அடி ஆழத்திற்கு மூடி விட்டது. அந்தோ! எவ்வளவு நாகரிகம் அடைந்திருந்த நகர் அப்படியே அமுந்தி விட்டது. நகரமக்கள் எண்ணிலார் இறந்தனர்.

கி. பி. 79-க்குப் பின்னர் வெஸுவியஸில் வெடிப்பு ஏற்பட்ட போதிலும் முதல் தடவையைப் போல் அவை மூர்க்கமானவை அல்ல. கி. பி. 472-ல் மலையிலிருந்து சாம்பலும், கரித்தூளும் காற்றினால் அடித்துக் கொண்டு போகப்பட்டு எட்ரியாடிக், மத்தியதரைக் கடல் இவற்றைத் தாண்டி கான்ஸ்டான்டிநோபில் நகரில் விழும்படி அவ்வளவு உயரத்திற்கு எறியப்பட்டன.

1822-ல் வெஸுவியஸின் வாய் 3 மைல் சுற்றளவும் 1000 அடி ஆழமும் உடையதா யிருந்தது. அவ் வருஷம் ஏற்பட்ட வெடிப்பினால் ஆழம் 200 அடி குறைந்தது. மலையின் உயரம் 4000 அடி ஆகியது.

அநேக எரிமலைகள் தங்கள் உயரத்தை அடிக்கடி மாற்றிக் கொள்கின்றன. உச்சியின் ஒரு பாகத்தைத் தகர்த்தெறிவதனாலோ அல்லது உச்சியைப் புதுப்பொருளால் உயர்த்துவதாலோ இம் மாறுதல் ஏற்படுகிறது. மாண்ட்பீலி மலைஸெயின்ட் பியரி நகரை அழித்தபின் ஒரு பெரும் பாறையை வெளிக்கொணர்ந்து தன் உயரத்தை அதிகரித்துக் கொண்டது. ஆனால், பின்னர் அப்பாறை அதன் வாயினுள்ளேயே விழுந்து விட்டது.

சில சமயங்களில் மிகப் பெரிய வெடிப்பு ஏற்படுங் காலத்தில் மிகவும் அழகான சூரியாஸ்தமனங்களைக் காணலாம். சில சமயங்களில் அது உலகம் முழுவதும் கூடக் கண்டு அனுபவிக்கக் கூடும். காரணம்:—நேர்த்தியான சாம்பல் எரிமலை வாயிலிருந்து 40, 50 மைல் உயரத்திற்கு—கூடினால் 70 மைல் உயரத்திற்குக் கூட—எறியப்படுகிறது. மேலேயுள்ள வாயு ஓட்டத்தினால் சாம்பல் கீழே விழுமுன் ஆயிரக் கணக்கான மைல் உயரத்திற்குக் கொண்டு போகப் படுகின்றது. வான வெளியில் சாம்பல் இருக்கும்போது சூரிய கிரணங்கள் வக்ரபாவ மடைந்து (Refraction) நிறம் மாறுபடுகின்றன. அப்பொழுது சூரியாஸ்தமனம் பார்க்க மிக அழகாய் இருக்கும்.

பஸிபிக் மஹா சமுத்திரத்திலுள்ள க்ராகடோ எரிமலையின் ஒரு பெரும் வெடிப்புக்குப் பின் எறியப்பட்ட சாம்பல் இரண்டு வருஷங்கள் வரை விழுந்து கொண்டேயிருந்ததாம். அப்படியானால் எவ்வளவு உயரத்திற்கு எறியப்பட்டிருக்க வேண்டும் என்று பாருங்கள்!

ஷேக்ஸ்பியரின் வாழ்க்கை

(P. N. வைத்தியநாத சுவாமி, B. Sc.,)

ஷேக்ஸ்பியரின் முன்னோர்களைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. அவர்களெல்லாம் அநேகமாக வார்விக்ஷயரில் (Warwick shire) குடியானவர்களாக இருந்திருக்கிறார்கள். ஜான் ஷேக்ஸ்பியர் என்பது தந்தையின் பெயர். இவர் ஸ்டார்ட் போர்ட்-ஆன்-ஆவன் (Stratfordon Avon) என்னும் கிராமத்தில் வசித்தவர். ஜீவனம் தோல் கம்பளி தானியம் முதலிய வியாபாரங்களாகும். மேரி ஆர்டன் (Mary Arden) என்பவளை பிறகு மணம் செய்து கொண்டார். இதனால் சிறிது சொத்தும் கிடைத்தது. ஜான் தனது ஊக்கத்தால் முன்னுக்கு வரத் தலைப்பட்டார். 1568-ல் நகரசபையில் முக்கிய இடம் பெற்றார்.

ஷேக்ஸ்பியரின் தாயைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் தாய் தந்தையைவிட நாகரீகத்தில் சிறந்திருந்தாள். வீட்டில் சாந்தமும் சந்தோஷமும் அதிகமாக நிலவச் செய்தவள் அவளே.

பாலப் பருவம்

ஏப்ரல் மாதம் 1564-ல் நாடக ஆசிரியர் பிறந்தார். நிச்சயமான தேதி தெரியவில்லை. ஆனால் அம்மாதம் 26-தேதி ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார்கள்.

கூட கோபுரங்கள், மாட மாளிகைகள், இயற்கை வனப்பு—இதெல்லாம் நிறைந்த இடம் வார்விக்ஷயர். சிறுவன் ஷேக்ஸ்பியர் இவைகளையெல்லாம் பார்த்திருக்கிறார். பெருமையை விளக்கும் பழங்கதைகள் பேசுவார்கள்; இவைகளையும் கேட்டிருக்கிறார். ஷேக்ஸ்பியர் இந்த விஷயங்களையெல்லாம் செலுத்திய கருத்தே அவர் புகழுக்கு இடமளித்தது.

தந்தை தற்குறி. இருந்தாலும் மகனைப் படிக்கவைக்க எண்ணினார். வில்லியம் ஷேக்ஸ்பியர் ஏழு வயதில் கிராமப் பள்ளிக்கூடத்திற்குப் போனார். முக்கியப் பாடம் இலத்தீனாகும்.

சிறுவனின் மனம் நாடக உலகை நாடியது. வெளியூர்களில் நடைபெறும் நாடகங்களைப்பற்றி சிந்திப்பார். தன் ஊருக்கு வரும் சிறு கூட்டத்தார்களோடும் கலந்துகொள்ள முயற்சிப்பார்.

வாலிபப் பருவம்

குடும்பம் பெரியதானது. வரும்படியும் குறைந்தது. ஷேக்ஸ்பியருக்கு உழைத்து சாப்பிடவேண்டிய நிலைமை வந்தது. எந்தச் சமயத்தில் பள்ளிக்கூடத்தை விட்டு விலகினார் என்று தெரியவில்லை. இதேபோல், கசாப்புகாரனிடம் வேலை பார்த்தார், வக்கீலின் குமாஸ்தாவாக இருந்தார், வைத்தியரின் வேலைக்காரனாக இருந்தார்—என்றெல்லாம் சொல்வதற்கும் தக்க ஆதாரமில்லை.

1582-ஆண்டின் முடிவில் வில்லியம் ஷேக்ஸ்பியர் அனே ஹாத்வே (Anne Hathaway) என்பவளை மணந்தார். ஏழு வயது மூத்தவள்; தனது நிலைமைக்கும் தாழ்ந்தவள். விவாகம் நடந்த வீட்டின் இடிந்த பாகம் இன்றும் இருப்பதாக காட்டப்படுகிறது. கல்யாணமான ஆறும் மாதம் சுசானா (Susanna) என்ற முதல் குழந்தை பிறந்தது. இரண்டு வருடங்கள் சென்றன. ஹாம்னெட், ஜூடித் (Hamnet and Judith) என்ற இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.

கஷ்ட காலம்

குடும்ப கஷ்டம் ஷேக்ஸ்பியரை வெளியேற்றி இருக்கலாம். சில நடிகர்களோடு சேர்ந்து ஓடிவிட்டார் என்பது கொஞ்சமும் நம்புவதற்கில்லை. சர் தாமஸ் லூசியின் (Sir Thomas Lucy) தோட்டத்தில் மான் திருடி இருக்கிறார். இதன் காரணமாகவே கிராமத்திலிருந்து துரத்தப்பட்டிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது பலரால்.

ஷேக்ஸ்பியர் இலண்டன் சேர்ந்தார். தினவாழ்வுக்கு கஷ்டப்பட்டிருக்கிறார். நாடகம் பார்க்க வந்தவர்கட்கு ஏவல் செய்திருக்கிறார். நாடகக்காரர்கட்கு வேலை செய்திருக்கிறார். ஆனால் தனது முயற்சியோடு கூடிய உழைப்பால் சீக்கிரத்தில் முன்னுக்கு வந்தார். 1592-ல் ஆண்டில் நடிகராகவும் நாடக ஆசிரியராகவும் பெயரெடுத்தார். முதலில் எதிர்ப்பு இருந்தது. பெரிய ஆசிரியர்களும் நடிகர்களும் ஷேக்ஸ்பியரைப் பழித்தனர். குறைவாக எழுதினர். ஆனால் மனங் குன்றாமல் தன் வேலையில் ஈடுபட்டார். முன் கேவலப்படுத்தினவர்களே இப்பொழுது புகழத் தொடங்கினர். இதெல்லாம் நாடக உலகில் நடந்த சம்பவங்கள். அவரது நாடகங்கள் அச்சாகவில்லை. பொதுமக்கள் அவரைத் தெரிந்து கொள்ளவில்லை.

புகழ்

ஜனங்களிடம் ஷேக்ஸ்பியரின் பிரதாபம் தெரியவில்லை. இதன் பொருட்டு வேறு துறையில் இறங்கவேண்டியும் வந்தது. 1593-ஆம் வருஷத்தில் வீனஸ்ஸும் அடோனிஸ்ஸும் (Venus and Adonis) என்ற பாட்டை எழுதினார். சவுத்தாம்டன் நகரின் இது சமர்ப்பிக்கப்பட்டது. பாட்டிலொரு புது அழகு; இயற்கையின் இன்பம் ததும்பியது. எல்லோரும் பிரியத்தோடு படித்தனர். வெற்றி ஆசிரியருக்கு அதிக ஊக்கத்தை அளித்தது. அடுத்த வருஷம் அதே பிரபுக்கு சமர்ப்பிக்கப்பட்ட லூக்ரீஸ் (Lucrece) என்ற பாட்டு வெளியாயிற்று. எங்கும் புகழ் பரவியது. அவர் பாட்டு வரும் புத்தகங்களுக்கே தனி மதிப்பு.

நடிப்புத்தொழிலை ஷேக்ஸ்பியர் விட்டுவிடவில்லை. "ராணியின் நடிகர்கள்" (Queens Players) என்றொரு சபா. இதன் நடிகராக சிறப்புடன் ஷேக்ஸ்பியர் இருந்தார். ஓய்வு காலங்களில் அரசியின் முன் இச்சபா நாடகங்கள் நடக்கும். பல பிரபல சிற்றுண்டி சாப்பாட்டு சாலைகள். இங்கெல்லாம் இந்த சபா நாடகங்களாடும்.

நடிகராகவும் நாடக ஆசிரியராகவும் ஷேக்ஸ்பியர் விளங்கினார். ஆனால் கதா ஆசிரியனாகவே அவர் புகழ் பிரகாசிக்கத் தொடங்கியது.

அதிர்ஷ்டதேவி அதிக அநுக்கிரகம் செய்தாள். சவுத்தாம்டன் நகரின் பிரபு போன்ற பெரியவர்கள் ஷேக்ஸ்பியருக்கு ஆதரவு காட்டினர். மகனின் பெருமை தந்தைக்கு உபயோகமானது. ஜான் ஷேக்ஸ்பியருக்கு 'ஜென்டில்மென்' பட்டம் வந்தது. 1597-ல் ஸ்டிராட்போர்ட்டில் புதிய இடமொன்றும் ஷேக்ஸ்பியர் வாங்கினர். அங்கும் இவர் மிகவும் போற்றப்பட்டார். ஆனல் மகன் ஹாம்னெட் (Hamnet) இறந்தான். இதனல் ஆசிரியர் வருத்த முற்ருர். 1598-ல் குலோப் (Globe) கொட்டகைக்கு நல்ல வருமானம். இதன் பாகஸ்தரான ஷேக்ஸ்பியருக்கும் பணம் நிறைந்தது.

அரசாங்கத்தில் கட்சி வேறுபாடுகள் வந்தன. ஷேக்ஸ்பியர் போன்றவர்கள் பெயர் இதில் இடம் பெருமல் போவதற்கில்லை. இதன் முடிவாக ஷேக்ஸ்பியரின் கூட்டம் வெளியூர்களைச் சுற்றி வரும்படியும் நேர்ந்தது.

ஜேம்ஸ் I (James I) சிம்மாசனம் ஏறினர். ஷேக்ஸ்பியரின் கூட்டத்தார்கட்கு ஆதரவு கொடுத்தார். அரசனின் நடிகர்கள் என்ற பட்டமும் வந்தது.

1604 வருஷத்திற்கு பின் ஷேக்ஸ்பியர் அதிகமாக நடிக்க முன் வரவில்லை. ஆனல் நாடகங்களில் அதிகமான கருத்துக்கள் தோன்றும்படி எழுதினர்.

1601-வருஷம் தந்தை இறந்தார். 1607-வருஷம் சிறந்த நடிகனை சகோதரன் இறந்தான். 1608-வருஷம் பெற்ற தாய் இறந்தார். அதே வருஷம் ஷேக்ஸ்பியருக்கு மகள் சூசான மூலம் பேரப்பிள்ளை பிறந்தது.

மரணம்

ஷேக்ஸ்பியரின் அந்திய காலமும் சந்தோஷமாகவே இருந்தது. 1613-ல் பால்க் பிரையர்ஸ் கொட்டகைக்கு (Balckfriars Theatre's) அருகில் பெரிய வீடு வாங்கினர். ஆனல் பிறகு இதில் குடியிருக்காமல் வாடகைக்கு விட்டுவிட்டார். அதே வருஷம் குலோப் கொட்டகை தீக்கிரையானது. இதோடு இத்துடனிருந்த ஷேக்ஸ்பியர் தொடர்பும் நீங்கியது.

1614-ஆண்டிலிருந்து அதிக பக்திமானுனர். பிப்ரவரி 1616-வருஷத்தில் இளைய மகளின் விவாகத்தை முடித்தார். அதே வருஷம் மார்ச் மாதம் நாடக ஆசிரியர் நோய்வாய்ப் பட்டார். மரண சாஸனமொன்று எழுதினர். மூத்த மகளுக்கே அதிக சொத்து கொடுக்கப்பட்டது.

23-தேதி எப்ரல் மாதம் 1616-ஆண்டு உலகம் புகழும் ஷேக்ஸ்பியர் உயிர் நீத்தார். இரண்டு நாட்களுக்குப்பின் கல்லடக்கம் நடந்தது. பெரும் புகழ் இருந்தும் தனது கிராம கல்லறையில்தான் சமாதி செய்யப்பட்டார். அங்கோர் மார்பு அளவு சிலை ஸ்தாபிக்கப்பட்டது. மற்றெல்லா சிலைகளை விட இதில்தான் நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் உண்மைத் தோற்றம் இருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

1670-வருஷத்தோடு ஷேக்ஸ்பியரின் குடும்பம் அழிந்தது.

ம[illegible] ... இருப்பது ... [illegible])

மணம் என்பது இருவகைப்படும், ஒன்று மலரில் தோன்றும் மணம்; மற்றென்று மக்களுள் நிகழும் திருமணம். மலரில் தோன்றும் இயற்கை மணத்திற்கும், மக்களுள் நிகழும் செயற்கை மணத்திற்கும் ஒப்பிடுங்கால் இரண்டும் ஒரே பொருளை உணர்த்துவது மகிழத்தக்கதாகும்.

மலரின் மணத்தை நோக்குங்கால் ஒரு விதையை யூன்றி, அது முளைத்து, செடியாகி, அரும்பு விட்டு, மொட்டாகி கடைசியில் அது மலராக மலர்கின்றது. மொட்டாக இருக்கும்போதே பல வண்டினங்கள் அதைச் சுற்றி யலைகின்றன. அது விரிந்தவுடன் அதிலுள்ள மணத்தினல் ஒரு வண்டு அதிலுள்ள தேனை உறிஞ்சுகின்றது. பல வண்டினங்கள் மலரைச் சுற்றி யிருந்தபோதிலும், தேனை உறிஞ்சுவது ஒரே வண்டுதான். பிறகு அதிலுள்ள மகரந்தம் மாற்றப்பட்டு இனம் விருத்தி செய்யப்படுகின்றது.

மக்களுள் நிகழும் திருமணம் என்பதனை நோக்குங்கால் ஒரு தலைவனும், தலைவியும் கூடி ஒரு பெண்ணை ஈன்று, அப் பெண் பேதையாகி, பெதும்பையாகி, மங்கையாகி, மடந்தையாக மலர்கின்ருள். (இப்பருவங்கள் முறையே 7, 11, 13, 19 வயதில் தோன்றுவனவாம்.)

மொட்டாக இருக்கும்போது வண்டினங்கள் பூவைச் சுற்றி அலைகின்றன. பிறகு அலர்தலுக்கும், வெடிர்தலுக்கு மிடையே வண்டானது பூவிலுள்ள தேனை உறிஞ்சுகின்றது. இதுபோல பெண்ணானவள் மங்கைப் பருவ மடைந்தவுடன் பல ஆடவர் அவளை விரும்பத்தக்க முறைக்கு ஆளாகிருள். மங்கைப் பருவத்திற்கும், மடந்தைப் பருவத்திற்கு மிடையே அவ்வது மணம் வீசப்படுகிறது. ஒரு தலைவன்-அம் மணத்திற்குரிய தலைவன் அவளை மணந்து கொள்கிருன்

ஒரு பூவானது வெடிர்ந்தவுடன் நறுமணம் கொடுத்து அது நுகருவோரை இன்பக் கடலில் ஆழ்த்துவதுபோல, பெண் மடந்தைப் பருவமடைந்தவுடன் தன் தலைவனை இன்புறச் செய்கிருள்.

மலரை விட மடந்தையர் மெல்லிய இயல்புடையவர் என்று புலவர்கள் கூறுகின்றனர். இதனுல்தான் வள்ளுவரும்,

> "நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
> மென்னீரள் யாம் வீழ்பவள்" என்ருர்.

அதாவது யாம் காதல் செய்யும் தலைவி பூவைப் பார்க்கினும் மெல்லிய இயல்புடையவள் என்பதாம்.

பெண்ணின் கண்களுக்கு மலரும் ஒப்பில்லை என்பதனை உணர்த்த வள்ளுவரும்,

> "காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கும்
> மாணிழை கண்ணெவ்வே மென்று" என்ருர்.

மலரிலுள்ள முக்கியமான பாகங்கள் அல்லி, புல்லி என்பனவாம். மண் மிருதுவானது—கவர்த்தக்கது—ஆண்டவனுக்கு உரியது.

பெண் மிருதுத் தன்மையுடையவள் — கவர்ச்சிக்குரியவள்—பெண் மூலம் ஆண்டவனை (சுவர்க்கத்தை) அடையலாம். இது தொட்டே பெண்

ஜ்யோதிஷ பல ரகஸ்யம்

(ஸி. பி. ஆனந்தம்.)

★

15. வியாழன்—ஸ்திதி பலம்

பொதுவில், வியாழனுடைய சுபாவ பலன்களுக்குரிய இடங்கள் (எல்லைகள்) வான மண்டலத்தே இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று இருநூற்று நாற்பது பாகை முதல் இருநூற்று எழுபது பாகை வரையும் உள்ள இடமாகும்; மற்றொன்று முன்னூற்று முப்பது பாகை முதல் முன்னூற்று அறுபது பாகை மட்டு முள்ளதாகும். இவற்றை முறையே "தனுஸ்" (Sagittarious)—"மீனம்" (Pisces) என்னும் ராசிகளாகக் கூறுவர். இவை வியாழனுக்கு அதன் சுபாவ பலனுக்குரிய "ஆட்சி வீடுகள்" (Ruling Houses in the Zodiac) என்பர். இவையிரண்டினும் முன்னது—அதாவது 'தனுஸ்' என்னும் ராசி வியாழனுக்குரிய சுபாவமான பலன்கள் நேர் முகத்து நிகழ்வதற்கான இயல்பு கொண்டது; பின்னது—அதாவது 'மீனம்' என்னும் ராசி வியாழனுக்குரிய சுபாவமான பலன்கள் எதிர் மறை இயல்பில் நிகழ்வதற்கானதாக விருக்கும். எனவே, இவ் வகைக் கண் வியாழனின் பலன்களில் நேர்முக—வியாழன் (Jupiter-Positive) எதிர் மறை—வியாழன் (Jupiter-Negative) என முறையே இரண்டு வித பலன்களைக் கொள்வர்.

இவ் விரண்டினுள்ளும் நேர்முகப் பலனுக்குரிய இடம் (தனுஸ்) அதிக பலம் வாய்ந்தது. இந்த ராசியின் முதலாவது வரும் பாகைகள் பத்தும் 'மூலத் திரிகோண' பலம் கொண்டது. அதாவது பாகை இருநூற்று நாற்பது முதல் பாகை இருநூற்று ஐம்பது மட்டும் வியாழனுக்கு மூலத் திரிகோண பலம் கொண்ட எல்லையாகும். மற்று, அதன் மேல் ராசி அந்தம் முழுவதும்—அதாவது பாகை இருநூற்று ஐம்பது முதல் பாகை இருநூற்று எழுபது மட்டும் ஆட்சி பலம் கொண்டதாய் நேர்முகத்து இயலில் (Positive) பலனுக் குரியதாக விருக்கும்.

ணின் பிலீ முகத்திற்கு சுவர்க்கம் என்று நம் மூதாதையர் பெயர் இட்டனர் போலும்!

மலரை நுகர்தல் பொருட்டு அதை எடுத்து கசக்கி நுகர்ந்தால் அது மணமுடைத்தாயிருக்குமா? அதுபோல, பெண்ணை—மலரைவிட மிருதுத் தன்மையுடைய பெண்ணை கசக்கி மணந்தால் அது உண்மையான மணமாகுமா?

அந்தோ! இவ்விரு மணமும் கடைசியில் பிணமாகும்.

தொண்ணூறு பாகை முதல் நூற்று இருபது பாகை மட்டும் இடம் பெறும் 'கடக ராசி' (Cancer) வியாழனுக்கு 'உச்ச' பலத்திற்குரியதாகும். இதில் முதல் ஐந்து பாகைகள் மட்டும்—அதாவது பாகை தொண்ணூறு முதல் பாகை தொண்ணூற்று ஐந்து வரையும் வியாழனுக்கு அதி உச்ச பலம் வாய்ந்த எல்லை என்பர்.

இந்த உச்ச ராசியான கடகத்திற்கு நேர் எதிர் கோடியில் இடம் பெறும் ஸப்தம (ஏழாவது) ராசி 'மகரம்' (Capricorn) "நீச ராசி" யாகும். இது பாகை இருநூற்று எழுபது முதல் பாகை முன்னூறு மட்டும் உள்ளது. இதிலும் உச்ச ராசியைப் போலவே முதலிலுள்ள பாகை ஐந்தும்-அதாவது பாகை இருநூற்று எழுபது முதல் பாகை இருநூற்று எழுபத்து ஐந்து வரையும் வியாழனுக்கு 'அதி நீச' எல்லையாகும். உச்சம்—அதி உச்சம் ஆகிய இந்த எல்லைகளுடன் ஆறு ராசி-அதாவது நூற்று எண்பது பாகைகளைக் கூட்ட முறையே-நீசம் அதி நீசம் என்னும் எல்லைகள் வரும்.

இந்த இடங்களில் நேர்முக பலனுக்குரிய தனுஸில் மூலத்திரிகோண பலம் வாய்ந்த எல்லைகள் பலம் பொருந்திய சிறந்த பலன்களும்-அதன்மேல் அந்த ராசி அந்தம் மட்டும் ஆட்சி பலமுள்ளதாகையால், வியாழனின் இயலான பலன்கள் நேர்முகத்துள்ளதாகவு மிருக்கும். எதிர் மறைப் பலனுக்குரிய 'மீனம்' என்னும் மற்றொரு ஆட்சி வீட்டில் குருவிற்குரிய ஆட்சி பல விசேஷம் எதிர்மறைப் பலம் கொண்டதாக நேரும். அதாவது தனுஸ்—மீனம் என்னும் ராசிகள் இரண்டும் வியாழனுக்கு ஆட்சி வீடுகளாயினும், அவற்றுள் முறையே நேர்முக—எதிர்மறைப் பலன்களில் பலம் அதற்கு உண்டாகிற தென்பது குறிப்பிற் கொள்ள வேண்டுவதாம்.

உச்ச ராசியில் (கடகத்தில்) அதி உச்ச எல்லை மட்டும் வியாழனுடைய பலன்கள் இக—பர வித்திகள் மொத்தத்தில் பொதுவாக வெகு மதிப்பிற்குரியனவாக நிகழும். மற்ற இடம் முழுதும் வியாழனுக்குள்ள உச்ச பலம் சாமான்ய கடையில் கெடுதிலும் இருக்கும்.

இதே விதம் இந்த உச்சத்திற்கு நேர் ஏழாம் ராசியான மகரத்தில் முதல் ஐந்து பாகை மட்டும் அதிநீச எல்லையாவதால், அதன் பலன் அதி உச்சத்திற்கு நேர்மாறாகவும்-இதர இடம் முழுவதும் சாதாரணமான நீச பலத்தும் இருக்கும்.

உச்ச—அதி உச்ச பலம் இகசித்திகளுக்கு உயர்ந்தது; நீச— அதிநீச பலம் அதில் மிகவும் குறைந்தது.

இந்தப் பலன்கள் உதய லக்னத்திற்கு (Ascendant) வியாழன் இடம் பெறும் எல்லையைக் கொண்டு (Position or Location) ஸ்திதிபலமும்—இதன் உரிய ஸ்வக்ஷேத்திர வீடுகளை அந்த லக்னத்திலிருந்தும் கணக்கிட்டு வியாழனின் ஆதிபத்திய பலமும்—சேர்க்கையில் வாய்க்கும் கோள்களின் பலன்களையும் அளவிட்டுப் பார்த்து சேர்க்கை பலனும் கண்டுகொள்ள வேண்டும்.

ஸ்திதிகளில் கேந்திரம் வியாழனுக்கு மிகவும் சுபகரமாகும்; ஆனால் ஆதிபத்திய பலன் மிகவும் தீயதென்று சொல்லி யிருக்கிறது. கோ

களும் — தலைவபக்களும் வியாழனுக்கு ஸ்திரியாக்க கிடைப்பின், நல்லது. இந்த நல்ல ஸ்தானங்கள் நட்பு—ஆட்சி-உச்சங்களாக இருந்தால் மட்டும் அதன் நற்பலன் பூரணமாக விருக்கும்.

பார்வைகள்—(Aspects)

ஒரு கோளின் பார்வையை திருஷ்டி—வீக்ஷண்யம்—அருள்-விழி என்று கூறுவர். கோள்களின் பார்வை என்று அவை வீசும் ஒளி பலம் ஆகும். கண் ஒளி வீசும் உயிர் வருக்கத்தின் இயல்களுக்குரிய பலம் அதற்கு இயற்கையில் இருப்பதுபோல, கோள்களின் ஒளி வீச்சிற்கும் அவ் அவற்றின் இயல்பில் பலமும்—பலனும் கற்பிக்கப்படுகிறது. பொதுவாக, ஒரு கோள் தன்னைச் சுற்றிய வானவெளி எங்கணும் தன் ஒளியை வீசிய போதிலும், அதற்குரிய இயலில் பலனுக்குள்ள இடங்களை நம் முன்னோர் கண்டிருக்கின்றனர். சாதாரணமாக எல்லாக் கிரகங்களுக்கும் அவை நிற்கும் இடத்திலிருந்து நேர் எதிர் கோடியான ஏழாம் ராசிக்கு அவற்றின் ஒளி வீச்சாகிய பார்வை பலத்தைச் சொல்வர். இதற்கு ஸமஸப்தம பார்வை என்று பெயர். இது எல்லாக் கோள்களுக்கும் உண்டு. எனவே, குறிப்பிடத்தக்க பலனில் பார்வைகளை யுடைய கிரகங்கள் சில. அவற்றுள் வியாழன் ஒன்று. இதற்குப் பொதுவான ஏழாம் ராசிக்குத் தரும் பலனைத் தவிர, விசேஷமான பார்வை இடங்கள் உண்டு. அந்த இடங்கள் வியாழன் நிற்கும்—அதாவது வியாழ அண்டம் இடம் பெற்றிருக்கும் (எல்லை) இடத்திற்கு திரிகோண ஸ்தானங்களாகும். இந்த ஸ்தானங்கள் இரண்டு. ஒன்று நூற்று இருபதாவது பாகை யிடத்தும்-மற்றொன்று இருநூற்று நாற்பதாவது பாகையிடத்தும் உள்ளன. இந்த இரண்டையும் முறையே ஐந்தாம்-ஒன்பதாம் இடத்திற்குத் தரும் பார்வைகள் எனலாம். இதைப் பொதுவில் திரிகோணப் பார்வை என்பர். இதன் பலன் நன்மையே யாகும்.

இன்னும் வியாழனுடைய இதர பலன்களுக்கு மற்று முள்ள கோள்களின் பலங்களும்-இயல்புங் கண்டு தான் கூறலா மாதலால், மேலே வியாழனை அடுத்த 'வெள்ளி' உலகின் விசேஷங்களைப் பற்றி அறிய வேண்டும். 'வெள்ளி' அல்லது 'சுக்ர'னின் விசேஷங்களை இந்த வியாழனை அடுத்து ஆராய்வோம். பலன்தரும் கோள்களில் நான்காவதாக வருவது இந்த 'சுக்ரன்' ஆகும்.

“குன்ம

(காரை - டாக்டர். மோஹன்.)

(502-இதழ் தொடர்ச்சி.)

மனிதன் உணவின்றி ஜீவித்திருக்க முடியாதென்பது உண்மை. இதை எவராலும் மறுக்க முடியாத அளவில் அதே உணவை அளவுக்கு அதிகமாக உண்டு அதிக நாள் ஜீவித்திருக்க முடியாதென்பதும் உண்மை. இதற்கு பசியறிந்து ஆகாரங்கொள்ள வேண்டியதுதான் முறை. வேளை வந்ததற்காக வெந்ததை அள்ளி திணித்துக் கொள்வதென்பது முறையாகாது.

சன்னியாசிகள், யோகிகள், தத்துவவாதிகள் ஆகாரங்களை குறைத்துக் கொண்டார்களென்றால் அதில் பெரியதோர் சாதகத்தை கண்டு கொண்டதால் தானே யொழிய, ஆகாரம் கிடைக்காததற்காக வன்று. மஹாத்மா காந்திஜீ அவர்களின் ஆகாரமுறைகளையும் அவர்களது உண்ணு விரதத் தத்துவத்தையும் சற்று சிந்தித்துத் தெளியுங்கள். அதில் எத்தனை மஹத்துவமுள்ளது.

உலகத்தில் எதைக் கொண்டும் சாதிக்க முடியாததொன்றை உண்ணு விரதத்தால் சாதித்து ஜயமடையலாம் என்று தத்துவார்த்தத்தை எண்பித்தவர்களில், அகில மலாயா தொழிலாளர் பிரச்சினைக்காக அரசாங்கப் போர் தொடுத்து உண்ணு விரதத்தால் ஜயமடைந்த ஸ்ரீ ஸ்வாமி மோஹன் அவர்களை உலகம் அறியும். தத்துவங்களி லெல்லாம் சிறந்த சாதனைக்குரியது உண்ணு விரதம்.

“பசி யறிந்துண்” “கிசியுணர்க் துறக்கு” “பொது அறிவுத் தீபம்.”

பசி யறிந் துண்பதும் ஓர் முக்கிய கர்மமாகும். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்னும் பழமொழி ஓர் சிறந்த தத்துவாதியின் அனுபவ சித்தாந்தமாகத்தா னிருக்கவேண்டும். ஏனெனில், மனிதனுக்கு பசி வந்தவுடன், காமம், குரோதம்,..................முதலிய காமாந்தகார எண்ணங்களான பத்தும் பறந்துபோய் மெய்யான விளக்கமுண்டாகி நல்லெண்ணங்களில், சிறந்த அறிவு அபிவிருத்தியும், ஞாபகசக்தி முதலிய சத்கிருத்தியங்களில் ஈடுபடுகிறான். பசி யறியாதவனுக்கு அறிவும், உரோஷமும், திடமும் இருக்காது என்பது “டாக்டர் ரொஜேக்” அவர்களின் சித்தாந்தம்.

“பசித்திரு-தனித்திரு-விழித்திரு” என்னும் போதனையை உலகோர்க்குணர்த்திய தீர்க்கதரிசியின் தத்துவத்தில் எத்தனை உயர்ந்த கருத்துக்கள் பொதிந்துக் கிடக்கின்றன. பசித்திருந்து உணர்ச்சி பெறுத ஜன்மம் பரகதி யடைந்து விடுவதென்பது சாத்தியமன்று. தபசிகளின் தத்துவமும் இதுவே. எந்த நோய் பற்றின சரீரியானாலும் பசிக்கும் வரையில் பொறுத்திருந்து பசி உணர்ச்சி உண்டானதின் பின் ஆகாரங் கொள்வதோர் நோய் நிவர்த்திக்கும் மார்க்கமாகும். குடல்புண் உண்டாவதற்கும் அது மருந்து குன்மக்கட்டியாகி துன்பம் விளைவிப்பதற்கும் காரணம் உணவிலிருந்து யாதலினால் உணவு உண்ணும் விஷயத்தில் அதிக ஜாக்கிரதையும் நிதானமும் அவசியமாகும்.

“பசியறிந் துண்.”

தாய்நாடு.

(நா. சிவபாத சுந்தரம்.)

பெற்ற தாயைப் போலவே பேசும் மொழியையும், பிறந்த நாட்டையும் போற்றிப் பாராட்டுவது மக்கள் கடமையாகும். மொழிக்குத் தெய்வமாகிய கலை மகளைத் தாயாகவே கருதி வழிபடுவது கற்றோர்கள் இயல்பு. அவ்விதமே நிலமகளையும் அன்னையாய் வணங்கி வருவது நம் நாட்டினர் வழக்கம்.

முற்காலம் முதற்கொண்டே தம்தம் நாட்டினிடத்தே அன்புகொள்ள வேண்டுமென்ற கொள்கை இருந்துவருகிறது. காப்பியங்களில் கடவுள் வணக்கத்திற்குப் பிறகு நாட்டுப் படலம் சொல்லப்படுகிறது. பண்டைப் புலவர்கள் தாய்நாடு பற்றிப் புகல்வதை நோக்குவோமானால் நாம் பற்று வையாமல் விடமுடியாது.

பாருங்கள் நக்கீரரென்னும் நல்லிசைப் புலவரை. தாய்நாடு விட்டுத் தனிவழி செல்ல நேர்ந்தது. அப்போது அவர் ஆற்றும் மொழிகள் பல. அவற்றில் அவரகத்தைப் பிளந்து முதல் வெளிவந்தது தாய்நாட்டைப் பற்றியே.

"என்றினி மதுரைகாண்போம் எப்பகல் சவுந்தரேசன்
தன்னிருவடிகள் காண்போம் தாயை யென்றுகாண்போம்
....
...."

என்று நக்கீரச் சருக்கம் கூறும். இன்னும் பிரசங்க நூல்களில் எல்லாம் தலைவனை தலைவி வியக்கும்போதும் தோழி தலைவனை விளிக்கும்போதும் எல்லாம் தலைவனின் தாய்நாட்டைப் பற்றிக் கூறியே தலைவனைப் பற்றிய பிற விஷயங்கள் எழுகின்றன.

ஒரு தோழி விளிக்கிறாள். "சேர்பனே! நீ இங்ஙனம் நிலையில்லாது வருகின்ற வரவினை மறந்துவிடு. நறுமணம் வாய்ந்துள்ள முள்ளுள்ள தாழையின் நீண்ட வெண் மொக்கைக் குருகு தனது குஞ்சு என்றே நினைத்துத் தான் கொண்டுவந்த இரையை அதன் வாயில் பெய்து அது உண்ணாமையால் தானும் இரைகொள்ளாமலே மிகவும் மனமுருகிச், சுடுகின்ற வெயிலைத் தனது சிறகால் அதன்மேற் படாதபடி மறைத்து நிழல்செய்து வாழும் கடற்கரையை யுடைய தலைவனல்லனோ" நீ என்றாள்.

"முருகுவாய் முட்டாழை நீண்முகை பார்ப்பென்றே
முருகுவாய் பெய்திரை கொள்ளா—துருகிகு
இன்றுவெயில் சிறகால் மறைக்கும் சேர்ப! நீ
மன்று வரவு மற."

என்று கவி வரைந்தார். இதில் தோழி தலைவன் தகாததைப் புரியும்போது, "ஏ! தலைவ! உன் நாடு இன்ன இன்ன வளமுள்ளதாய் மிளிர நீ ஏன் இவ்விதம் புரிகிறாய். உன் தாய்நாட்டின் இயற்கையைப் போன்று நீயுமன்றோ மிளிரவேண்டும்" என்று அறிவூட்டும் அழகுதான் என்னே!

அகப்பொருள் விஷயங்களில் ஆராயப்போனால் தலைவனைத் தலைவி அணி வகுக்கும்போது தாய்நாடு தலைநிமிரும். தலைவி தோழியை நோக்கிக் கூறுகிறாள். நம் தலைவனுக்குரிய மலைநாடு எப்படிப்பட்டது என்று தெரியுமா? பலரும் தங்குவதற்குரியதொரு பொது விடத்தில் பலா மரங்கள் இருக்கின்றன. அவற்றில் சுளைகள் முதிர்ந்து இனிப்பான பழங்கள் நிறைய உண்டு. அவற்றை மந்திகள் அஞ்சாமல் தாராளமாக வந்து உண்ணுகின்றன. உடனே அவற்றிற்கு நீர் வேட்கை உண்டாகிறது. அச்சமயம் பக்கத்தில் புல் மேய்ந்துகொண்டிருக்கும் காட்டுப் பசுக்களிடம் போய் அவற்றின் மடிகளை வருடுகின்றன. ஆவும் அச்சமின்றி வேறுபாடு கருதாமல் தம் கன்றுகளைப்போல விரும்பி பால் சுரந்து அம்மந்திகளை உண்பிக்கின்றன. இங்ஙனம் நம் தலைவன்-நம் காதலனது தாய்நாட்டில் சிற்றுயிர்கள் கூடத் தமக்கு இனமில்லாத பிற உயிர்களுக்கும் அருள் செய்வனவா யிருக்கின்றன. இத்தகைய மலைநாட்டைத் தாய்நாடாகக் கொண்டிருக்கிறான் நம் தலைவன். அவன் நாடு இங்ஙனமென்றால் அவனும் என்னிடம் இவ்விதமே யிருக்கிறான். அத்தகைய தலைவரை விட்டுத் தனித்திரேன்.

"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுவந்து மந்தி முலைவருடக்—கன்றமர்ந்து
ஆமா சுரக்கும் அணிமலை நாடனை
யாமாப் பிரிவது இலம்"

என்று ஐந்திணையில் காணப்படுகின்றன.

இன்னொன்று, தலைவன் சிலநாள் தலைவியைப் பிரிந்திருந்தான். பின் வந்தான். வந்து ஒருநாள் தோழியை நோக்கி, "நான் இங்ஙனம் பிரிந்திருந்தபோது நீங்கள் என்னென்னவோ நினைத்திருப்பீர்கள்" என்று வினவுகின்றான். அதற்கு தோழி கூறும் விடையைப் பாருங்கள்,

"..............................யாமே
பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்
கழனியூரன் மார்பு
பழனமாகற்க என வேட்டேமே"

"நாங்கள் உமது தாய்நாட்டின் தனி வளத்தை, 'பூத்த கரும்பினையும் காய்த்த நெல்லினையுமுடைய கழனிகள் சூழ்ந்த தாய்நாடு அன்றோ தலைவனின் ஊர்' என்று கருதினோம். ஆனால் உங்கள் மார்பு அக்கழனிகள் போல ஆகிவிடக்கூடாதே என்று விரும்பி உங்கள் தாய்நாட்டை எண்ணிக்கொண்டிருந்தோம்" என்று சொன்னாள். பாருங்கள், அக்காலத்தில் மக்கள் இயற்கையிலே பிறந்து இயற்கையிலே வளர்ந்து, இயற்கையே உண்டு; இயற்கை வள மொழி பேசுவதை எண்ணுந்தோறும் உவகை பூக்கிறதன்றோ!

இன்னோரிடத்தில் அகப்பொருள் அழகுற தோழி தலைவனை அ[illegible] விளிக்கிறாள்.

"மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்கல் இளமழை புடைக்கும் நாட!"

இவ்விதமாக இதயம் இதமுற அநேகமுண்டு. "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்ற விரிந்த அன்புடைய புலவர்களும் தம்முடை[illegible]

நாட்டில் தனியன்பு வைத்திருக்கின்றார்கள். தாம் தாம் மேற்கொண்ட பொருளுக்கு ஏற்பப் பல நாடுகளையும், வருணிக்க ஆற்றலுடையவர்களாயினும் தாய்நாட்டன்பு அவர்கள் உள்ளத்தின் இருந்து வந்ததற்குரிய அடையாளங்கள் அவர்கள் வாக்கினிடையே இருத்தலைக் காணலாம். கம்பர் பரதன் தன் நாட்டைக் கடந்து சித்திரகூடத்தை நோக்கிச் செல்லுகின்ற செய்தியை,

"காவிரி நாடன்ன கழனி நாடொரீஇ"

என்று புலப்படுத்துகின்றார். இன்னோரிடத்தில்

"பொன்னி நாட்டுவமை வைப்பைப்
புலன்கொள நோக்கிப் போனான்"

என்று தெரிவிக்கின்றார். ஒரு நாட்டின் தனி வளத்தை நாவந்த கம்பருக்கு அவரது தாய்நாடே உவமையாக முன்வந்து நிற்கிறது.

ஆகவே, தாய்நாட்டன்பு மக்களுக்கு இருத்தல் இயல்பென்பதும் அதனைப் பாராட்டுதல் புலவர்களிடத்தும் பிறரிடத்தும் காணப்படுவதென்பதும் இதுகாறும் தெரிவித்த செய்திகளால் அறியலாகும்.

கட்டுரையாளர் கவனிக்க.

கட்டுரையாளர் தாங்கள் எழுதும் கதை கட்டுரைகளைப் புக்போஸ்டில் அனுப்பும்போது, ஸ்டாம்பைக் கவரின்மீது சரியாக ஒட்டி அனுப்பவேண்டும். தபால் அதிகாரிகள் கட்டுரைகளைப் பரிசோதிப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்படி கவரை ஒட்டவேண்டும். 'ஆனந்த'னுக்கு வியாசம் அனுப்பும் நேயர்களில் பலர் கவரில் பாதியும் கட்டுரை யெழுதியுள்ள காகிதத்தின்மீது பாதியுமாக ஸ்டாம்பை யொட்டி அனுப்புகின்றார்கள். மற்றுஞ் சிலர் கவரை மூடியும், அதன்மீது கயிற்றைக் கட்டியும் அனுப்புகின்றார்கள். இது தற்போதைய தபாற் சட்டத்திற்கே விரோதமான தாகையால், மேற்குறித்த விதமாகவுள்ள கவர்களுக்கு இரட்டிப்பாகத் தபாற் கட்டணம் வாங்கிவிடுகின்றார்கள். இதனால் நமக்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுகின்றது. இதையெல்லாம் கவனித்துக் கட்டுரையாளர் நடந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திராதிபர்.

கவிழ்ந்த படகு

(க. ரா. நரமடங்கற் கோ.)

மாலைக்காலம். அந்திமயம். வானமிருண்டு கிடந்தது. பெருங்காற்று—புயற்காற்று போராசு புரிந்தது.

இலாகெயில் என்பது ஓர் நீர்ப்பரப்பின் பெயர். நீர் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அலைகள் நீண்டு புரண்டன—சுருண்டன.

அன்றுதான் மூன்றாம் நாள்.

அல்வா தீவினதிபன், ஆலின்கணவனால் பின் தொடரப்படுவானாகி ஆண்டு உற்றனன். அதிபனைக் காமுற்ற ஆலின் குமரியுமவனுடனுளள். நீரைக் கடிதின் கடக்க நாவாயோட்டியை உற்று அதிபனு முரைப்பன்:—

நாவா யோட்டியோய் ! நாவா யோட்டியோய்!
ஓவா திசைக்கும் ஒண்ணீர்ப் பரப்பைக்
கடந்து யாமுங் கரைசேர்த் திடுவை;
சுடரொளி வெள்ளித் தூயநன் காசொன்
றுன மகிழ்த் தருவம், ஓட்டுதி—தாழ்காய் !

படகோட்டி:—

நீவிர் யாவர் ? நிகரின் றிலங்கும்
புவிமகிழ்ப் பொன்றுப் பொலிவும் பெற்றப்
பேதையு மாவர் ? பின்னும் போந்ததின்
காதையு மாதாம்; கவிந்திருண் ஞாலத்துச்
சூறுவளியுஞ் செற்றம் மிக்கத்
தேறு காற்றுந் திரண்டெண் டிசைமிக
இலாகெயின் (Logagyle) றன்னை யீங்குநீர் கடக்க ?

அதிபன்:—

ஓகோ ஓகோ உணர்த்துவன் கேணீ ;
அல்வா (ULVA) தீவினதிபன் யானு
மல்லின் (ULLIN) கனவ னருமைப் புத்திரி
இவளும். எம்மையு மிரண்டொரு பகலாய்
இவளின் றந்தையு மிடைவிடா தொடர்வன்;
பரிபல பயர்தப் பயமிலி வீரருந்
துரிதமாய்த் தொடர்ந்துத் தொலைப்ப ரென்றுயிர்;

[ஆங்கிலத்திலுள்ள Lord Ullin's daughter என்ற கவியின் மொழி பெயர்ப்பு.]

[illegible] ன் காதலை
ருயிரனைக் காதலை னொழிக்கப் பிறைக்
காரிகை யிவட்குக் களிப்பெது காணுமோ ?

ஓட்டி:—

ஓட்டுவன் விரைவில் உந்துதற்குத் தயார் ;
நீட்டு நீளொளி நின்பணைத் தன்று,
வேட்டன் விரும்பி யிருந்துப் பெற்றத்
தீட்டுநல் கண்ணுடைத் தீநிலன் பொருட்டே,
பெட்புடை யுன்றன் பெடையைக் காக்கக்
கட்டுரைத் தமாற்றன் கடவா திற்பன்;
வெண்பரி பந்தயம் பயிற்றல் போன்றுத்
தண்கா லலைபல தாண்டித் துமிக்க
வெஞ்சினம் பயின்ற வெம்மலை நீரி
னஞ்சா தேற்று அருநீர்க் கடப்பன்.

காற்றுங் கடுகடுத்து மிருந்தது. திரை திரை அலை பல நீண்டுப் புரண்டன. அந்த வெற்பிடை யிலாதவன் சாய்தலா வஞ்சிக் கூம்பிய வணிமலரனைய வஞ்சிக்கொடியும் மற்றவர் வதனமுங் கருகியது. மருட்டு மிருள் சூழ் திரவு மெழுந்தது. அம்பரி காலடி யருகி லொலிப்பவு மஞ்சிய வஞ்சியல் நெருங்கின் றுறைதையென்று நேர் நேருணர்ந்தனன். ஆகலின் வாட்டங் கொண்டு வோட்டியை நோக்கி அயல்விழி யனங்கு மவனுக்குரைப்பன்—

சடுதி லோட்டுதி ! சடுதி லோட்டுதி !
கடுபுய னெம்மைக் களிந்துச் சூழப்
படுதுயர் வானினைப் பற்றுவ னல்லது
கொடு சினத் தாதையைக் குறுகுவ னல்லேன்.

—நாவாய் நகர்ந்தது. சூறுவளியுடஞ் சூழ்ந்தது படகு. ஆடுகள மகன்போ லசைத்தது. அஃது தனையளைத் தேடித் தாதையுங் கரையைக் குறுகினன். ஆடுபடகில் தேடுமவன் விழி பீடுறுமவளைப் பரிந்துக் கண்டது. மகன் பால் கோபந் தணிந்தது—தாபம் மிக்கது. காதலன் காமுங் காதலி காமு மோதற்கரிதா யொருவரை யொருவர்ப் பிணைத்திடச் செய்தது. அதனைக் கண்டு வன்பே மிக்குத் தந்தையு மாற்றுவன்—

எனதின் மகளாய் ! என்னுயிர் மகளாய் !
உன்ற னுயர்நில வொண்ணெதி பனைய
மன்னிப் பீந்தேன், மாற்றங் கேளாய்;
வருகுதி இப்பால்; விரைகுவை இப்பால் !

—ஆயினந்தோ கவிழ்ந்தது படகு. நந்தங் காதல ருயிரு மவிழ்ந்தது. தாதைத்துயருஞ் சாற்றற்கரியது. காலச்சக்கரங் கடிதி லுருண்டது. பய லில யென்றுப் பார்து வெண்ணலையும் வியனிடைத் தரையில் விம்மிப் புடைத்தது, ஞாலமேல் காதலர் நீங்கப் பெற்றனர்.

கவிழ்ந்த படகிலுங் கொழித்தது வின்பம்,
அலைகற் றணிந்து வமைதியுஞ் சூழ்ந்தது.

நூதன மார்வாடி

(ஏ. ஆர். ராஜகோபாலன்.)

✶

8-வது அத்தியாயம்

வீரமார்த்தாண்டனின் ஒப்பந்தம்

சற்று நேரம் வரையில் பிரமித்து நின்று கொண்டிருந்த கருணாகரன் தன் சுயவுணர்வை யடையச் சிறிது நேரமாயிற்று. உடனே அவன் தன் கைக் கெடியாரத்தைப் பார்த்தான். சரியாய் மணி 8-35.

அப்பொழுது கருணாகரனுக்குத் திடீரென்று, புருஷோத்தமனின் ஞாபகம் வந்தது ! தோப்பில் சற்று நேரத்திற்கு முன் நடந்த விஷயங்களால் 'இன்னும் சிறிது நேரத்தில் அதாவது சரியாய் 9 மணிக்கு புருஷோத்தமன் மீண்டும் தோப்பிற்குச் செல்வான்' என்பது கருணாகரனுக்குத் தெரிந்திருந்தது ! அதற்குள் புருஷோத்தமனைச் சந்திக்க விரும்பினான் கருணாகரன் ! அவன் மூலமாக ஒரு சிறிதாவது விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்பினான்.

உடனே கருணாகரன் மீண்டும் 170-ம் நம்பர் வீட்டை நோக்கி நடக்கவாரம்பித்தான். வெகு சீக்கிரத்தில் 170-ம் நம்பர் வீட்டை யடைந்த கருணாகரன் அங்கு இன்னும் கும்பல் இருப்பதையும், வீரமார்த்தாண்டனைப் பற்றி அவர்கள் வியப்புடன் இன்னும் பேசிக்கொண் டிருப்பதையும் கண்டான் !

அதே சமயத்தில் 170-ம் நம்பர் வீட்டிற்கு எதிர்த்த சாரியில் ஒரு மோட்டார் நின்று கொண்டிருப்பதையும், அதன் முன் பக்கத்தில் புருஷோத்தமன் உட்கார்ந்து கொண்டு ஆழ்ந்த சிந்தனையிலிருப்பதையும் கவனித்தான் கருணாகரன் !

உடனே மெதுவாகச் சந்தடி செய்யாமல் எதிர்ச்சாரிக்குச் சென்று, முன் பக்கத்துக் கதவைத் திறந்து, காரின் உள்ளே ஏறி புருஷோத்தமனின் பக்கத்தில் 'தொப்' என்று உட்கார்ந்தான். அப்பொழுது மிகவும் துணிவுடன் இருந்தான் கருணாகரன் !

அப்போது புருஷோத்தமன், திடீரென்று கருணாகரனைத் தன் பக்கத்தில் கண்டதினால், வியப்பும் கலவரமும், திகிலு மடைந்தான் !

பிறகு கருணாகரன் பக்கம் திரும்பி, "யாரையா ! நீ; உனக்கென்ன வேண்டும்; ரொம்ப சுதந்திரமாகப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து வி[illegible]டாயே ! உம் !" என்றான்.

கருணா:—"ஐயா ! பதறாதேயும் நான் உம்மிடம் சில விஷய[illegible] கூறவே இங்கு வந்திருக்கிறேன். நான்தான் முதன்முதலில் உமது ம[illegible] கொலை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தவன். அந்த முரட்டு மனி[illegible] கொலை செய்தவன் நானே !

புருஷோ:—(இடை மறித்து) "அப்படியானால் நீர்தான் வீரமார்த்தாண்டனாக இருக்கவேண்டும்!—நீர் சொல்வது உண்மையானால்!—"

கருணாகரன் அதற்குப் பதிலாக தன் சட்டைப் பையிலிருந்து, 'தான் இறந்து கிடந்த புருஷோத்தமன் மனைவியின் பக்கத்திலிருந்து எடுத்த—கடிதத்தை எடுத்து புருஷோத்தமனிடம் கொடுத்து, "நான், உம் மனைவி கொலை செய்யப்பட்டிருந்த இடத்திலிருந்து இக் கடிதத்தைக் கண்டெடுத்தேன். இதிலுள்ள விஷயத்தைப் படித்தபிறகு 'போலீசாருக்கு இது தெரியக்கூடாது' என்ற எண்ணத்துடன் நானே இதை எடுத்துக் கொண்டேன்," என்று சொன்னான்.

கடிதத்தைப் பிரித்துப் படித்த புருஷோத்தமன் முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றிற்று!

கருணா:—"இக் கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறதென்று தெரிகிறதா!"

புருஷோ:—"முகமூடியினிட மிருந்து வந்திருக்கிறது"!

கருணா:—"அவனிட மிருந்துதான் வந்திருக்கிற தென்கிறாயே! ஏன் இப்படியாக அவன் எழுதி யிருக்கிறான்? அவனுடன் உனக்கென்ன சம்பந்தம்?"

புருஷோ:—"கடவுள்தான் என்னை மன்னிக்கவேண்டும்! அவனிடம் தெரியாத்தனமாக அகப்பட்டுக்கொண்டு இப்படி முழிக்கிறேன்!"

கருணா:—"பின், அதென்ன விஷயம்?"

புருஷோ:—"முடியாது! முடியாது! நான் சொல்ல முடியாது. அதைச் சொல்வதற்கே எனக்குத் துணிவில்லை! ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன்! முகமூடியின் கையில்—வஞ்சக வலையில்—சிக்கியவர்கள், திரும்பித் தலையெடுக்க முடியாது. அவர்களுக்கு தற்கொலைதான் கடைசி முடிவு."

கருணா:—"இல்லை! அப்படி நினைக்காதே. இந்தச் சிக்கலினின்றும் நான் உன்னைக் காப்பாற்றுவேன். வீரமார்த்தாண்டன் 'சொன்ன சொல் தவறாதவன்' என்பது உனக்குத் தெரியாதா!"

புருஷோத்தமன் இப்பொழுது நிமிர்ந்து உட்கார்ந்தான்.

கருணா:—"உன் குழந்தை முகமூடியினிடம் இப்பொழுது இருப்பதற்காகக் கவலைப்படுகிறாயா?"

புருஷோ:—"அதைத் தவிர பல விஷயங்கள் முன்னாலேயே நடந்திருக்கின்றன!"

கருணா:—"நீ முகமூடியினிடம் ஏதாவது கடனாகப் பணம் பெற்றிருக்கிறாயா?"

புருஷோ:—"அது உனக் கெப்படித் தெரியும்?"

அப்போது புருஷோத்தமனுக்கு ஆச்சரியம் அதிகமாயிற்று. அவன் [illegible] அதிக நிதானமாக உற்றுப் பார்த்தான்.

கருணா:—"ஏன், என்னை அப்படிக் கவனிக்கிறாய்? இது கடன் வாங்கிய முகம், வீரமார்த்தாண்டனின் நிஜமுகம் ஒருவருக்கும் தெரியாது!........ அதிருக்கட்டும்! முகமூடியின் இக் கடிதத்திலிருந்துதான், நீ அவனிடம் ஏதோ கடன் வாங்கி யிருக்கிறாய் என்று தெரிகிறதே. இதில் என்ன ஆச்சரியம்?"

புருஷோ:—"ஐயோ, கடவுளே! நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?"

கருணா:—"ஆதியோடந்தமாக விஷயத்தைச் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் வீரமார்த்தாண்டன் உன் பக்கத்திலிருப்பான். அப்போது உன்னை யாரும் அசைக்க முடியாது!"

புருஷோத்தமன்:—"ஒரு காலத்தில்—சுமார் 5–6 வருஷங்களுக்கு முன் நான் வியாபாரியாக விருந்தேன். திடீரென்று ஏற்பட்ட நஷ்டத்தால் நான் மிகவும் க்ஷீணதிசையடைய என் வியாபாரமே அடியோடு அழிந்தது. அப்பொழுது எனக் கேற்பட்ட அபகீர்த்தியைப் பொறுக்காமல் நான் தற்கொலை செய்துகொள்ள எண்ணினேன்...............

"ஒருநாள் திடீரென்று, இரவு 10 மணிக்கு என் வீட்டுக் கதவை யாரோ மெதுவாகத் தட்டினார்கள். அப்பொழுது என் மனைவியும் (இந்த விடத்தில் புருஷோத்தமனின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் உதிர்ந்தன.) இரண்டு வயதுக் குழந்தையும் நிம்மதியாகப் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், கவலையால் கவரப்பட்டு நித்திரையின்றி யிருந்த நான் உடனே எழுந்து சென்று கதவைத் திறந்தேன்.

"அங்கே, ஒரு நெடிய மனிதன் நின்று கொண்டிருந்தான் அவன் பகட்டான உடைகள் அணிந்து கொண்டிருந்தான். அவன் தன் முகத்தில் முகமூடி யிட்டிருந்தான். அப்போது அவன் வலது கையில் ஒரு துப்பாக்கி பள பள வென்று மின்னிக் கொண்டிருந்தது; இடது கையில் ஒரு கருப்பு மூட்டை இருந்தது. அவன் துப்பாக்கி முனையால் என்னைத் தள்ளிக் கொண்டே உள்ளே வந்து, சந்தடி செய்யாமலிருக்கும்படி கட்டளை யிட்டான்............"

இப்பொழுது புருஷோத்தமன் திடீரென்று தன் பேச்சை நிறுத்தினான். அவன் முகத்தில் அப்பொழுது கலவரக் குறிகள் தோன்றின.

அப்பொழுது கருணாகரன் மனம் பறந்து கொண்டிருந்தது. அவன் தான் சரியான கட்டத்தில் இருப்பதாக உணர்ந்தான். தவிர புருஷோத்தமனின் உதவியால மிகவும் எளிதில் இக் காரியத்தைச் சாதிக்க விரும்பினான்! ஆகையால், தன்னையும் அறியாமல் "உம்! ஆகட்டும்," என்று [illegible]டளை யிட்டான்.

உடனே உடைந்த குரலில் மீண்டும் ஆரம்பித்தான், புருஷோ[illegible] "அப்படி வந்த மனிதன், தன் பெயர் முகமூடி மனிதன் என்றும் புருஷோத்தமனுக்கு உதவி செய்யவே வந்திருப்பதாகவும் கூறினான். தன் இடது கையிலிருந்த மூட்டையைப் பிரித்து, அதிலிருந்து [illegible] ரூபாய்களை, (நோட்டுக்களாகவும், ரூபாய்களாகவும் எடுத்துக்) [illegible]ன் மேஜையில்.

"பிறகு என்னைப் பார்த்துச் சொன்னான், "புருஷோத்தமனே! நான் உனக்கு உதவி செய்வதற்காகவே வந்திருக்கிறேன். இப் பணம் முழுவதும் உன்னுடையதே. நீ தற்கொலை செய்து கொள்ள நினைத்திருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இப்போது அந்த மாதிரி பைத்தியக்காரச் செய்கைகளையெல்லாம் செய்யாதே! இந்தப் பணத்தைக் கொண்டு மறுபடியும் ஏதாவது வியாபாரம் செய்ய ஆரம்பி! இன்றைய தேதியிலிருந்து உனக்கு இன்னும் ஆறு வருஷத்திற்குத் தவணை கொடுக்கிறேன். அதற்குள் நீ எப்படியாவது என் பணத்தைக் கொடுக்க வேண்டும்-வட்டியுடன்!-அப்படிக் கொடுக்கத் தவறினால் நீ தற்கொலை செய்து கொள்ள வேண்டும்!

"ஆனால், இப்பொழுது என்னிடம் உள்ள 'பாலிஸி' ஒன்றில் நீ கையெழுத்திட வேண்டும். அதற்குச் சாட்சியாக உனது மனைவியும் கையெழுத்திடச் செய்ய வேண்டும். தவிர, 'ஆறாவது வருஷ முடிவிற்குள் நீ பணத்தைத் திருப்பிக் கொடுக்கா விட்டால்,—நீ தற்கொலை செய்து கொள்ளுகிறாயல்லவா!—அப்பொழுது இந்த இன்ஷியூரன்ஸ் பணம் முழுவதும் என்னைச் சேர்ந்து விட்டதாக," எனக்கு ஒரு தனிக் காகிதத்தில் எழுதி உன் கையெழுத்தையும், உன் மனைவியின் கையெழுத்தையும் இட்டுத் தரவேண்டும். தெரிகிறதா, என்ன சொல்லுகிறாய்!"

என்று பல விஷயங்களைக் கூறி முடித்து ஒரு கேள்வியைக் கேட்டான். அப்பொழுது நான் பைத்தியம் பிடித்தவன் போலிருந்ததால் உடனே அந்தப் 'பாலிஸி'யில் கையெழுத்திட்டதுடன், அவன் கேட்டவாறு கடிதத்தையும் எழுதிக் கொடுத்தேன். பிறகு என் மனைவியை எழுப்பி, அவளிடம் விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லி அவளையும், அந்தப் பாலிஸியிலும், கடிதத்திலும் கையெழுத்திடுமாறு கூறினேன். அவள் என் வார்த்தையை மீறாத உத்தமியாதலால் (இவ்விடம் புருஷோத்தமனின் குரல் கம்மிற்று.) உடனே இரண்டிலும் கையெழுத்து செய்து கொடுத்தாள். உடனே பண மூட்டையை அப்படியே மேஜையில் வைத்து, அந்த மனிதன் போய் விட்டான்...............

இப்பொழுது கருணாகரன் இடைமறித்து, "அந்த 'பாலிஸி'யில் எவ்வளவு தொகைக்கு இன்ஷியூரன்ஸ் செய்திருந்தாய்?" என்று கேட்டான்.

புருஷோ:—"அந்தப் பாலிஸியிலேயே, 50.000 ரூபாய் என்று முன்னதாகவே எழுதப்பட்டிருந்தது. நான் வெறும் கையெழுத்தை மாத்திரம் இட்டேனே ஒழிய பாக்கி எல்லா விஷயங்களும் அந்தப் பாலிஸியிலேயே எழுதியிருந்தன!"

கருணா:—"பேஷ்! பத்தாயிரம் ரூபாய்க்கு 50,000 ரூபாய்! உம், பிறகு, [illegible] நடந்தது?"

(தொடரும்.)

தே தி	...ஹோரை			சூரியன்.		...ரன்.		...ரகன்.		[illegible]		...ரு		...ரன்.		...ரை.		ராகு.	
	ம	[illegible]	ச	பா.	க.	பா.	க.	பா.	க.	பா.	க	பா.	க.	பா.	க.	பா	க.	பா.	க.
1	17	30	32	60	21	73	32	97	52	56	27	66	31	22	37	41	53	134	37
2	17	34	29	61	17	85	32	98	29	55	54	66	46	23	47	42	1	134	34
3	17	38	25	62	14	97	48	99	6	55	21	67	0	24	57	42	9	134	31
4	17	42	22	63	11	110	10	99	43	54	48	67	14	26	7	42	17	134	28
5	17	46	19	64	8	122	42	100	20	54	15	67	29	27	17	42	25	134	24
6	17	50	15	65	5	135	32	100	58	53	42	67	43	28	28	42	32	134	21
7	17	54	12	66	2	148	42	101	35	53	9	67	58	29	38	42	41	134	18
8	17	58	8	66	59	161	53	102	12	52	36	68	12	30	48	42	48	134	15
9	18	2	5	67	56	175	25	102	49	52	36	68	26	31	58	42	55	134	12
10	18	6	1	68	53	189	13	103	25	52	36	68	41	33	8	43	4	134	8
11	18	9	58	69	50	203	17	104	2	53	10	68	55	34	19	43	12	134	5
12	18	13	54	70	47	217	28	104	38	53	43	69	10	35	29	43	19	134	2
13	18	17	51	71	43	281	42	105	15	54	17	69	24	36	39	43	27	133	59
14	18	21	48	72	40	245	35	105	52	54	51	69	38	37	49	43	35	133	56
15	18	25	44	73	37	260	1	106	28	55	25	69	53	38	59	43	43	133	53
16	18	29	41	74	34	274	38	107	5	55	59	70	7	40	10	43	50	133	49
17	18	33	37	75	81	288	43	107	41	56	32	70	22	41	20	43	58	133	46
18	18	37	34	76	27	302	33	108	18	57	6	70	36	42	30	44	6	133	43
19	18	41	30	77	24	316	18	108	56	58	20	70	50	43	41	44	13	133	40
20	18	45	27	78	21	329	52	109	35	59	34	71	4	44	53	44	20	133	37
21	18	49	23	79	18	345	8	110	13	60	47	71	17	46	4	44	28	133	33
22	18	53	20	80	14	356	9	110	51	62	1	71	31	47	16	44	35	133	30
23	18	57	17	81	11	8	51	111	30	63	15	71	45	48	27	44	42	133	27
24	19	1	13	82	8	21	21	112	8	64	29	71	59	49	38	44	49	133	24
25	19	5	10	83	5	33	41	112	47	65	43	72	13	50	50	44	56	133	21
26	19	9	6	84	1	45	51	113	25	66	56	72	26	52	1	45	4	133	18
27	19	13	3	84	58	58	56	114	4	68	10	72	40	53	13	45	11	133	15
28	19	16	59	85	55	69	57	114	42	69	24	72	54	54	24	45	18	133	12
29	19	20	56	86	52	82	0	115	20	71	0	73	8	55	35	45	25	133	[illegible]
30	19	25	52	87	49	94	29	115	58	72	36	73	21	56	47	45	32	133	5
31	19	28	49	88	46	103	1	116	35	74	12	73	35	57	58	45	38	133	2

ஆனி	ஜூலை	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	15	திங்	துதி56-24	திரு32-25	சி32-25அ	ஷடசீதி புண்யகாலம்
2	16	செவ்	திரு60	புன38-24	சித்60	பவானிபூஜா, கல்கிஜயந்தி
3	17	புத	திரு0-36	பூச43-13	சித்60	மாச சதுர்த்தி, சிமந்தம்
4	18	வியா	சது3-35	ஆயி47-24	சி47-24அ	நவக்கிரகசாந்தி செய்ய
5	19	வெள்	பஞ்5-24	மக49-47	ம49-47சி	சஷ்டி விரதம் [தர் குளிக்க
6	20	சனி	சஷ்6-0	பூர51-0	மர60	மாடு வாங்க, வியாதியஸ்
7	21	ஞா	சப்5-23	உத்51-35	அமி60	ஆனித் திருமஞ்சனம்
8	22	திங்	அஷ்3-36	அஸ்51-1	சி51-1பி	கடகாயனம் நா-223
9	23	செவ்	நவ0-36 தச57-0	சித்49-12	சித்60	அவமாகம், எருவிட, வியாதியஸ்தர் குளிக்க
10	24	புத	ஏகா52-16	சுவா46-11	சித்60	சர்வ முகூர்த்தம்
11	25	வியா	து46-47	விசா42-36	சித்60	ராமலக்ஷ்மண துவாதசி
12	26	வெள்	திர40-48	அனு39-0	சி39-0ம	பிரதோஷம், எருவிட
13	27	சனி	சது34-47	கே34-47	சித்60	வியாதியர் குளிக்க
14	28	ஞா	ப○28-48	மூல30-36	அ30-36சி	பௌர்ணமி. ரிஷபபூஜா
15	29	திங்	பிர23-23	பூரா26-25	மர60	
16	30	செவ்	துதி16-48	உத்22-48	அ22-48சி	
17	1	புத	திரு11-23	திரு19-47	அ19-47சி	
18	2	வியா	சது7-12	அவி18-0	சி18-0ம	
19	3	வெள்	பஞ்3-35	சத16-12	சித்60	
20	4	சனி	சஷ்0-36 சப்59-24	பூர15-36	ம15-36சி	
21	5	ஞா	அ58-48	உட்16-12	அமி60	
22	6	திங்	நவ60	ரே18-1	சித்60	
23	7	செவ்	நவ0-2	அசு21-36	சித்60	
24	8	புத	தச2-24	பர25-48	சி25-48அ	கிருத்திகை விரதம்
25	9	வியா	ஏகா6-1	கி✲31-11	மர60	சர்வ ஏகாதசி
26	10	வெள்	து10-12	ரோ37-13	ம37-13சி	பிரதோஷம், வீடு புகுதல்
27	11	சனி	திர15-35	மிரு43-48	சித்60	மாச சிவராத்திரி
28	12	ஞா	சது20-24	திரு50-25	சித்60	போதாயன அமாவாசை
29	13	திங்	●25-11	புன56-24	அ56-24சி	சர்வத்திர அமாவாசை
30	14	செவ்	பிர28-48	பூச60	சித்60	ஆஷாடசுத்தம்
31	15	புத	துதி31-47	பூச1-48	சித்60	சந்திர தரிசனம், ராம ரதோர்லவம்

1942 ஜூலை

	சுக்	புதன் சனி	ரவி குரு
கே	7-ரிஷப-சுக் 20-மிது-புத		அங்
			ராகு

EDITED, PRINTED & PUBLISHED BY N. MUNISAWMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

19952
சென்னை 600 008